
நூல் : 12

# ஒரு கலைஞனின் கதை

மேடைநாடகம்



கலைஞர் கலைச்செல்வன்

# ஒரு கலைஞனின் கதை

- படிப்பதற்கும் நடிப்பதற்குமான ஒரு மேடை நாடகம் -

## கலைஞர் கலைச்செல்வன்

ஞானம் பதிப்பகம்

3-B, 46ஆவது ஒழுங்கை,

கொழும்பு - 06

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **ஒரு கலைஞனின் கதை** (மேடைநாடகம்) |
| நூலாசிரியர் | : | கலைஞர் கலைச்செல்வன் |
| உரிமை | : | புரவலர் புத்தகப் பூங்கா<br>இல, 25, அவ்வல் சாவியா ரோட், கொழும்பு - 14.<br>தொ.பே : 077 4161616, 078 5318503 |
| முதற்பதிப்பு | : | யூலை 2008 |
| அட்டைப்பட அமைப்பு | : | கௌதமன் |
| அச்சிட்டோர் | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்<br>48B, புளுமெண்டல் வீதி, கொழும்பு-13.<br>தொ.பே : 011 2330195. |
| வெளியீடு | : | ஞானம் பதிப்பகம்<br>3B-46ஆவது ஒழுங்கை, கொழும்பு-06<br>தொ.பேசி : 011 2586013, 0777 306506 |
| விலை | : | ரூ 200/= |
| Title | : | **Oru Kalaignanin Kathai** (Stage Play) |
| Author | : | **Kalaignar Kalaichelvan** |
| Copy Rights | : | Puravalar Puthaka Poonga<br>25, Awwal Zavia Road, Colombo - 14<br>T.P : 077 4161616, 078 5318503 |
| First Edition | : | July 2008 |
| Cover Design | : | Gouthaman |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.<br>48B, Bloemendhal Road, Colombo-13.<br>T.P : 011 2330195 |
| Publishers | : | Gnanam Pathippakam<br>3B, 46th Lane, Colombo - 6.<br>T.P : 011 2586013, 0777 306506 |
| Price | : | 200/- |
| **ISBN** | : | **978-955-8354-27-8** |



இந்நாடகத்தை மேடையில் நடிப்பதற்கோ, தொலைக்காட்சி நாடகமாகத் தயாரிப்பதற்கோ நாடகாசிரியரின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

*—நாடகாசிரியர்*

# சமர்ப்பணம்

*நாடகத்திற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த*
*கலைத்தியாகி*
*நடிகவேள்* ***லடீஸ்வீரமணி***
***அவர்கட்கும்...***

*கலைக்காக சுகங்களை இழந்து*
*சோகங்களைச் சுமந்த*
***கலைத்துறை சகாக்களுக்கும்!***

# பதிப்புரை

புரவலர் புத்தகப் பூங்காவின் மாதாந்தம் ஒரு நூல் வெளியீட்டுத் திட்டம் இன்று வெற்றிகரமாக வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த ஒரு வருட காலத்தில் பன்னிரண்டு நூல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு நூலைத் தானும் வெளியிட இயலாமல் கஷ்டப்படும் எழுத்தாளர்களின் நூல்களே இந்த அமைப்பின் மூலம் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு வெளியிடப்படும் நூல்களுக்கு வெளியீட்டு விழாவையும் நடத்தி, நூல் விற்பனையில் கிடைக்கும் பணம் முழுவதையும் எழுத்தாளனுக்கே வழங்கி, நூலின் முந்நூறு பிரதிகளையும் விழா மேடையிலேயே எழுத்தாளனிடம் கையளிப்பது என்பது எவருமே நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத பெரும்பணி. அந்தப் பணியினை புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் வெற்றிகரமாகச் செய்துவருகிறார்.

புரவலரின் இப்பணியினை அறிந்து பல புதிய படைப்பாளிகள் தமது படைப்புக்களை அனுப்பிய வண்ணம் இருக்கிறார்கள். அவை, அமைப்புக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டுத் தரமான படைப்புக்கள் காலக்கிரமத்தில் நூலுருவம் பெறும் என்பதைத் திடமாக நம்பலாம்.

கலைஞர் கலைச்செல்வன் நாடறிந்த நாடகக் கலைஞர், கடந்த அரை நூற்றாண்டுகளாக தமிழ் நாடக மேடையின் வளர்ச்சிக்குத் தலைநகரில் இருந்து அரும்பணி ஆற்றியமைக்காக இலங்கை கலைக்கழகம், தேசிய நாடகசபை, கலாசாரத் திணைக்களம் ஒன்றிணைந்து "முதுகலைஞர்" என்னும் தேசிய விருதை வழங்கி இவரைப் பெருமைப்படுத்தியது. இந்த முதுகலைஞர் பல மேடை நாடககங்களை எழுதி நடித்த போதும் இப்போது தான் அவர் எழுதிய மேடைநாடகம் ஒன்று நூல்வடிவம் பெறுகிறது. "ஒரு கலைஞனின் கதை" என்ற இந்த நாடகம் நடிப்பதற்கு மட்டுமன்றி படிப்பதற்கும் ஏற்றதாக அமைவது இதன் சிறப்பாகும். இந்த முதுகலைஞரை மனப்பூர்வமாக வாழ்த்தி இந்த நூலை வெளிக்கொணர்வதில் மகிழ்வடைகிறோம்.

– தி. ஞானசேகரன்
*பதிப்பாசிரியர்.*
*25. 07. 2008*

*இல: 3-B, 46ஆவது ஒழுங்கை,*
*கொழும்பு – 06.*
*தொ. பே – 011–2586013*

*அணிந்துரை*

# அரங்கேறும் உண்மைகள்!

இலங்கைத் தலைநகரில் அரை நூற்றாண்டு காலம் தொடர்ந்து கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் ஒரே கலைஞர் கலைச்செல்வன் அவர்கள் தான். ஈழத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலம் கலைத்துறையில் பெரும்பணியாற்றியவர்களுள் கலையரசு க. சொர்ணலிங்கம் முதல்வர், இரண்டாமவர் நவாலியூர் நா. செல்லத்துரை, மூன்றாமவர் கலைஞர் கலைச்செல்வன்.

ஐம்பது ஆண்டுகாலம் என்பது மனித வாழ்விலும் சரி, கலை வாழ்விலும் சரி ஒரு சமான்யமான காலம் அல்ல. சாதனைக் காலம். வெறுமனே வருடங்களைக் கழித்து வயதை கடந்து இந்த சாதனைக் காலத்தை எட்டிப்பிடிக்கவில்லை இவர். காத்திரமான கலைத்துறைப் பங்களிப்பு, அர்ப்பணிப்புடனான அரும்பணி, செய்திருக்கும் தியாகம், கொடுத்திருக்கும் விலை, அடைந்திருக்கும் கஷ்ட நஷ்டங்கள், எதிர்கொண்ட சவால்கள், எதிர்பாராத ஏமாற்றங்கள் வேதனைகள், சோதனைகள் இவற்றுக்கு மத்தியில் சாதனைகள். இவைதாம் பொன்விழாக் கலைஞராக இவரைத் தகுதி பெறச்செய்திருக்கிறது.

அறுபதுகளில் இருந்து தலைநகர் நவீன நாடகத்தின் வளர்ச்சியின் வேர்களுக்குள் நின்று அரங்கச் செயற்பாடுகளை ஆளுமையுடன் முன்னெடுத்த, விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களில் கலைஞர் கலைச்செல்வனுக்கு ஒரு தனியிடம் உண்டு.

உள்ளூர்த் தயாரிப்பான அமரர் வி. பி. கணேஷனின் "நான் உங்கள் தோழன்" எனும் தமிழ்ப் படத்தின் திரைக்கதை வசனத்தை எழுதியுள்ள இவரது "சிவப்பு நிறத்தில் ஒரு பச்சைக் கிளி" என்ற சினிமாப் பிரதி இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைப்படப் பிரதியாக்கப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரது மற்றும் இரு சினிமா ஆக்கங்களான "ஆத்மாவின் ராகங்கள்" "மக்கள் என் பக்கம்", ஆகிய இரு திரைப்படப் பிரதிகளையும் முதன்மைப் பிரதிகளாக (ஏ. பிரிவில்) திரைப்படக் கூட்டுத்தாபனம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுகதை சித்திரம் ஊடுருவல், கதம்பம் நாடகம் என வானொலிக்கு பல ஆக்கங்களை படைத்துள்ள இவர் பதினைந்துக்கும் மேற்பட்ட தொலைக் காட்சி நாடகங்களையும்

எழுதியுள்ளார். பல சஞ்சிகைகளிலும் சிற்றேடுகளிலும் இவருடைய பலரக ஆக்கங்கள் பக்கங்களை அலங்கரித்து உள்ளது. கவிதை சிறுகதை நாடக நூல்களில் அர்த்தபுஷ்டியான அணிந்துரைகளையும் எழுதி உள்ள பல்கலைச்செல்வன் இவர்.

இருபதுக்கு மேற்பட்ட மேடை நாடகங்களை இதுவரை இவர் எழுதிக் குவித்து இருந்தாலும், புயலில் ஒரு மலர், எதிர் நீச்சல், மனிததர்மம், சிறுக்கியும் பொறுக்கியும், கொள்ளைக்காரன், ஒரு கலைஞனின் கதை போன்ற சுய ஆக்கங்களையும், தழுவலாக்க நாடகங்களான மராட்டிய நாடகாசிரியர் விஜய் டெண்டுல்காரின் "சக்காரம் பைண்டர்" சிங்கள நாடகாசிரியர் ஜோர்ஜ் சில்வாவின் "டைமன் ராணி" (சீலவதி) போன்ற சிருஷ்டிகள் நாடக வளத்திற்கு அணிசேர்த்த நாடகங்கள் என தயங்காது கூறலாம்.

கொழும்புக் கலைஞர்களின் சுய ஆக்கங்களில் அதிகமாகப் பேசப்படும் ஆற்றுகை "சிறுக்கியும் பொறுக்கியும்" தான். அரங்குக்கு அரசியல் பேசக்கற்றுக் கொடுத்த நாடகமென பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு போன்றோர் இன்றும் இந்நாடகத்தை வியந்துரைக்கிறார்கள் "சிங்களக் கலைஞர்கள் படிக்க வேண்டிய எவ்வளவோ சங்கதிகள் இந்நாடகத்தில் இருக்கிறது" என்று இலங்கை கலைக் கழகத்தின் "மாவத்தை" எனும் சஞ்சிகையில் கலாநிதி சுசில் சிறிவர்தன பதிவு செய்துள்ளார்.

இன்றும் வானொலி, மேடை நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி என எழுதி நடித்து இயக்கிக் கொண்டிருப்பவர். இயங்கிக் கொண்டிருப்பவர்.

கலைச்செல்வனாரின் பேச்சிலும் எழுத்திலும் உள்ள தமிழ் நடை ஒரு தனி நடை. சந்தம் சங்கீதமாய் ஒலிக்கும் சிங்கார நடை அந்த "நா" வுக்கும் "பேனா" வுக்கும் சொந்தக்காரர்கள் தனது தமிழாசிரியர்களான பண்டிதர் க. வீரகத்திப்பிள்ளை, பண்டிதர் த. தர்மலிங்கம், பண்டிதர் அருணாசலம் என அவர் மொழியும் போது மெய்சிலிர்ப்பதும் உண்மை.

எழுத்தை சுவாசிப்பவர்கள் இவரது எழுத்தாணியையும் நிச்சயம் நேசிப்பார்கள் கலைத்துறையைப் போன்று இலக்கியத்துறையிலும் இவர் இரண்டறக் கலந்திருப்பா ரேயானால் இலக்கியப் பரப்பில் ஓர் இமயமாய் உயர்ந்திருப்பார். இவரது எழுத்தாற்றல் நூல் வடிவில் இதுவரை அடையாளப்படுத்தப்படாதது ஒரு துர்அதிர்ஷ்டமே.

கலைச்செல்வன் அவர்களின் பொன்விழா ஆண்டில் புரவலர் புத்தகப் பூங்கா அவருக்கு இரட்டைக் கௌரவம் வழங்கியுள்ளது. ஒன்று வாழ்நாள் சாதனையாளர் என்ற

அடையாளம். அடுத்தது ஒரு படைப்பாளிக்கான அங்கீகாரம். கலைஞர் கலைச்செல்வனுக்கு சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுக் கொடுத்த, அவரது கைவண்ணத்திலேயே உருவான "ஒரு கலைஞனின் கதை" நாடகத்தை நூலுருப் படுத்தியதன் மூலம் புரவலர் ஹாசிம் உமர் தமிழுக்கு மகுடம் சூட்டியுள்ளார்.

இதுவரை ஒரு கலைஞனைப் பார்த்தோம். இனி அந்தக் கலைஞனின் கதையைப் பார்ப்போமா?

புதியன படைப்பதில் அதுவும் புதுமையாய்ப் படைப்பதில் கலைச்செல்வனார் கைதேர்ந்தவர் என்பதை ஒரு கலைஞனின் கதை பறைசாற்றுகிறது. கலைஞர்களை ஒரு சுகானுபவத்திற்கு அழைத்துச் செல்லும் நாடகாசிரியனாகத் திகழ்ந்த கலைஞர் கலைச்செல்வன் முதல் முறையாக ஒரு நூலாசிரியராக முழுவீச்சோட எழுதிருக்கிறார்.

இவரது எழுத்தாற்றல் முழுமையாக வெளிப்பட்டு நூல் வடிவில் வியாபித்து நிற்கிறது. ஒரு கலைஞனின் நகமும் சதையுமான வாழ்வை மனதில் பதியும் வண்ணம் ஒரு கலைப் படைப்பாக்கியுள்ளார். நாடகக் கலைஞர்களின் வாழ்வுண்மையை மிக நேர்த்தியாகச் சித்தரித்து உள்ளார். பாத்திரவார்ப்புகள் யதார்த்தத்தோடு ஒட்டியவை. பார்வை யாளர்களோடு நேரடியாகப் பேசுபவை.

நாடகத்தின் சகல அம்சங்களிலும் பொன்விழாக் கலைஞர் தேர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றுள்ளமையை அவரது ஆற்றுகையின் ஒவ்வொரு காட்சியும் சாட்சியாய் அமைந்துள்ளது. தனது நாடக அனுபவங்களின் பின்னணியுடன் நாடகப் பிரதியை உருவாக்கி உள்ளதால் நாடக நுணுக்கங்களையும் நாம் தரிசிக்க முடிகிறது.

இந்நாடகத்திலே முக்கியமான ஒரு பண்பு முதலிடம் பெறுகிறது. மேடையிலே நடிப்பதற்கென்றே திட்டமிட்டு எழுதப்பட்டிருப்பதே அந்த முதன்மைப் பண்பு. இலக்கியத் தரம் மிகுந்த நாடகப் பிரதிகள் மிக அரிதாகவே காணமுடிகிறது. மேடையேற்றம் என்ற சோதனையிலும் தேறியபடியால் இலக்கியத் தரம் மட்டுமின்றி இன்னும் பல சிறப்பியல்புகளையும் இந்நாடகம் பெற்றிருக்கிறது.

பேசத்தக்க தமிழிலே, நடிப்புக் கலைஞர்களின் வாய்க்குள் நுழையக்கூடிய நடையிலே உலகத்தின் எந்தவொரு பாகத்திலும் வாழும் தமிழ் மக்கள் புரியக்கூடிய மொழிவழக்கிலே

எழுதப்பட்டிருப்பதால் இந்நாடக நூல் காலத்தை வென்ற காவியமாய் நின்று நிலைக்கும் என்பது திண்ணம்.

நாடகம் நவீனமானதாக இல்லையா என்பதை நாடகத்தின் கருவை, மையக் கருத்தை, மூலக்கதையைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். கலைஞர்களின் வேதனையையும் விம்மலையும் கலைப்படைப்பாக சிருஷ்டித்துள்ளமை நவீனத்தின் சிகரம் அல்லவா?

கலைஞர்களின் அப்பட்டமான வாழ்வை அரங்குக்கு துணிந்து அறிமுகப்படுத்தியுள்ள இக்கலைஞானி பாராட்டுக்குரியவர்; பாராட்டப்பட வேண்டியவர்.

'ஒரு கலைஞனின் கதை' நாடகத்தின் நாயகி செளமியா, நாடகத்தின் இறுதியில் செய்யும் சங்கநாதம் இது......

"இனிமேலாவது கலைஞர்களை வாழ வைக்கிறதுக்காக வகையான திட்டங்கள் தீட்டுங்க. முறையான கூட்டம் போடுங்க. துணிவான கோஷம் எழுப்புங்க. அப்படி இல்லேன்னா....

*மேடையே ஒரு பாடையாகிடும்.*
*பொன்னாடையில் எல்லாம் பிணவாடைதான் வீசும்.*
*அதனால.. சாபங்களை வரமாக்க சபதம் எடுங்க."*

புரியக் கூடியவர்களுக்குப் புரிந்தால் சரி.

உண்மையிலேயே முது கலைஞர் கலைச்செல்வன் ஒரு போராளிக் கலைஞன் தான்.

– கலாபூஷணம்
செல்வத்தம்பி மாணிக்க வாசகர்
*சிரேஷ்ட ஊடகவியலாளர்*

*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

*என்னுரை*

# கதை பிறந்த கதை!

இலங்கைத் தலைநகரில் கடந்த ஆறு தசாப்த காலங்களில் தொண்ணூறுக்கு மேற்பட்ட கலைஞர்கள் நாடகங்கள் எழுதி இருக்கிறார்கள். அவர்களின் பட்டியல் என்னிடம் உண்டு. அந்நாடகாசிரியர்கள் அவர்களின் அனுபவப் போக்கில், அவர்களுக்கு இருந்த நாடக அறிவோடு தங்கள் எழுத்துருக்களை நாடக அரங்குக்கு அறிமுகம் செய்தார்கள்.

அவ்வாற்றுகைகளில் இலக்கணம் இருந்ததா, இலக்கியம் இருந்ததா என்ற ஆய்வு அவசியமில்லை. நம்மில் பலரும் நாடகம் எழுதுவதற்கு ஓர் உந்து சக்தியாக இருந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. நாடகத் தன்மை வாய்ந்த - தரம் வாய்ந்த பிரதிகளை இன்றைய நாடகப் படைப்பாளிகள் எழுதுவதற்கான ஆதார சுருதிகள் அவர்கள்தான்.

அவர்கள் முகமறியா பிரமாக்களாகவோ, முகவரியில்லா மனிதர்களாகவோ இருக்கலாம் அவர்களின் அர்ப்பணிப்புக்களும், இழப்புகளுமே எமது ஆளுமைகளின் ஆணிவேராய் இருக்கிறது என்பதை எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை எனவே... எழுத்தறிவித்த அந்த 'மகான்'களில் பாதக்கமலங்களுக்கு நன்றி மலர்களை முதலில் காணிக்கை ஆக்குகிறேன்.

திராவிட இயக்கத்தின் எழுச்சியும், அவர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகளும், பயன்படுத்திய எழுத்தும், பேச்சு நடைகளும் இங்குள்ள தமிழ் பேசும் மக்களை பெரிதும் கவர்ந்தது. அவைகள் இலங்கை முழுவதும் வியாபித்து இருந்தது. இதன் காரணமாக தி.மு.க.வின் பிரச்சார நாடகங்களான பரப்பிரம்மம், நச்சுக் கோப்பை, மணிமகுடம், தூக்குமேடை போன்ற நாடகங்கள் கலையார்வம் மிக்க இளைஞர்களின் இதயங்களைத் திருடிக் கொண்டன. நம்மவர்களின் நாடக முனைப்புக்களிலும் திராவிட இயக்கத்தின் தாக்கங்களே மேலோங்கி இருந்தது. அதற்கு நான் மட்டும் விதிவிலக்கா என்ன?

என் தந்தையார் இயக்கத்தில் அரங்கேறிய 'மரணத்தின் மடியிலே' என்ற நாடகமே நான் எழுதிய முதல் நாடகம். அதனைத் தொடர்ந்து "திருந்தியவன் தீயவனா?", 'நீயா', 'எதனைக் கண்டான்' போன்ற நாடகங்களை எழுதினேன்.

அறுபதுகளின் ஆரம்ப காலங்களில் அரங்கக் கல்லூரிகளோ, பயிலகங்களோ இருக்கவில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இந்நாடகங்களில் தி.மு.க.வின் நாடகச் சாயல் இருந்ததே தவிர திரைப்பட சாயம் இருக்கவில்லை. அதே சமயம் என் பார்வை சிங்கள அரங்கு நோக்கி விரிந்தது. சிங்கள மேடையின் விற்பன்னர்களாக விளங்கிய தயானந்த குணவர்தன, தம்மா ஜாகொட, சுகதபால, டி.சில்வா போன்றோரின் ஆற்றுகைகள், அறிவு சார்ந்த கலையாக அரங்கியலை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை எனக்கு வலியுறுத்தியது.

அடுக்குச் சொற்களின் அழகில் வாழ்ந்தும், சொற்சிலம்பம் எனும் சௌந்தர்ய போதை லாகிரிக்குள் வீழ்ந்தும் இருந்த என்னை விடுவித்துக் கொண்டு ஒரு நாடகப் படைப்பாக்கத்தின் ஆழ்ந்த நோக்கத்தைப் பற்றிய தேடலில் மூழ்கினேன். அதன் பயனாகக் பிரசவித்தவை தான், சம்பவங்கள் அனைத்தும் ஒரு "செட்டி"லேயே அமைந்த (One Set Play) புயலில் ஒரு மலர், எதற்கும் ஓர் எல்லை, எதிர் நீச்சல்.

இந்நேரத்தில் தான் என் கலை வாழ்க்கையில் இன்னுமொரு திருப்புமுனை ஏற்பட்டது. அதற்கு வித்திட்டவர் அறிஞர் அ.ந. கந்தசாமி அவர்கள். எனது எதிர்நீச்சல் நாடகத்தைப் பார்த்துவிட்டு, "நாடகம் பற்றி அறிந்திருக்கிறாய் நாட்டு நடப்பைப் பற்றியும் அறிய வேண்டும். சமூக சூழல்களை அரங்க முகங்கள் பிரதிபலிக்க வேண்டுமாயின் யதார்த்தம் உணர்வு பூர்வமாக பேசப்படல் வேண்டும். எதிர் நீச்சல் நாடக முடிவு முற்போக்குச் சிந்தனையில் முகம் பார்த்திருந்தால் என் படைப்புக்கள் உன் பாதங்களுக்கு சமர்ப்பணம்" - என்றார். என் பார்வை அவர் பாதங்களுக்கு மரியாதை செய்தது.

அவரது அறிவுரைகள் என் சிந்தனைக்கு சிறகு கட்டியது. யதார்த்தம் - பிரத்யட்சம் இரண்டையும் நேர்கண் கொண்டு பார்க்கிறேன் என் குருஷேத்திரம் மண்ணில்தான் விண்ணில் அல்ல என்பதை உணர்கிறேன். எதிர்நீச்சல் மனிததர்மம் எனும் பெயரில் மறுஅவதாரம் எடுக்கிறது. தினகரன் தமிழ் நாடக விழா 1969 இல் அதற்கு ஆறு விருதுகள். நடுவர்களாக இருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் எஸ். தில்லைநாதன் ஆகியோரின் தீர்ப்பே ஆறு விருதுகளுக்குக் காரணமாகியது. அவ்விருதுகளை விட அவர்களது தீர்ப்பே வஷிஸ்ட முனிவரின் வரங்களாக என் இதயத்தை வருடிக் கொடுத்தது.

ஏழாவது விருதும் எனக்குத்தான். ஆனால் அது எட்டாக்கனி ஆனது. இன்னுமொரு நடுவராக இருந்த இஸ்லாமிய நுண்கலை மஜ்ஹிஸின் தலைவர் எஸ்.எம். கமாலுத்தீனுக்கு முஸ்லிம் சமூகத்தின் மீதிருந்த நேசம் அதற்குத் தடைபோட்டது. ஆனாலும் எனக்குள் ஒரு பெருமிதம். அறிஞர் அ.ந.க.வின் 'மதமாற்றம்' சாதிக்கட்டுப்பாடுகளுக்கு எதிரானது; எனது 'மனித தர்மம்' மதக் கோட்பாடுகளுக்குப் புதிரானது. விருது கிடைக்காவிட்டாலும் இது எனக்கு ஆத்ம திருப்தியை அளித்தது.

இக்கால கட்டத்தில் 16 எம்.எம். இல் 'அன்றில் பறவை' எனும் திரைப்படத்தை தயாரிக்கும் முயற்சியில் நானும் நடிகவேள் லடிஸ் வீரமணியும் ஈடுபட்டோம். திரைப்படப்

பிரதியை எழுதும் பொறுப்பு என்னிடம். அதற்கான ஆலோசனைகளை பெறும் பொருட்டு நடிகவேளும் நானும் அறிஞர் அ.ந.க.வை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது.

இந்தச் சந்திப்புகள்தான் மெக்ஸிம் கோர்க்கி, ஸ்ரெனிஸ் லோஸ்க்கி, ஷேக்ஸ் பியர் போன்ற நாடக மேதைகளின் ஆற்றுகைகளையும், மேலை நாட்டு நாடக அரங்குகளின் சென்னெறிகளையும் எனக்குள் பதியம் போட்டது உலக நாடக அரங்கு நோக்கி நான் பயணிக்க ஆரம்பித்தேன். வாசிப்பும் தேடலும் என் வழிகாட்டிகளாயின.

பார்வையாளன் வெறும் சொற்களுக்குள் சுகம் காண விரும்புவதில்லை. மாறாக வாழ்வியலை வாழ்ந்து காட்டுவதையே காண விழைகிறான் என்பதை புரிந்து கொண்டேன்.

'சிறுக்கியும் - பொறுக்கியும்' என் சிந்தனையில் கருத்தரித்தது. தேசிய நாடக விழா - 1975 இல் அது பிரசவமானது. என்னை உச்சத்தின் உச்சிக்குக் கொண்டு சென்ற நாடகம் மெக்ஸிம் கோர்க்கியின் பாணியில் அமைந்திருந்ததாக ஆங்கிலத் தினசரி ஒன்றில் திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் பதிவு செய்திருந்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும், பேராசிரியர் மௌனகுரு அவர்களும் பெரிதும் வியந்துரைக்கும் சுய ஆக்கம் இது.

எண்பதுகளுக்குப் பின் மராட்டிய எழுத்தாளர் விஜய் டெண்டுல்காரின் 'சக்காரம் பைண்டர்', சிங்களக் கலைஞர் ஜோர்ஜ் சில்வாவின் 'சீலவதி' போன்ற நவீன நாடகங்களை சக்காராம் டைமண்ராணி என்ற பெயரில் தமிழுக்கு அறிமுகம் செய்தேன். தலைநகர் தமிழ்க் கலைஞர்களின் தழுவலாக்க நாடகம் பற்றி தனியான ஓர் அத்தியாயம் உண்டு. அதைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன்.

நேற்றைய என் படைப்புகளுடன் இன்று நான் சண்டை போட்டுக் கொள்கிறேன். அது அறிவின் பிரவேசம்; இது அனுபவத்தின் பிரசவம். இன்று திருத்தி எழுதப்படுபவை கூட நாளை அழித்து எழுதப்படலாம். அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதுவே என் முதிர்ச்சியின் முதுசம்.

மீண்டும் சுய ஆக்கத்தில் சுகம் காண விழைகிறேன்.

காகிதத்தில் கலை வளர்க்கும் கலாநிதிகளாக இல்லாமல், கலையே உணர்வாகவும் - உயிர் மூச்சாகவும் கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொண்ட கலாநதிகளைக் கண்டு உருகினேன். கருகினேன். அவர்களையே கருவாக்கினேன்; நாடகமாய் உருவாக்கினேன். அதற்கு ஒரு கலைஞனின் கதை எனப் பெயரிட்டேன்.

இதிலே வரும் ஐந்து முக்கிய கதாபாத்திரங்களும் நம்மோடு வாழ்ந்தவர்கள், வாழ்ந்து மறைந்தவர்கள். கலையரசு க. சொர்ணலிங்கம், நடிகவேள் லடிஸ் வீரமணி, கலைவேந்தன் ஸ்ரீசங்கர், நடிகமணி கே. ஏ. ஜவாஹர், கலாபூஷணம் டீன் குமார் ஆகியோரின் கூட்டுக் கலவைதான் கலாஜோதி சண்முகம் எனும் பாத்திரப் படைப்பு. இப்பாத்திரத்தில் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதும் நிஜம்.

சௌமியாவின் பாத்திர வார்ப்பிலே நேசராணி, மணிமேகலை, ரோஹினி போன்ற நடிகைச் சகோதரிகளின் பங்களிப்பும் உண்டு. கலாபிமானி செந்தில்நாதன், நடிகர் சந்திரன், கிளிஜோஷ்யக்காரன் போன்றவர்கள் இன்றும் நம்மிடையே உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்னைச் சுற்றி இருந்த - இருக்கிற கலைஞர்களின் வாழ்க்கைதான் இப்படையலின் கருவறை.

பல பாத்திரங்களில் நடிப்பதற்கு நான் ஒப்பனை செய்து கொண்டிருக்கிறேன் என் படைப்பில் வடிப்பதற்கு நான் வார்த்தெடுத்த பாத்திரங்களுக்குப் பவுடர் கூட பூசவில்லை.

சமூக பொருளாதாரப் பாதிப்புகளால் சவச்சாலைகளாக ஆகிக்கொண்டிருக்கும் நமது கலைஞர்களின் வாழ்வு தவச்சாலைகளாக மாற வேண்டும் என்பதற்காக ஒரு கலைஞனின் கதை எனும் இவ்வாற்றுகையில் அதற்கான வித்துக்களை விட்டு வைத்திருக்கிறேன். விதைகளை நட்டு வைத்திருக்கிறேன்.

இது என் கரங்கள் பிரசவித்த வரங்கள்!

இந்த வரங்களை வரலாற்றுப் பதிவுகளாக்கிய பெருமை புரவலர் புத்தகப் பூங்காவுக்கே உண்டு. என் வேர்களுக்கு ஒரு விலாசத்தைக் கொடுத்திருக்கிறார் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்கள்.

தமிழ் கலை இலக்கியப் பரப்பை கோமேதகச் சாரலாக குளிர்விக்கிறது ஹாசிம் உமர் எனும் இராஜங்கம். இது புரவலருக்கு இறைவன் கொடுத்த கொடை; இயற்கை அளித்த நன்கொடை.

இல்லை இந்த யுகத்தில், இவருக்கு நிகராக இன்னுமொரு புரவலர்!
அல் ஹம்து லில்லாஹ்!

— பொன்விழாக் கலைஞர்
**கலைச்செல்வன்**


**மஷாஹிமா மன்ஷில்**

*ஈ/ஜீ/02, தொடர்மாடி,*
*ஸ்டுவர்ட் வீதி, (விதானகே மாவத்த)*
*கொழும்பு – 02. – ஸ்ரீலங்கா.*

*தொலைபேசி :– 0112 – 304071*
*கைபேசி : 0774 – 161616*

# ஒரு கலைஞனின் கதை

– படிப்பதற்கும் நடிப்பதற்குமான ஒரு மேடை நாடகம் –

## கதாபாத்திரங்கள்

கலாஜோதி சண்முகம்
கலைப்பேரொளி சௌமியா
பேச்சாளர் இரா. செழியன்
நடிகர் சந்திரன்
கலாபிமானி செந்தில்நாதன்
கிளி ஜோஷ்யக்காரர்
வழிப்போக்கன்
ஒரு இளம் ஜோடி

1998 ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய அரச நாடகவிழாவில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்ட போது மேல் காணும் பாத்திரங்களில் தோன்றி நடித்தவர்கள் .....

கலாபூஷணம் கலைச் செல்வன்
கலைச் செல்வி மணிமேகலை இராமனாதன்
சமூகஜோதி எம். ஏ. றபீக்
எஸ். மாணிக்கம்
எம். செல்வம்
ஏ. வீரபுஷ்பநாதன்
ஆகியோர்.

கதை – வசனம் – இயக்கம்

**கலைஞர் கலைச்செல்வன்**

# காட்சி: ஒன்று

இடம் : கலை அரங்கம்

நேரம் : மாலை

(கலாஜோதி சண்முகத்தின் நினைவாஞ்சலி கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளர் இரா. செழியன் உரையாற்றுகிறார்)

இரா. செழியன் : அமைச்சர் அவர்களே! அருமைக் கலைஞர்களே! பெரும் திரளாய் கூடியிருக்கும் பெரியோர்களே! முதற்கண் எனது வணக்கம். கலாஜோதி சண்முகம் அவர்களின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்ற வாய்ப்பளித்த கலைஞர் நற்பணி மன்ற நிர்வாகிகளுக்கு என் நன்றிகள் உரித்தாகுக. கலாஜோதி சண்முகம் அவர்கள் ஒரு பிறவிக் கலைஞர் நம்நாடு செய்த புண்ணியத்தால் கிடைத்த தவக்கலைஞர். அவர் மரபுவழி நாடங்களை கைப்பிடித்தார். புராண இதிகாச வரலாற்று நாடகங்களோடு கைகோர்த்துக் கொண்டார். நவீன நாடகங்களுடன் கை குலுக்கினார். அவரது கண்களில் நவரசம் கருத்தரித்தது. அங்கத்தின் அசைவினில் நாடகம் பிறந்தது அவர் மேடையில் பேசினால் சர்க்கரைப் பந்தல்; பாடினாலோ தேன்மழை. கலாஜோதி சண்முகம் அவர்கள் மறைந்துவிட்டதாகக் கூறினார்கள், எனக்கு முன்னால் பேசியவர்கள்; அதை நான் மறுக்கிறேன். கலாரசிகர்களின் உதடுவீதிகளில் அவர் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார். எனவே உலகம் உள்ளளவும் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

எனக்கு இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது. சங்கரதாஸ் சுவாமிகளின் சத்தியவான் சாவித்திரி நாடகம். நமது கலாசார பாரம் பரியங்களுக்கு பெருமை தேடித்தரும் அந்தக் கூத்திலே கலாஜோதி சண்முகமும்

கலைப்பேரொளி சௌமியாவும் இணைந்து நடித்த அந்த நடிப்பு இன்னும் என் கண்களில் நர்த்தனமாடுகிறது. தன் கணவனின் உயிரை மீட்டு சாவித்திரி தீர்க்க சுமங்கலி ஆகும் அந்தக் காட்சி... ஆஹா...!

திரை விலகுகிறது

## காட்சி: இரண்டு

## தீர்க்க சுமங்கலி – ஓரங்க நாடகம்

இடம் : கலை அரங்கம்
நேரம் : இரவு

(எமனாக சண்முகம் - சாவித்திரியாக சௌமியா)

(இசை பயங்கரமாக ஒலிக்கிறது. புகை மண்டலத்தின் மத்தியில் எமன் அமர்ந்திருக்கிறார். எமனின் மீது ஒளி பரவுகிறது)

எமன் (பாடல்) : விண்டலமும் மண்டலமும்
எண்டிசை அடங்கிலும்
விளங்கு தீதி
மார்க்கம் எடுப்பேன் – நல்ல
வேத விதிப்படி
தானே நடப்போரை
மேலுலகம் விடுப்பேன்
(இசை)

(பாடல்) நெறிகெட்ட துஷ்டர்களை கட்டி வந்து
நரகத்திலே விடுப்பேன் – உயிர்
வேதனையதிகம் கொடுப்பேன், இன்னும்
மேலும் மேலும் பாவிகளைக்
காணக் கடும் கோபமாகி – வெவ்
வேறாக்கினையும் கொடுப்பேன்
(இசை)

(பாடல்) நாடுமிடு நாலு திசை
ஆளுகிற பாலகனின்

நானொருவனாக எனையே
கற்கைச் சடைகடவுள்
தெற்குத் திசையரசு
நந்திக் கொடுத்தபடியே
நீருமொரு சூலமொடு
பாசமுயர்வான கதை
நேரு படையாக எதிரே
நீட்டிச் சுழட்டி உயிர்
வாட்டிப் பிடித்துடலை
நீக்கிப் பிணைத்தனையே
(இசை)

(பாடல்) கோடுபவ கோடுபவ மேலுபர மேவுமொழி
கூறுமென தாணை மொழியே
குத்திப் பிடித்து கிழித்துச் சிதைத்து
வதைத்துப் பிடித்திடுவனே....
(பயங்கரமாய் சிரிக்கிறான்)

எமன் (வசனம்) : நான்கு வதனங்களுடைய பிரம்மாவினால் ஆக்கப்பட்ட நாலுவகை யோனி, ஏழுவகைத் தோற்றம், எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகளையும் ஆதாரமாகக் கொண்டு – இரு வினைகளுக்கு ஒப்பதாம் அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி, நன்மை தீமைகளை கஷ்ட சுகங்கள் மூலம் கொடுத்து வருகிறேன்.

சங்காரக் கர்த்தனாகிய சிவபெருமான் எனக்கிட்ட கட்டளைக்கு அடி பணிந்து – லாலாய வயம், பூவால சக்கரம், முற்பீப்பாய் அட்டைக்குழி, அரணைக்குழி, புழுக்குழி, அக்கினிக் குண்டம், ஹஹ்ஹஹ்ஹா.... பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தம்பம் ஒஹ்ஹஹ்ஹோ.... சதை, சூலம், பாசம், பிண்டி, கண்டக்கோடாலி, கும்பிப்பாய் முதலான ரகங்களையும் – தேள், பூராண், செயான், பாம்பு போன்ற விஷச்சந்துக்கள் கூடிய திமிரப்படலஸ் தானங்களையும் – பன்றி, சிங்கம், கரடி, ஓநாய் முதலிய சிருங்காரர்களையும் சகாயமாகக் கொண்டு

– எனது இராச்சிய பாரத்தை மிக நீதியொடு காப்பாற்றி வருகிறேன்.

இதில் சற்றேனும் நான் நியாயம் தவறி நடப்பேனேயானால் ஆசனத்திற்கு மேலே, என் தலைக்கு மேலாக கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். பர்வதமானது – அறுந்து – என் சிரசில் விழுந்து – ஆசனத்தின்கீழ் தகத்தகாயமாய் சுவாலை வீசிக்கொண்டிருக்கும் அக்கினியாற்றில் விழுந்து – எரிந்து – சாம்பலாகி விடுவேன்.
(இசை – காட்சி மாற்றம்)
(கானகத்தில் தலை விரிகோலத்தில் சாவித்திரி)

சாவித்திரி : (அழுதுகொண்டே) இறந்துபோன என் கணவரின் உயிரை எப்படியும் மீட்டே தீருவேன். கைலாய நாதனே... வைகுந்த வாசனே... கற்புடை குலமாதர் திருமாங்கல்யத்தின் மகிமையை அகிலத்தார் அறிவதற்கு எனக்குத் திருவருள் புரிவாய் ஜெகதீசனே! என் நாதன் உயிர் கவர்ந்த மாகானுபவன் யாராக இருந்தாலும் என் கண்களுக்குத் தெரியட்டும்; என் முன் காட்சி அளிக்கட்டும்...

(எமதர்மன் அவள் எதிரில் தோன்றுகிறான்)

சாவித்திரி (பாடல்) : திவ்விய புருஷன் நீர் யார்...?

எமன் (பாடல்) : தென்திசை தர்மன் என் பேர்...

சாவித்திரி : இவ்விடம் வந்த தேனோ...
எமன் : இவனுயிர் பற்றினேன் பார்

சாவித்திரி : இவர் எனதொரு பதி
உயிரினை விட்டிடுவாய்

எமன் : எதிர்மொழிவது சரியிலை
இனி எட்டிடுவாய்

சாவித்திரி : மெய்யாய் மிகவும் நொந்தேன்

எமன் : வையாது உயிர் கவர்ந்தேன்

சாவித்திரி : ஐயா! பாதம் பணிந்தேன் நான்
(சாவித்திரி காலில் மண்டியிடுகிறாள்;
எமன் மறைந்து விடுகிறான்)

சாவித்திரி (வசனம்) : ஆ... அதற்குள் மாயமாய் மறைந்து விட்டாரே... எங்கே மறைந்தால் என்ன? என் பதியின் உயிரை மீட்டியே தீருவேன்.
(இசை)
(எமன் வேகமாய் போய்க்கொண்டிருக்க... சாவித்திரி பின்னால் ஓடி வருகிறாள்)

சாவித்திரி : (வந்து கொண்டே) சுவாமி.. சுவாமி.. சற்றே நில்லுங்கள்; (எமன் நிற்கிறான்)

எமன் : என்னைப் பின் தொடர்ந்து வந்துவிட்டாயே?

சாவித்திரி : எனக்குத் தாலிப்பிச்சை தாருங்கள் சுவாமி!

எமன் : பேதைப் பெண்ணே! எவர் வரினும் – எது தரினும் என் முடிவு முடிவேதான் கறந்த பால் மடியேறும் கதை உளதோ ... செப்பிடுக...

சாவித்திரி (பாடல்) : எம தர்ம ராஜா.. என் நாதன் உயிர் தாரும்...

எமன் (பாடல்) : ஈதென்னால் ஆகுமோ...

சாவித்திரி : வேதனை தீருமோ

எமன் : இவ் வாதிடும் வேளையில் என் ஆணையை மேவிடு

சாவித்திரி : எம தர்ம ராஜா என் நாதன் உயிர் தாரும்

எமன் : ஆயுளுமே முடிவானதினால் – அவன்
ஆணையை மீறிடலாமா

சாவித்திரி : மணவாளனுமாகிய நாயகன் ஆருயிர்
மாளவும் வாழ்ந்திடலாமா....

சாவித்திரி : நானென்ன செய்யலாம்....

சாவித்திரி : நீர் தயை செய்யலாம்

எமன் (வசனம்) : பெண்ணே! என் பாசக்கயிறு வேதத்திற்கு உட்பட்டது. அதனிடத்தில் பேதத்திற்கு இடமில்லை அறிவாய்.

சாவித்திரி (பாடல்) : நாயகன் மாள
நேருமே யானால்
மாதர்கள் வாழ
ஆகுமோ பூமியிலே
அதனால் எனையும்
அவர் போமிடம்
கொண்டு செல்லும்

எமன் (பாடல்) : உன்னாயுள் தீர்ந்திடும் அந்நாளிலே
உன் உயிர் கொண்டு போவேனே...
நெறி மாறானே... கேளாய்... (உண்ணாயுள்)

சாவித்திரி (வசனம்) : சுவாமி! நீங்கள் ஏது சொன்ன போதிலும் என் பதியின் உயிரை மீட்காமல் உங்களை விட்டு அகலப் போவதில்லை

எமன் : மாதுசிரோன்மணி! உன் மணவாளன் உயிர் மட்டுமல்ல. எந்த மன்னவன் உயிரானாலும் எடுத்ததை மீண்டும் கொடுத்தறியேன் சர்வலோகத் திலுமுள்ள சகல சம்பத்துக்களையும் கேள் தருகிறேன், சத்தியவான் உயிரை மட்டும் கேட்காதே...

சாவித்திரி : சிரம பரிகாரம் காணும் யுக்தி அல்லவே சுவாமி...

எமன் : கள்ளத்தனமென்பது கிஞ்சித்தும் அறியாத – வெள்ளை மனத்தவன் என்பதனாலேயே வெண்ணீறு பூசி இருக்கிறேன்; வேண்டுமானால் வெள்ளை நீர்ச்சடையனார் மீதாணையாகத் கூறுகிறேன். வேண்டிய மூன்று வரத்தினைக் கேள்...

சாவித்திரி : அப்படியானால் நாம் இழந்த நாடுநகரம் அத்தனையும் எம் வசமே ஆக வேண்டும்.

எமன் : ஈந்தேன் வேண்டிய ஒரு வரம்

சாவித்திரி : சுவாமி! தேவர்கள் அமுதத்திற்காக கடைந்த பாற்கடலைப்போல் ஜொலிக்கும் எம் நாடு நகரங்களை கண்ணில்லாது காண்பதெங்ஙனம்...?

எமன் : புதிர் வேண்டாம்... புரியும்படி பகர்வாய்

சாவித்திரி (பாடல்) : கண்ணில்லா பெற்றோர் உண்ணுதற்காக
காய்கனி கொள்ள காட்டுக்கென்னோடு வந்தார்
கதியார்... முதியோர்களைக் காக்க ஒருவருமில்லை

சாவித்திரி (வசனம்) : அந்தகார இருளில் தவிக்கும் என் மாமனாரும் மாமியும் கண்ணொளி பெறவேண்டும், அதற்கு நின் கருணை வேண்டும்.

எமன் : கவலை வேண்டாம் கற்புக்கரசி! கண்ணொளி பெற்றவர்கள்... ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உச்சாடனம் செய்யும் காட்சியினை அதோ ... பார்...

(மகிழ்ச்சியோடு சாவித்திரி திரும்பிப் பார்க்கையில் எமன் போய் விடுகிறான்)

சாவித்திரி : அதற்குள் மறைந்து விட்டாயா? எமதர்மா என் ஏக்கம் பலித்தது; ஆனால் நோக்கம் பலிக்கவில்லை.
(இசை – ஒளி மங்கி மீண்டும் பரவுகிறது)

(எமன் வேகமாய் போய்க்கொண்டிருக்க அவனைப் பின் தொடர்ந்து வருகிறாள் சாவித்திரி)

சாவித்திரி (பாடல்) : மாங்கல்யம் இல்லா
மாதர்கள் வந்தால்
பாங்கிலே உள்ளோர்
பாவசகுன மென்பார்
பதிபோய் உயிர் வாழ்தல்
பாரில் அவதியன்றோ

எமன் (வசனம்) : இன்னும் ஏன் என்னை தொடர்கிறாய். இரண்டு வரங்கள் தான் கொடுத்துவிட்டேனே.

சாவித்திரி : மூன்றாவது ஒன்றும் மீதமிருக்கிறதே சுவாமி!

எமன் : என்ன அது... எடுத்தியம்புக..?

சாவித்திரி : மூலியாதல் பாவையர் விதியென்றால்... மலடியாதல் சதியன்றோ...

எமன் : அதாகப்பட்டது...?

சாவித்திரி : நீரில்லா நிலமெதற்கு; நிலாவில்லா வானெதற்கு; மக்களில்லா வீடெதற்கு மன்னனில்லா நாடெதற்கு..?

எமன் : சுற்றி வளைக்காதே சுருக்கமாய் செப்பிடுக...!

சாவித்திரி : எனக்குத் தாய்மைப் பேறு வேண்டும். என் வம்சம் தழைக்க ஒரு வாரிசு வேண்டும்.

எமன் : தந்துவிட்டேன் போ...
(சாவித்திரி மகிழ்ச்சியில் திளைக்க எமன் மறைந்து விடுகிறான்)

சாவித்திரி : என் நோக்கம் நிறைவேறாமல் பின் வாங்க மாட்டேன்; ஈரேழு உலகமானாலும் உன்னைப் பின் தொடர்வேன். (பின்னால் போகிறாள்)
(இசை)
(சாவித்திரியை வராமல் தடுக்க எமன் அக்கினி ஆற்றை ஏவுகிறான்)

சாவித்திரி : ஆ! அக்கினி ஆறா....? ஆதிநாயகனே! பரம்பொருளே! கருணைக்கடலே திரிபுரத்தையும் எரிக்கும் சக்தி திருமாங்கல்யத்துக்கு உண்டென்பது உண்மையானால் இக்கொடுங்கனல் குளிர் நீராய் மாறட்டும். இச்சுடுநெருப்பின் ஜுவாலை சுகந்தரும் தென்றலாகட்டும். எங்கே என் புனிதம்...? எங்கே உன் மகிமை? எங்கே என் பக்தி? எங்கே உன் சக்தி...?
(தீ அணைகிறது)

(அதனைக் கடந்து செல்லும் போது எமனின் கோட்டைக் கதவுகள் மூடப்பட்டுள்ளது.)

சாவித்திரி (பாடல்) : முக்கோட்டை வல்லவர்கள் முரண்டு செய்ய
முன்னவரின் வலியடக்க முயன்றதாலே
இக்கோட்டை மார்பிலும் கையிலும் தாமேந்தி
அரண்பூமி ரதம் ஊர்ந்து அழித்த சேதி
இக் கோட்டை படை விலங்கள் உண்மையானால்
சேயிழையால் என் கற்பின் மகிமையாலே
இக்கோட்டை கதவுதிறந்திடுதல் வேண்டும்.
எமனிடம் போய் கேள்வி இசைப்பேனே

(கோட்டை கதவுகள் தானாகத் திறக்கின்றன. எங்கும் ஒரே புகை மண்டலம் அதன் மத்தியில் எமதர்மன் காட்சி அளிக்கிறான்.)

எமன் (வசனம்) : தடைபல கடந்து என் இராச்சியத்துக்குள்ளும் நுழைந்து விட்டாயா...? நீ கேட்டதையெல்லாம் தான் கொடுத்து விட்டேனே... இனி தருவதற்கு ஒன்றுமில்லை. உன்னால் பெரும் தொல்லை.

சாவித்திரி : கேளுங்கள் என் சொல்லை...! உங்கள் வார்த்தையிலே எனக்கொரு சந்தேகம் சுவாமி.

எமன் : சந்தேகமா...? என் வார்த்தையிலா...? எப்படி... எப்படி... என்ன சந்தேகம்? எடுத்துரைப்பாய்....!

சாவித்திரி (பாடல்) : வித்தில்லா சம்பிரதாயம்
மேலுமில்லை கீழுமில்லை
சத்தியம் எனும் வேதம்
தனயனைப் பெறுவாய் என்றீர்
கர்த்தனே அன்பனான
கணவனில்லா ஒர் மாது
புத்திரன் பெறுவதுண்டோ
புகன்று ஐயம் நீக்குவீரே

எமன் (வசனம்) : ஆஹா... அறியாமையால் மோசம் போனேன்; அவசரத்தில் மதியிழந்தேன். உன் மாங்கல்ய பாக்கியத்தின் பெருமையே பெருமை. மாதரசி! மணவாளன் உயிர் தந்தேன்; நீ தீர்க்கசுமங்கலி மகவுதனைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வீராக..

(சாவித்திரி தன் கணவனின் உயிரை மீட்ட மகிழ்ச்சியில் திளைக்கிறாள்)

(இசை – ஒளி மங்குகிறது)

திரை மூடுகிறது.

## காட்சி: மூன்று

இடம் : ஒப்பனை அறை
நேரம் : இரவு

(சண்முகம் சௌமியா இருவரும் ஒப்பனையை கலைத்துக் கொண்டிருக்கிறார்கள் விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் வருகிறார்)

சண்முகம் : அடடே நீங்களா? வாங்க சார்... வாங்க... சௌமியா! யாரு வந்திருக்காங்கன்னு பார்த்தியா...?

சௌமியா : யாரு... சிவகுமாரன் சாரா...! வணக்கம்... உங்களைப் போல உள்ளவங்க எங்களைப் பத்தி பத்திரிகைகள்ல எழுதுற எழுத்துதான் எங்க ஆத்மாவுக்கு தீனியா அமையுது.

சண்முகம் : ஏன் சார்... இப்போ எல்லாம் இந்த பத்திரிகைகள்ல எங்களைப் பக்தி அடிக்கடி எழுதுறாங்க இல்லையே... அதுக்கு என்ன காரணம்? ஒஹோ... நீங்க சிரிக்கிற சிரிப்பு எனக்குப் புரியுது... பாடி நடிக்கிறவங்களை விட ரெகார்ட் டான்சுக்குத்தானே இப்போ மவுசு அதிகம்.
(நடிகவேள் லடிஸ்வீரமணி வருகிறார்)

சௌமியா : நூறு ஆயுசு உங்களுக்கு! நாடகம் பார்க்க வந்தா நடிகர்களை சந்திக்காம போகமாட்டரே லடிஸ் அண்ணேன்னு இப்போதான் மனசுக்குள்ள நினைச்சேன். அதுக்குள்ள வந்திட்டீங்க.

சண்முகம் : வணக்கம் அண்னேன்... மொதல்ல ஆசீர்வாதம் பண்ணுங்க.
(ஆசிபெறுவதற்காக இருவரும் மண்டியிடுகிறார்கள்)
நாடகம் எப்படி இருந்தது அண்ணேன்...?

சௌமியா : ஆமா... எங்கேயாவது ஒரு கொறை கண்டுபிடிக்கலேன்னாதான் உங்க மண்டை வெடிச்சிருமே...!

சண்முகம் : நோ... நோ... யூ ஆர் ரோங் சௌமியா...! அவரு பேசுற ஒவ்வொரு பேச்சும் அவரா பேசுறாருன்னு நினைக்கிறே... தப்பு...! அவரோட அனுபவம்தான் பேசுது...

சௌமியா : என்னா... இங்கேயும் வந்து கைய சொரிஞ்சி கிட்டு தெரியுமே! உங்க புத்தி உங்களை விட்டு போகாதே... (சட்டைக்குள் இருந்து பணத்தை எடுத்து கொடுக்கிறாள் அவர் போகிறார்.)

சண்முகம் : (போய்க்கொண்டிருப்பவரை நோக்கி...) அண்ணேன்! நாளைக்கு வந்திடுங்க... என்னது... ஆங்... ஆங் அதுதானே... எடுத்து வைச்சிட்டாப் போச்சு...
(திருமதி யோகா பாலச்சந்திரன் வருதல்)

சௌமியா : வாங்க யோகா அக்கா...
(சௌமியாவின் இரு கன்னங்களிலும் திருமதி யோகா முத்தமிடுதல்)

சண்முகம் : அப்படியா... சந்தோசம்! நல்லதை எங்க கண்டாலும் நாடுபூரா போடனும்ங்கிறதுதானே... ஒங்க ரெண்டு பேருடைய பொலிசியும்...!

சௌமியா : உங்க வீட்டுல சாப்பிடாத விருந்தா... அதுக்கென்ன கட்டாயம் வர்றோம்.

சண்முகம் : அதோ... வர்றாருப்பா... புரட்சிக் கலைஞர்... அட என்ன இது? இன்னைக்கு புதுசா மாலையும் கையுமா..?
(கலைச்செல்வன் சண்முகத்திற்கு மாலை அணிவிக்கிறார்)

சௌமியா : நான் நெனைச்சேன்... நீங்க இதை சொல்வீங்கன்னு...!

சண்முகம் : கலைச்செல்வனா... கொக்கான்னானாம்... வாங்க உட்காந்து பேசுவோம்...
(நாற்காலியில் அமர்கிறார்கள்)

சௌமியா : அதை நான் ஏற்கனவே அவருக்கு சொன்னேன்...

சண்முகம் : மண்டு... முந்திரிக்கொட்டை மாதிரி... முந்தாதே...! அது வந்து... நாட்டுக்கூத்தும் தெருக்கூத்தும் சம்பந்தம் பண்ணிகிட்டுதுன்னா எப்படி இருக்கும்னு ஒரு சின்ன எக்ஸ்பெரிமெண்ட் பண்ணுனேன்! அதுதான்...

சௌமியா : எப்சலூட்லி கரெக்ட்...! அதுக்கு ரெண்டு கூட்டங்கள்ல நறுக்குத் தெரிச்சாப்போல நாலுவார்த்தைய நீங்க அவுத்துவிட்டீங் கன்னாதான் இந்த ஒலி ஒளி கதவுகள்... எங்களுக்காக திறக்கும்...
(அமைச்சர் ஒருவர் வருகிறார்)

சண்முகம் : அமைச்சர் அவர்கள் வரணும்... வரணும்...

சௌமியா : வணக்கம்...! நீங்க இவ்வளவு தூரம் வரணுமா...? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி இருந்தாத்தான்... நாங்க உங்க காலடிக்கு வந்திருப்போமே!

சண்முகம் : இன்னைக்கு... எங்களைப் பத்தி ஓவரா புகழ்ந்து தள்ளிட்டீங்க... அப்படியா... சந்தோசம்...

சௌமியா : உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல சார்...! எதுக்காகவா...? ராஜேந்திரம் மாஸ்டர் ஞாபகார்த்தமா... மணி மண்டபம்... வெள்ளிவிழாக் கலைஞர்களுக்கு மணி மகுடம் நடிகை நடிகையருக்கு வீட்டோட நெலம்.. வறுமையில வாழ்ந்தா மான்யம்... வயசுபோன காலத்துல பென்ஷன்... இப்படி பலயோசனைகள வெளியிட்டிருந்தீங்க.. எல்லாமே 'மணி'யான திட்டங்கள் சார்.

சண்முகம் : பத்திரிகையில அந்த செய்திய படிச்சதும், பலநூறு பலாச்சுளைகள் என் நெஞ்சுக்குள்ள படையெடுத்த மாதிரி இருந்திச்சு. கொஞ்சம் இருங்க சார்... (உரத்த குரலில்) ஏ... ஹிலேரியன்... கௌதமன்... ஸ்ரீசங்கர் சுபியான் எல்லோரும் சீக்கிரம் வாங்க... செல்லையா அண்ணேன்... மினிஸ்டரோட வச்சி எங்களை ஒரு குரூப் போட்டோ... எடுத்துருங்க...

ஆங்... ஆங் அப்படி நில்லுங்க... நீங்க செண்டருக்கு வாங்க சார்.

(போட்டோவுக்கு போஸ் கொடுக்கிறார்கள்)

சௌமியா : தேங்ஸ் சார்...

(பலரும் வந்து சண்முகம் – சௌமியா இருவரையும் பாராட்டி கைலாகு கொடுத்து விட்டுப் போகிறார்கள்)

சண்முகம் : அப்பப்பப்பா... மேக்கப்பை கலைக்கிறதுக்குள்ள போதும்... போதும்னு ஆயிடிச்சி...

(சௌமியா தன்னை மறந்தவளாக சண்முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்)

சண்முகம் : ஏய்... என்ன அப்படிப் பார்க்கிறே...?

சௌமியா : எல்லாரும் பாராட்டிட்டு போயிட்டாங்க... ஆனா... நடிப்புச் சக்கரவர்த்தியான உங்களோட சேர்ந்து நடிக்கிற போதுதான்... பூவோட சேர்ந்த நாரும் மணம் பெற்ற மாதிரி... என் நடிப்புலேயும் புது மெருகு வருது. அதுக்காக... என்னோட பாராட்டுக்களா...

சண்முகம் : என்ன கொடுக்கப் போறே...

சௌமியா : இப்படி காதைக் கொண்டாங்க சொல்றேன்.

(சண்முகம் காதை அவள் பக்கம் திருப்ப சௌமியா அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஓடுகிறாள்)

சண்முகம் : (திடுக்கிட்டு வெட்கப்பட்டு, சமாளித்துக் கொண்டு) ஏய்... என்ன இது... குறும்புக்கார பொண்ணு... (பெருமூச்சு) திறமையான நடிகை... ஆனா... உலகம் தெரியாதவ...

(ஒளி மங்குகிறது)

குறிப்பு ;– இந்தக் காட்சியில் சிவகுமாரன் யோகாபாலச்சந்திரன், லடிஸ்வீரமணி, கலைச் செல்வன் போன்ற பாத்திரங்கள் மேடைக்கு வரமாட்டார்கள். அவர்கள் தங்களுக்கு முன்னால் இருப்பதாக பாவனை (Mime) செய்துகொண்டு சண்முகமும் சௌமியாவும் நடித்தல் வேண்டும்.

திரை

# காட்சி: நான்கு

இடம் : சண்முகத்தின் அறை
நேரம் : பகல்

(சண்முகம் ஆர்மோனியம் வாசித்துப் பாடிக்கொண்டிருக்கிறான் அங்குவரும் சௌமியா பின்னால் இருந்து அவன் பாடலை ரசிக்கிறாள். இடையில் ஓர் அடியை சௌமியாவும் பாட கடைசி அடியை இருவரும் சேர்ந்து பாடுகிறார்கள். முடிவில் இருவரும் சிரிக்கிறார்கள்.)

சௌமியா : ஆமா.... இதுதான் உங்க அறையா....?

சண்முகம் : ஊஹூம்.... அந்தப்புரம்

சௌமியா : அந்தப் புரத்துல எந்த பொருளையும் காணோமே

சண்முகம் : காணோமா... அது... இது... எல்லாம் என்னது?

சௌமியா : அது பாயும் தலையணையும்

சண்முகம் : அதுதான் என் பஞ்சணை

சௌமியா : இது ரெண்டு 'கார்ட்போர்ட்' பெட்டி

சண்முகம் : தப்பு... என் கஜானா...

சௌமியா : அந்த மூலையில ஒரு டிரங்கு பெட்டி

சண்முகம் : அல்ல! என் களஞ்சியம்

சௌமியா : ரொம்ப தமாஷா பேசுறீங்க... 'அதுசரி... அந்த கஜானாவுல என்னென்ன சொத்துகள் சேர்த்து வைச்சிருக்கீங்க...?

சண்முகம் : ஒன்னுல நான் நடிச்ச நாடகக் கொப்பிகளும் – எழுதுன பிரதிகளும், மற்றதுல நோட்டீஸ் – வால் போஸ்டர் – பேப்பர் கட்டிங்ஸ்.

சௌமியா : நீங்க மட்டுந்தான் இருக்கீங்களா...?

சண்முகம் : நானே ராஜா...!

சௌமியா : நண்பர்கள் யாரும் இல்லே...?

சண்முகம் : என்னுடைய ஆப்த நண்பன் இந்த ஆர்மோனியம் தான்... என் பொழுதுபோக்குக்கு துணையா இருக்கிறவனும் இவன் ஒருத்தன் தான்.

சௌமியா : இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போறீங்க...?

சண்முகம் : அப்படீன்னா

சௌமியா : வீடு வாசல் மனைவி மக்கள் குடும்பம் அப்படின்னு ஆக வேண்டாமா?

சண்முகம் : அதை கேக்குறியா...? எனக்கு மேடைதான் வீடு வாசல்; என் மனைவிதான் நாடகம்; நான் எழுதும் பிரதிகள் தான் பிள்ளைகள் சக கலைஞர்கள்தான் என் குடும்பம். இது போக 'எடிசனலா' இன்னொன்னு இருந்தா... பிறகு அதுவே பெரிய 'எட் – ஏக்' ஆகிடும்.

சௌமியா : அப்படீன்னா... கலைஞர்களுக்குன்னு ஒரு 'பேர்ஷனல் லைப்' கிடையாதா..?

சண்முகம் : பேர்ஷனல் லைப் என்ன வேண்டி இருக்கு, பேர்ஷனல் லைப்? கலை வாழ்க்கையில் இருக்கிற சுகம் – மகிழ்ச்சி – இன்பம் எல்லாமே ஒரு தனி அலாதி.

சௌமியா : அப்போ கலைஞர்கள் கட்டை பிரம்மச்சாரியா இருக்கனும்னு சொல்றீங்களா...?

சண்முகம் : கலைத் தொழில்ல கிடைக்கிற சன்மானம் பெருகுற வரைக்கும் சம்சாரத்தைவிட சந்நியாசம் மேலானதுன்னு சொல்றேன்.

சௌமியா : (சிரிக்கிறாள்)

சண்முகம் : ஏன் சிரிக்கிறே...?

சௌமியா : இனி எந்த ஒரு தாய் தகப்பனும் தங்களோட பிள்ளைங்களை கலைத்துறைக்கு அனுப்பவே மாட்டாங்க...

சண்முகம் : ஏன் அப்படி சொல்றே...?

சௌமியா : இல்ல... ஒவ்வொரு கலைஞரும் உங்க 'பொலிசி'யை 'பாலோ' பண்ண ஆரம்பிச்சிட்டாங்கன்னா. அப்புறம் பேரன் பேத்திகளை பார்க்குற அதிர்ஷ்டம் அப்பா அம்மாமாருக்கு கிடைக்காதே...!

சண்முகம் : ஓஹோ... நீ அப்படி வர்றியா...? (பெருமூச்சு – சற்று வேதனையோடு) நான் தான் ஒரு அனாதையாச்சே

சௌமியா : (அனுதாபத்தோடு) உங்க மனசைப் புண்படுத்திட்டேனா...?

சண்முகம் : மென்மையான உள்ளம் படைச்சவன்தானே... கலைஞன்...

சௌமியா : இவ்வளவு பெரிய ஒரு கலைஞனா இருந்தும்.. எந்தவொரு வாய்ப்பும் வசதியும் இல்லாம இருக்கீங்களே...!

சண்முகம் : அது நம்ம நாட்டு கலைஞர்களோட தலையெழுத்து. அதுலேயும் நான் அதிர்ஷ்டம் கெட்டவன்.

சௌமியா : விளக்கேத்த வீட்டுக்கு ஒருத்தி வந்துட்டாள்னா அந்த நிலமை மாறலாம் இல்லையா?

(இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத சண்முகம் வாயடைத்துப்போய் அவளை ஆச்சரியத்தோடு பார்க்கிறான்)

(பின்னணியில் உடுக்கு இசை)

செயமியா : ஏன் திகைச்சுப் போய் நின்னுட்டீங்க...

சண்முகம் : உங்கிட்ட இருந்து இப்படி ஒரு கேள்வியை நான் எதிர்பார்க்கவேஇல்லை.

சௌமியா : ஆனா... இதுக்காக பதிலை உங்க கிட்ட இருந்து எதிர்பார்க்கிறேன்.

சண்முகம் : வறுமைப்பட்ட குடும்பத்துல இருந்து கூட ஒரு கலைஞனுக்கு பெண் கொடுக்க யாரும் விரும்ப மாட்டாங்க.

சௌமியா : நாடு பூரா உங்களுக்கு ரசிகர்கள் மட்டுமில்ல நிறை ரசிகைகளும் இருக்காங்க.

சண்முகம் : அவுங்க கண்களுக்கு கலைவிருந்து படைக்க முடியுமே தவிர வாய்க்கு ருஷியா சாப்பாடு போட முடியாது.

சௌமியா : கண்களுக்கு கீழேதான் கடவுள் வாயை படைச்சிருக்கான்.

சண்முகம் : என்ன சொல்றே...?

சௌமியா : உங்களுக்காகவும் ஒருத்தி இந்த உலகத்துல பொறந்துதான் இருக்கா.

(இந்த பதிலை சற்றும் எதிர்பாக்காத சண்முகம் சிலையாகிவிடுகிறான்.)
(பின்னணியில் உடுக்கு இசை.)

சௌமியா : ஏன் மலைச்சிப்போய் நின்னுட்டீங்க...?

சண்முகம் : செத்த வீட்டுல சங்கு ஊதுறவன்... நாதஸ்வர கச்சேரியில நாயணம் வாசிக்கிற மாதிரி இருந்தது உன் பேச்சு.

சௌமியா : நான் சங்கு ஊதல்ல... சங்கீதம் பாடுறேன்.

சண்முகம் : எங்கேயோ... ஒரு இடத்துல அபச்சுரம் தொனிக்கிது...

சௌமியா : என் கண்களைப் பார்த்தீங்கன்னா... அது அபச்சுரம் இல்ல அன்புச் சுரம்னு தெரியும்...

சண்முகம் : நீ நடிக்கிற ஒரு நாடகத்துல வர்ற ஒரு காதல் காட்சி ஒத்திகைப் பார்க்குறியா...?

சௌமியா : இல்ல உங்க மேலுள்ள காதலுக்கு ஒத்தடம் கொடுக்கிறேன்.

(அவளின் பேச்சு அவனுக்கு அதிர்ச்சியைத் தருகிறது)

சண்முகம் : எனக்கு கலை ஒரு வெறி. உனக்கு அது பைத்தியம்.

சௌமியா : ஒரு உண்மையான கலைஞன ஆராதிக்கிறதுக்கு பேரு பைத்தியம்னா... நீங்க சம்மதம்னு ஒரே ஒரு தரம் சொல்லுங்க அந்த பைத்தியக்காரப் பட்டத்தை நான் ஓராயிரம் தரம் வாங்கிக்கிர்றேன்.

சண்முகம் : சரிதான்... உனக்கு நல்லா தலையில அடிச்சிருச்சி...

சௌமியா : இப்போ உங்க தலையில அடிச்சி நான் சத்தியம் பண்ணிச் சொல்றேன்... நீங்க சம்மதிச்சா சௌமியா சௌபாக்கியவதியா... இருப்பா... சம்மதிக்க இல்லேன்னா... இங்கேயே சவமா கெடப்பா...

சண்முகம் : நான் இருக்கிற நெலையில...

சௌமியா : கல்யாணச்சடங்கு சம்பந்தி உபசாரம் பந்தி பந்தியா சாப்பாடு எதுவும் வேண்டாம்.... கோவிலுக்கு கூட்டிகிட்டு போய் தாலிகூட கட்ட வேண்டாம். உங்க கலையுலக நண்பர்களோட ரெஜிஸ்டர் ஒபீசுக்குப் போய் அங்க வைச்சி என் கழுத்துல ஒரு மஞ்சள் கயிறை தொங்கவிட்டா போதும்.

சண்முகம் : ஐயரை வைச்சி அம்மி மிதிச்சி, அருந்ததி பார்த்து, கூறைச் சேலைக்கட்டின குத்துவிளக்கா கல்யாணப் பந்தல்ல இருக்க வேண்டிய நீ குத்துக்கல்லா நிக்கிறேன்னு சொல்றே.

சௌமியா : என் காதல் உணர்ச்சியின் விளைவுகள் அல்ல; உணர்வுகளின் பிரதிபலிப்பு நான் உங்க உடலை காதலிக்க இல்ல. உங்க அங்கத்தின் ஒவ்வொரு அசைவிலேயும் உள்ள கலையைத்தான் காதலிக்கிறேன். அதனால்தான் நானாகவே

உங்களுக்கு என்னை காணிக்கையாக்குகிறேன். உங்களை கணவரா மட்டும் பார்க்கல்ல கலைக் கடவுளாக பூஜிக்கிறேன். வறுமையின் சோகங்கள் என்னை வாட்டி வதைக்கலாம். ஆனால் புலமையின் சுகங்கள்ல முத்துக்குளிக்கவே ஆசைப்படுறேன். சரின்னு சொல்லுங்க சம்மதம்னு சொல்லுங்க.... சந்தோசமா ஏத்துக்கிட்டேன்னு சொல்லுங்க
(காலில் வீழ்கிறாள்)
(உடுக்கு இசை வேகமாக ஒலிக்கிறது)

(அவன் சம்மதிக்கிறான். இருவரும் இணைகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் சண்முகம் – சௌமியா இருவரினதும் 'பாலே' பாணி நடனம். அவர்கள் இருவருக்கும் திருமணம் நடப்பதை காணுநருக்கு உணர்த்தும் வகையில் 'சைக்கராமா'வில் தாலிக்கொடி காட்சி அளிக்க மந்திரம் ஓதப்படுகிறது. கெட்டி மேளம் ஒலிக்கிறது.)

திரை

## *காட்சி: ஐந்து*

இடம் : சண்முகம் வீடு
நேரம் : பகல்

(வேவையில் இருந்து நீக்கப்பட்ட சண்முகம் அதைத் தாங்க மாட்டாதவனாக தனக்குத் தானே பொருமுகிறான்)

சண்முகம் : வேலையாம் வேலை பெரிய வேலை. இது இல்லேன்னா நான் பொழைக்க மாட்டேனா....? செத்துருவனோ...? மிஞ்சிப் போனா அவன் கொடுக்கிற பிச்சைக்கார சம்பளம் ரெண்டாயிரம் ரூபா நின்னு போகும். என் உயிர்மூச்சே கலை தான்ங்கிறது இரும்புப் பெட்டிக்குள்ள இதயத்தை பூட்டிவைச்சிருக்கிறவனுகளுக்கு எப்படி புரியப் போகுது. ஐயா... சாமி... கலை உணர்வே இல்லாத உனக்கு ஒரு கும்பிடு.... கலைஞனை மதிக்காத உன்

கம்பெனிக்கு ஒரு கும்பிடு... விலை மகளுக்காக விளக்கை அணைக்கிற பயலுக... கலைமகளுக்கா கற்பூரம் கொழுத்த பேறானுக...? இன்னொரு வகையில பார்த்தா நான் அவனுக்கு நன்றி சொல்லனும். இதுவரைக்கும் 'பார்ட்டைம்' கலைஞனா இருந்த என்னை... இன்னையிலிருந்து முழுநேர கலைஞனாக்கிட்டியே... அதுக்காக ஒரு கோடி நன்றி உனக்கு. கலை என்ன வாழ வைக்காதா....? இல்ல கலையால நான் வாழ்ந்திட மாட்டேனா? என் தாய் சரஸ்வதியுமா... என்ன கைவிட்டுருவா? ஒவ்வொரு கம்பனியில யார் யாருக்கு என்னென்ன லீவு எல்லாமோ கொடுக்கிறாங்க. கலைஞனுக்கு மட்டுந்தான்யா கலை முயற்சிகளில ஈடுபடுற போது சம்பளமும் இல்ல; லீவும் இல்ல அட சம்பளம் வேணாய்யா... லீவாவது கொடுங்கன்னு கேட்டா... கலைஞன் தொழிலுக்கு லாயக்குபடமாட்டான். வேலைய விட்டே நின்னுருங்குறான்

(சண்முகம் தனியாக நின்று புலம்புவதை உள்ளே இருந்து சௌமியா அமைதியாக நின்று அவதானிக்கிறாள்)

சௌமியா : என்னங்க... எதுக்காக வேலைய விட்டு நிக்கச் சொன்னாங்க...?

சண்முகம் : ஆங்! இதே கேள்வியைத் தான் நானும் கேட்டேன். நீயே சொல்லு... உடம்புக்கு குணம் இல்லேன்னா கூட நான் வீட்டுல இருப்பேனா...? இல்ல உடலை வளைக்கிறதுக்கு மனசு இல்லாம – இந்த சோம்பேரி பயலுகளாட்டாம் வீட்டுக்குள்ள முடங்கிடந் திருக்கேனா? கொழும்புல நாடகம் நடந்தா பைனல் ரிஹர்சலுக்காக ஒரு நாள் லீவு அவுட்ஸ்டேசன்ல நாடகம் இருந்தா ஒரு மூனு நாள் லீவு. மிஞ்சிப்போனா மாசத்துல ஒரு அஞ்சுநாள் லீவு. (அழுகையுடன் கூடிய தழ தழத்த குரலில்) இதை ஒரு பெரிய குத்தமா எடுத்துகிட்டு வேலையவிட்டு நில்லுப் பான்னுட்டாங்கிறேன்.

| | |
|---|---|
| சௌமியா | : (சோகமும் – வைராக்கியத்துடனும்) போகட்டும் விடுங்க... இது இல்லேன்னா... குடியா முழுகிப் போயிடும் |
| சண்முகம் | : எனக்கு வருத்தம் ஒன்னும் இல்லே... ஆனா தனிமரமா இருந்தா பரவாயில்லை. இப்போ தோப்பாகிட்டேன். என்னை நம்பி நீ... உன்னை நம்பி உனக்குள்ள ஒரு ஜீவன். இதையெல்லாம் யோசிச்சிப் பார்த்துதான் அன்னைக்கு அடிச்சி அடிச்சி சொன்னேன். "கலைஞனுக்கு கழுத்தை நீட்டுனா கஷ்டந்தான்னு நீ கேக்கலே... ஒன்ன... (ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு – வாய்க்குள் முனுமுனுக்கிறான்) |
| சௌமியா | : அதை நினைச்சி கவலைப்பட்டு இப்போ என்ன நடக்கப் போகுது? |
| சண்முகம் | : கவலையா...? எனக்கா...? (சிரிப்பு) நான் சந்தோசமா இருக்கேன் (சிரிப்பு) இனி இருபத்துநாலு மணி நேரமும் என் சுவாசம் – சிந்தனை எல்லாமே நாடகம் தான். என் லட்சியம் என்ன தெரியுமா...? நடிப்புக்கு "சேர்" பட்டம் பெற்ற லோரன்ஸ் ஒலிவியரைப் போல. நான் நடிச்சிகிட்டு இருக்கிறபோதே என் உயிர் பிரியனும். |
| சௌமியா | : (அந்த வார்த்தையை பொறுக்க மாட்டாதவளாக) அத்தான்...! |
| சண்முகம் | : ஏன் பயந்துட்டியா...? அந்த மாதிரி அதிர்ஷ்டம் எல்லாம் சந்தி சிரிக்கிற கலைஞனுக்கு இல்லடி – சத்திய கலைஞனுக்கு மட்டுந்தான். அதுக்கும் தவமிருக்கனும் – ஊம்...! |
| சௌமியா | : மக்களை சந்தோசப்படுத்துற கலைஞர்களுடைய சங்கடமான வாழ்க்கைய, இந்த சமூகம் எப்போ புரியப் போகுதோ... தெரியல்லே.<br>(தோளில் உள்ள துண்டை உதறிக் கொண்டே எழுந்திருக்கிறான் சண்முகம்) |
| சண்முகம் | : துணிஞ்சிட்டேண்டா. துணிஞ்சிட்டேன். இன்னையில இருந்து என் சொந்தக்கால்ல நிக்கப்போறேன். |

கலைப்படைப்புகள் மூலம் எல்லோரையும் என் காலடிக்கு கொண்டு வரப்போறேன்.

சௌமியா : என்ன சொல்றீங்க!

சண்முகம் : நாடு பூரா நாடகம் போடப்போறேன். நாடகத்தை கம்பெனி ரீதியா நடத்தப் போறேன், நல்ல தமிழ்க் கலைஞர்கள் நம்ம நாட்டுலேயும் இருக்காங்ககிறதை இந்த உலகத்துக்கு நிரூபிக்கப்போறேன்.

சௌமியா : அத்தான்! இதோ அந்த நல்ல காரியத்துக்கு என் முதல் காணிக்கை.
(தன் நகைகள் அனைத்தையும் கழற்றி அவனிடம் தருகிறாள் சௌமியா)

சண்முகம் : (வியப்போடு) சௌமியா! என்ன இது...?

சௌமியா : உங்க கம்பெனிக்காக நானும் கம்பெனி கொடுக்குறேன். கலைஞன் யாருகிட்டேயும் கை நீட்டக் கூடாது. கடன் வாங்கக் கூடாது. யாசகம் கேட்கக் கூடாது. அதனால நீங்க ஆரம்பிக்கப்போற கம்பெனியில் நானும் 'செயார்' வாங்கிக்குறேன். ஏத்துகுங்க...!

சண்முகம் : (உணர்ச்சியோடு) சௌமியா...! ஒரு பொட்டுத் தங்கம் கூட இதுவரைக்கும் நான் உனக்கு வாங்கிப் போடல்ல. நான் தங்கத்தால போட்ட தாலின்னு நெனச்சி நீ உன் கழுத்துல தொங்கவிட்டிருக்கிறதும் ஒரு மஞ்சள் துண்டுதான். அப்படி இருந்தும் உன் தாய் வீட்டு சீதனங்களை தாரை வார்க்கத் துணிஞ்சிட்டியேம்மா...

சௌமியா : நான் செந்தாமரைக்கு சொந்தக்காரியாக வேணாம் வெந்தாமரைக்கு விளக்கமானாப் போதும்.
(வீணை இசை வேகமாக ஒலிக்கிறது)

சண்முகம் : (உணர்ச்சி பொங்க) நீ சௌமியா இல்ல... சரஸ்வதி...!
(அவள் கைகளைப் பிடித்து கண்களில் ஒத்திக் கொள்கிறான்)

திரை மூடுகிறது

# காட்சி: ஆறு

இடம் : கலை அரங்கம்

நேரம் : மாலை

(பேச்சாளர் இரா. செழியன் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்)

இரா. செழியன் : நாடகத்திற்காக தொழிலை இழந்த கலைத்தியாகி சண்முகம் அவர்கள், நாடகத்தையே முழுநேரத் தொழிலாகக் கொண்டு – அதை கம்பெனி ரீதியாக நடத்தத் திட்டமிட்டார். அவரது வாழ்க்கைப் பாதைக்கு தூணாக விளங்கிய தூண்டா மணி விளக்கு சௌமியா, அவரது கலைப் பயணத்திலும் துணையாக இருந்தார். இலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தங்கள் கலைப் படைப்புக்களை முன் வைத்தார்கள். நாலா பக்கமும் நாடக மன்றங்கள் பெருகியது; நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இளைஞர்கள் மத்தியில் வேரூன்றியது. அதனால் நல்ல தமிழ்க் கலைஞர்கள் பலர் நாட்டில் அடையாளம் காணப்பட்டார்கள், இன்று நாடு போற்றும் முன்னணிக் கலைஞர்களில் பலர் நமது கலாஜோதியின் சீடர்கள் என்பதும் – அவரை மானசீகக் குருவாகக் கொண்டவர்கள் என்பதும் பெருமை தரும் நிகழ்வுகளாகும். ஆனாலும் கசப்பான ஓர் உண்மையை சொல்லியாக வேண்டும். வருவாயைப் பொறுத்தவரையில் வரவைவிட செலவே செல்வாக்குப் பெற்றிருந்தது. அவர்களது முதலீட்டில் நஷ்டம் கையைக் கடித்தது, கஷ்டம் வயிற்றைக் கடித்தது. அந்த நிலையிலும் அவர்களது ஆர்வம் அணை உடைந்த வெள்ளமாயிற்று. பத்திரிகைகள் பக்கம் பக்கமாக அவர்களைப் பாராட்டியது. சான்றோர்கள் அவரின் சாதனைக்காக சான்றிதழ்கள் தந்தார்கள். ஆன்றோர்கள் பலர் அவரின் அளப்பரிய சேவைகளுக்காக வாழ்த்துக்களை வானுயரக் குவித்தார்கள். ஆனால் யாருமே அவரை வைக்க வேண்டிய இடத்தில்

வைப்பதற்கு சிபாரிசு செய்யவில்லை. கடைசிவரை அவருக்குக் கொடுக்க வேண்டிய அந்தஸ்துகள் கூட கொடுபடவில்லை. சுகங்களை இழந்து துக்கங்களை சொந்தமாக்கிக் கொண்டாலும் கலையின் மூலம் கிடைக்கும் ஆத்மதிருப்தியே ஓர் அலாதியான சுகமாக அவர் கருதினார். அந்தக் கலைப் பெருமகன் – கலைத்தாயின் பெறாமகன் வறுமையிலும் வளர் கலைக்கு புது ரத்தம் பாய்ச்சியது எவ்வாறு என்பது தில்லைக் கூத்தனுக்கே வெளிச்சம். எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது நடிகவேள் லடிஸ் வீரமணியின் 'சலோமியின் சபதம்' நாடகத்தில் கலாஜோதி பதித்த முத்திரை. இத்திரைக்கு வாயிருந்தால் இப்போது அதுகூட சாட்சி சொல்லும்.

திரை விலகுகிறது

## காட்சி: ஏழு

# "சலோமி" வரலாற்று நாடகம்

இடம் : ஏரோது மன்னனின் அந்தப்புரம்
நேரம் : இரவு

(ஏரோது மன்னனாக சண்முகம் – சலோமியாக சௌமியா. ஜொஹனான் எனும் ஞானியின் உருவம் 'சைக்கராமாவில்' நிழல் உருவில்)

நிலை:– காண்டாமணிவிளக்கு ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. விலையுயர்ந்த திரைச்சீலைகள் தென்றலில் தவழ்ந்து விளையாடுகிறது. வானத்தில் பூரணச் சந்திரன் பட்டொளி வீசுகிறது. அழகிய வேலைப்பாடுகளுடன் பொன்னும் மணியும் மின்னும் ஓர் ஆசனத்தில் தன்னை முற்றும் முழுதுமாக மறைத்துக்கொண்டு குப்புறக்கிடக்கிறான் ஏரோது மன்னன். எங்கும் ஒரே நிசப்தம். அமைதியை கிழித்துக்கொண்டு ஓர் அசரீரி... அதுவே ஞானி ஜொகனான்.

ஜொகனானின் குரல் : ஏ... யூதேயா நாட்டு மக்களே! இவனை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இவன் ஒரு

சண்டாளன். இந்த ஏரோது என்பான் இவனுடைய அண்ணனைக் கொன்றுவிட்டு அவனுடைய மனைவியைத் தனதாக்கிக் கொண்டான். அரியணையை அபகரித்தான். அனைத்து சொத்துக்களையும் சூறையாடினான். இவனுடைய உடம்பெல்லாம் தீட்டுக்கள் படிந்து இவனை ஒரு பாவ விருட்சமாக்கி விட்டது.

ஏரோது மன்னன் : பேசாதே ஜொகனான் பேச்சை நிறுத்து! ஓ...! அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் கூரிய ஈட்டிகளாக மாறி என் இதயத்தை குத்திக் கிழித்து இரத்தத்தை உரையச் செய்கிறதே.... ஐயகோ என்ன இது? என்ன இது? மரண பயம் நெஞ்சிலே புகுந்து... என் இதயத்தை பலமாகத் தட்டுகிறதே... என் செய்வேன்... என் செய்வேன்... ஐயோ... நான் என்ன செய்வேன்...

ஜொகனானின் குரல் : அற்பப்பதரே...! உன் ஆடையில் இரத்தக்கறை படிந்திருக்கிறது...?

ஏரோது மன்னன் : (தடுமாற்றத்தோடு) இரத்தம்... இரத்தம்... என் ஆடையில் இரத்தம் எங்கே.. எங்கே...? ஆ... புர்ர்ர்... குளிர்... குளிர்.... குளிரடிக்கிறது. என் உடம்பெல்லாம் குளிராகிக்கொண்டு வருகிறது.... ஒரே நடுக்கம்....

(அவன் உடம்பு பயத்தால் நடுநடுங்குகிறது தன் மேலாடையால் உடலைப் போர்த்திக் கொண்டு ஆசனத்தில் குந்துகிறான். பின்னர் போர்வையை மெதுவாக நீக்கி...)

ஏரோது மன்னன் : இல்லை... இல்லை... ஒரே வெப்பம்... வெப்பம் தாங்க முடியவில்லை. ஓ... உஷ்ணம் என் தலைக்கேறுகிறது. கொதிக்கும் ஈயத்தை யாரோ என் உடல்மீது கொட்டுகிறார்கள்.

(தன் மேலாடையை கழட்டி எறிகிறான். மேல் மூச்சு கீழ் மூச்சுவாங்க பிரமை பிடித்தவன் போல் நிற்கிறான். பின் வீசி எறிந்த ஆடையை வியப்போடு பார்க்கிறான். எதையோ ரசித்துச் சிரிக்கிறான்...)

ஏரோது மன்னன் : இந்த ஆடையில் படிந்து கிடக்கும் ரோஜாமலர்கள் எவ்வளவு அழகாக இருக்கிறது. இந்த ரோஜாவின் இதழ்களில் முத்து முத்தாய் இருக்கும் பனித்துளிகள் எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது. (மகிழ்ச்சி சிரிப்பு மாற்றமடைகிறது) இல்லை... இல்லை இவைகள் ரோஜாவின் இதழ்கள் அல்ல. அதிலே இருப்பது பனித்துளிகள் அல்ல இரத்தத்துளிகள்... ஆம்... இரத்தத்துளிகள்.

ஜொகனானின் குரல் : ஆம்... அந்த நாள் வந்துவிட்டது. பூமியில் படிந்து கிடக்கும் பாவங்களை தன் இரத்தத்தால் கழுவி உலகத்தை இரட்சிக்கப் புறப்பட்டவன்... இதோ வந்துகொண்டு இருக்கிறான்.

ஏரோது மன்னன் : யார்வந்தால் எனக்கென்ன...?ஆ... அனல்... தனல்... கனல்... ஓ...! உஷ்ணத்தால் என் ஒவ்வொரு அங்கமும் வெடித்துச் சிதறுகிறதே... வெப்பம்.... வெப்பம்... வெப்பம் தாங்க முடியவில்லை. யாரங்கே.... கொஞ்சம் பனிக்கட்டிகளை கொண்டு வாருங்கள் (சிறு மாற்றம்) வேண்டாம்... வேண்டாம்... அவைகள் மீண்டும் எனக்குக் குளிரைத் தந்துவிடும்.

(ஓடிச் சென்று ஆசனத்தின் பின்னால் மறைந்து கொள்கிறான். பின் மெதுவாக வெளியே வருகிறான். சௌந்தர்யமான தேவதையைப் போன்று சலோமி அங்கே வருகிறாள். மன்னன் அவளைப் பார்த்து மெய்மறந்து சிலைபோல் ஆகிவிடுகிறான்)

சலோமி : ஆஹா.... இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கிறது. அங்கே விருந்து மண்டபத்தில் ஒரே கூச்சல்! ஒரு புறம் மதுக்கடை... மறுபுறம் யூதர்களின் மதச்சண்டை. (நிலவைப் பார்த்து) என்ன இது... நிலா ஏன்... இன்று நிர்வாணமாக காட்சியளிக்கிறது. ஓ... தன்னுடைய வெள்ளி நிறக்கதிர்களை பூமிக்கு அள்ளி வீசி இங்கே புதிதாகப் பூத்திருக்கும் அல்லி மலர்களை மலர்ந்து மணம்

வீசச்செய்கிறது. (அங்குமிங்கும் பார்த்து) என்ன இது...? வசந்தகாலத் தென்றல் வந்து என் இதழ்களைத் தழுவுகிறதே.... (உணர்ச்சியோடு) என் மிருதுவான மேனியை இதமாகத் தடவிக் கொண்டிருக்கிறதே...

ஏரோது மன்னன் : ஓ.... சலோமி....! தென்றலாக வந்து உன்னைத் தீண்டியது யாராக இருக்கும்.... (அவள் முகத்தை திருப்பிக் கொள்கிறாள்) அது நானாக இருக்கக் கூடாதா....? (பயங்கர இசை.. ஒரு பறவையின் கடூரமான சப்தம்)

ஏரோது மன்னன் : என்ன இது.... பெருஞ்சத்தம்.... பேரிரைச்சல்... பலமாக ஒலிக்கிறதே... ஆம்....! பயங்கரப் பறவையொன்று தன் பொல்லாச் சிறகுகளை விரித்து – இந்த மாளிகையை சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

ஜொகனானின் குரல் : ஆம்! வானம் வெடித்து இவன் தலையிலே விழப்போகிறது. இந்த பூமி பிளந்து இவனை உயிரோடு விழுங்கப் போகிறது. அடேய்... உன்னுடைய உடம்பை புழுக்கள் தின்னப் போகிறது. உன்னுடைய எலும்புக் கூட்டையும், மண்டை ஓட்டையும் எடுத்து ஆதிவாசிகள் குடிசைகள் கட்ட பயன்படுத்தப் போகிறார்கள்.

ஏரோது மன்னன் : சலோமி... என மனது தாங்க முடியாத வேதனைப்படுகிறது... என்னை மகிழ்விப் பதற்காக சற்று நடனமாடுகிறாயா...? துன்பமும் துயரமும் வந்து என் இதயத்தின் குரல்வளையை நெரித்து எனக்கு மரண பயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே நீ ஆடு சலோமி... எனக்காக ஒரே ஒரு ஆட்டம் ஆடு...

சலோமி : (அவன் பேச்சை மதியாதவாறு) எங்கிருந்து வருகிறது இந்த சுகந்த மணம்... ஆம்! அதோ

அந்த நந்தவனத்தில் பூத்திருக்கும் ரோஜாக் கன்னிகள் தன் மனத்தோடு தன் மேனியில் படிந்திருக்கும் தேன் மணத்தையும் சேர்த்து தென்றலிலே கலந்து விட்டது.

ஏரோது மன்னன் : உனக்குத் தெரியும் என்னிடம் நூறு வெள்ளை மயில்கள் இருப்பது. அவைகள் தேவதாரு மரங்களின் நிழலில் நடனமாடும் போது வானத்து தேவதைகள் போல் காட்சி அளிக்கும் இந்த உலகத்தில் என்னிடம் மட்டும்தான் அந்த மயில்கள் உள்ளன. உலக மகாவீரர் ஜூலியஸ் சீசர் ஒரு போரின் வெற்றியின் அடையாளமாக எனக்குப் பரிசளித்தது. அவைகளை உனக்குத் தந்து விடுகிறேன். நீ நடனமாடினால் மட்டும் போதும்...

ஜொகனானின் குரல் : ஆம்! கொடுமையான நோய்களையும் – கொடிய வியாதிகளையும் கெட்ட ஆவிகளையும் விரட்டி அடித்து ஒட்டுபவன் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். அவன்... குருடர்களை பார்வையடையச் செய்கிறான். நொண்டிகளை நடக்க வைக்கிறான். குஷ்டரோகிகளை குணப்படுத்துகிறான். தரித்திரர்களை சுகவாசிகளாக ஆக்குகிறான். ஏன்...? மரித்தவர்களையே உயிர்பெற்று எழச் செய்கிறான்.

சலோமி : ஆஹா... எவ்வளவு இனிமையான குரல் இந்தக் குரல் எங்கிருந்து வருகிறது. ஆம்... பாதாளச் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் அந்த ஞானியின் குரல்தான் அது. அவரை நான் பார்த்திருக்கிறேன். பாலைவனத்தில் மலரும் ரோஜாவைப் போன்ற மேனி. மணிப்புறாவின் பாதங்களைப் போன்ற நிறம் உடைய சின்னஞ் சிறிய இதழ்கள்....

ஏரோது மன்னன் : (செஞ்சலாக) சலோமி... நீ ஆடமாட்டாயா...? ஆடு சலோமி! என் மகிழ்ச்சிக்காக நீ

ஆடவேண்டும். என் சந்தோசத்திற்காக நீ ஆடவேண்டும். உன் ஆட்டத்திற்கு பரிசாக நீ எதைக் கேட்டாலும் தருகிறேன்.

சலோமி : எனக்கு எதுவுமே வேண்டாம். அந்த ஞானிதான் வேண்டும்.
(ஏரோது மன்னன் வெவ்வேறு விதமாகச் சிரிக்கிறான்)

ஏரோது மன்னன் : நீ ஆடினால் என்ன... ஆடாவிட்டால் என்ன...? நான் இப்போது சந்தோசமாக இருக்கிறேன். சீசர் சக்கரவர்த்தி என் மீது மிகவும் நேசம் கொண்டவராக இருக்கிறார். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னுடைய மகிழ்ச்சிக்கு குறுக்கே இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது. (அவன் மீண்டும் கலவரம் அடைகிறான்) துன்பத்தின் அக்கினி ஜுவாலைகள் என்னைத் துரத்திக் கொண்டே வருகிறது. அது என்னைத் தொட்டுப் பொசுக்கி சுட்டு சாம்பலாக்கு வதற்கு முன் என்னை இன்பச் சாகரத்தில் மூழ்கடித்துவிடு.

சலோமி : (மயக்கும் சிரிப்பு) நான் எது கேட்டாலும் தருவேன் என்று சொல்லி இருக்கிறீர்கள்.

ஏரோது மன்னன் : ஆம்! என் சிம்மாசனத்தின் மீது ஆணை யிட்டுக் கூறுகிறேன். நீ எதை வேண்டு மானாலும் கேள். தந்துவிடுகிறேன். நீ மட்டும் ஆடினால் போதும்.

(மன்னனை மயக்கும் வகையில் சலோமி சாகசமாக ஆடுகிறாள். ஆட்ட முடிவில் களைப்புற்று அவன் காலடியில் வீழ்கிறாள். அரசன் அவளை அப்படியே வாரி எடுத்து...)

ஏரோது மன்னன் : ஓ! சலோமி... (முகத்தை உற்று நோக்கி) சலோமி... நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? ஆமாம்... உனக்குத் தெரியாது. அழகை அழகு பார்க்க முடியாதல்லவா...? உன்

அழகுக்கு நான் அடிமையாகி விட்டேன். வேண்டியதைக் கேள்.

சலோமி : எதைக் கேட்டாலும்...

ஏரோது மன்னன் : மறுக்க மாட்டேன்... என்ன வேண்டும்...?

சலோமி : (சாகசத்தோடு) எனக்கு....

ஏரோது மன்னன் : கேள்

சலோமி : எனக்கு...

ஏரோது மன்னன் : கேள்...

சலோமி : எனக்கு...

ஏரோது மன்னன் : கேள் சலோமி... எது வேண்டுமானாலும் கேள்

சலோமி : நீங்கள் சிறைப்பிடித்திருக்கிறீர்களே ஜொகனான்... அந்த ஞானியின்...

ஏரோது மன்னன் : ஞானியின்...

சலோமி : தலையை வெட்டி ஒரு வெள்ளித் தட்டில் வைத்துத் தாருங்கள்...

(பயங்கரமான இடி – மின்னல்... அதிர்ச்சியான ஒலி – ஒளிகள்...)

ஏரோது மன்னன் : (வெறி பிடித்தவனைப்போல்) சலோமி... (மெதுவாக) சலோமி... வேறு எதை வேண்டுமானாலும்...

சலோமி : வேண்டாம்... வேண்டுவது தலை... அதுவும் வெள்ளித் தட்டில்!

ஏரோது மன்னன் : வேண்டாம் சலோமி! வேண்டாம்...! ஒரு மனிதனின் தலையை வெட்டினால் எவ்வளவு கோரமாக இருக்கும். அந்த அகோரத்தை உன்னைப் போன்ற அழகிகள் பார்க்கலாமா...? வேறு ஏதாவது கேள்.

சலோமி : ஞானியின் தலை தான் வேண்டும்

| | | |
|---|---|---|
| ஏரோது மன்னன் | : | சலோமி...! ஒரு வேளை அந்த ஞானி எலியாஸ் ஆண்டவராக இருக்கலாம். அவரைக் கொன்று விட்டால் நமது ராஜ்யத்திற்கே அழிவு வந்துவிடலாம். |
| சலோமி | : | எது வந்தாலும் எனக்குக் கவலை இல்லை. எனக்கு வேண்டியது தலைதான்.! |
| ஏரோது மன்னன் | : | என் சிம்மாசனத்தில் உன்னை உட்கார வைக்கிறேன்... |
| சலோமி | : | (சிரிப்பு) உமது... சிம்மாசனம்... அவன் சிரசைவிட பெறுமதியானதல்ல. |
| ஏரோது மன்னன் | : | இந்த ராஜ்ஜியத்தையே உன் காலடியில் வைக்கிறேன். |
| சலோமி | : | உங்கள் மகுடத்தையே என் தலையில் வைத்தாலும் எனக்கு வேண்டியது ஞானியின் தலை.... அதுவும்... வெள்ளித்தட்டில் |
| ஏரோது மன்னன் | : | (கோபமாக) சலோமி... |
| சலோமி | : | தலை.... |
| ஏரோது மன்னன் | : | (கெஞ்சலாக) சலோமி |
| சலோமி | : | தலை.... |
| ஏரோது மன்னன் | : | (அழுதவாறு) சலோமி... |
| சலோமி | : | ஏரோது மன்னனுக்கு ஏனிந்த கலக்கம்... எதற்காக தயக்கம்... எங்கே எனக்குக் கொடுத்த வாக்குறுதி |
| ஏரோது மன்னன் | : | (உரத்த குரலில்) யாரங்கே... இந்த வேசிமகள் கேட்பதை கொடுத்து விடுங்கள்... |

(ஞானி ஜொகனானின் தலை வெட்டப்பட்டு ஒரு தட்டில் வைத்து சலோமியிடம் தரப்படுகிறது. சலோமி அதற்கு முத்தமிடுகிறாள்.)

சலோமி : ஜொகனான்... உங்களுடைய இதழ்கள் ஏன் இவ்வளவு கசப்பாக இருக்கிறது. ஓ... காதலின் சுவையே.... கசப்புதானோ....? (மீண்டும் முத்தமிடுகிறாள்) எப்படியோ சலோமி தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டாள்.

ஏரோது மன்னன் : வேசி மகளே! நீயும் தொலைந்து போ....

(வாளை உருவி சலோமியை வெட்டித் தள்ளுகிறான். ஞானி முன்பு கூறியவைகள் மீண்டும் ஒலிக்கிறது. பயங்கரமான ஓசை எங்கும் எதிரொலிக்கிறது. மரம் செடி கொடிகள் யாவும் சரிந்து விழுகிறது. அரண்மனை உடைந்து தூள்தூளாகிறது. இந்த பயங்கர சூழலில் தத்தளிக்கிறான் எரோது மன்னன்...)

ஏரோது மன்னன் : என்னைக் காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்ற... இங்கே ஒருவருமே இல்லையா...? யாரங்கே... ஆ....!

(அரண்மனைத் தூண் ஒன்று அவன் மீது விழுகிறது. அதன் அடியில் சிக்குண்டு தவிக்கிறான் ஏரோது மன்னன் அவன் ஆவி பிரிகிறது...)

ஜொகனானின் குரல் : மனிதப் பிறவிகளே! மறந்து விடாதீர்கள் பாவத்தின் கூலி மரணம்.

திரை மூடுகிறது

## *காட்சி: எட்டு*

இடம் : கலை அரங்கின் முன் பகுதி

நேரம் : இரவு

(நாடகம் முடிந்ததும் மேடையின் முன் பகுதியில் - திரைச்சீலைக்கு முன்பாக சண்முகம் - கலாபிமானி செந்தில்நாதனும் அமர்ந்திருக்கின்றனர். இடதுபுறத்தில் கேமிராவுடன் ஒளிப்பதிவாளர் நிற்கிறார். கேமிராவுக்கு முன்னால் காணுநருக்குத் தெரியும் வகையில் ''மொனீட்டராக'' ஒரு சிறு தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. )

ஒளிப்பதிவாளர் : மெனீட்டர் ரெடி லைட்ஸ் ஒன் கெமெரா ஸ்டார்ட்

செந்தில்நாதன் : வணக்கம் கலைச்சக்கரவர்த்தி அவர்களே!

சண்முகம் : வணக்கம் செந்தில்நாதன்

செந்தில்நாதன் : ஒரு நாடகம் நடக்கும் போது – அந்த மேடையிலேயே அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட கலைஞரை பேட்டி காணும், புதிய நிகழ்ச்சியொன்றை தொலைக்காட்சி சுவைஞர்களுக்கு அறிமுகப்படுத்த விருக்கிறோம்.

சண்முகம் : நல்ல முயற்சி; ரொம்ப சந்தோசம்.

செந்தில்நாதன் : இந்நிகழ்ச்சிக்கு பிள்ளையார் சுழியிடும் சந்தர்ப்பத்தை உங்களுக்கு வழங்குவதில் நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

சண்முகம் : நன்றி! எல்லாப் பெருமைகளும் அவன் ஒருவனுக்குத்தான்.

செந்தில்நாதன் : சரி கலாஜோதி சண்முகம் அவர்களே! உங்கள் கலை வாழ்க்கையின் ஆரம்பத்தை சுருக்கமாகக் கூறுங்களேன்.

சண்முகம் : நாடகத் தந்தை கே.பி.ஏ. ராஜேந்திரம் மாஷ்டருடைய மனோரஞ்சித கான சபாதான் என்னோட குருகுலம். அப்போ உள்ள சபாக்கள் இப்போ உள்ள நாடக மன்றங்கள் மாதிரி வெறும் 'லெட்டர்பேட்'டுல இருக்கல்ல. அப்பா உடைய சபாவுல...

செந்தில்நாதன் : அப்பா... என்றால்...

சண்முகம் : மாஷ்டரை நாங்க எல்லாம் அப்பான்னுதான் கூப்பிடுவோம். அங்கே ஒரு கட்டுக்கோப்பும் கட்டுப்பாடும் இருந்தது. இசைக் கருவிகள் சீன் செட்டிங்ஸ் – உடைகள் – ஒப்பனைச் சாதனங்கள் எல்லாம் மன்றத்துலேயே இருக்கும். சாதாரணமா ஒரு நடிகனால கூட ஒரு வாத்தியத்தை வாசிக்க முடியும். சீன் கட்டத்

தெரிஞ்சி இருப்பாங்க. ஒப்பனை களையும் தாங்களே செய்துகுவாங்க. அது மட்டுமில்ல தன்னோட 'கெரெக்டரை' மட்டுமில்லாம மற்ற கதாபாத்திரங்களோட வசனத்தையும் மனப்பாடம் பண்ணி இருப்பாங்க. ஒரு நடிகருக்கு சுகமில்லாமப் போயிட்டாக்கூட சக நடிகர்கள் அந்தப் பாத்திரத்தை செய்யிறதுக்கு தயாரா இருப்பாங்க. மொத்தத்துல நடிக்கிறதுல மட்டுமில்ல நாடக சம்பந்தமான எல்லா அம்சங்களிலேயும் தேர்ச்சி பெற்று இருப்பாங்க.

செந்தில்நாதன் : இந்த வகையில தான் நீங்களும் உங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டீர்களா?

சண்முகம் : கரெக்ட்! பட் வன்திங்... இப்போ எல்லாம் சினிமாப்படம் காட்டுறாங்களே முருகன் தியேட்டர்... இது அந்த நாளையில வெறும் நாடகக்கொட்டகையாத்தான் இருந்தது. அநேகமா இந்த கொட்டகையிலும் சரஸ்வதி மண்டபத்துலேயும்தான் இந்தியாவுல இருந்து நிறைய கலைஞர்கள் வந்து அடிக்கடி நாடகங்கள் போடுவாங்க. பம்மல் சம்பந்த முதலியாரைத் தொடர்ந்து நவாப் ராஜமாணிக்கம், ஹொன்னப்பா பாகவதர் – டி.கே.எஸ். பிரதர்ஸ் நம்ம இலங்கேஸ்வரன் மனோகர் – இப்படிப் பல தமிழ்நாட்டுக் கலைஞர்களுடைய சிருஷ்டிகளை பார்க்குற வாய்ப்பு எனக்குக் கிடைச்சதுனாலத்தான் கூத்துகளிலேயும் புராண இதிகாச வரலாற்று நாடகங்கள்லேயும் என்னால கூடுதலா ஈடுபாடு கொள்ள முடிஞ்சுது.

செந்தில்நாதன் : இப்போது நிறைய சமூக நாடகங்களையும் நடத்துகிறீர்கள். இந்த உணர்வு எவ்வாறு ஏற்பட்டது?

சண்முகம் : அதுக்குக் காரணமே பேரறிஞர் அண்ணாவும் பெருங்கலைஞர் மு. கருணாநிதியும் தான்.

இவுங்களோட நாடகம் சமகால சமூக விமர்சனங்களாக இருந்தது. நிஜ வாழ்க்கையில சொல்ல முடியாததை யெல்லாம் பாத்திரங்கள் மூலமா சொல்ல முடிஞ்சிது. இது எனக்குள்ள ஒரு பிடிப்பையும் – துடிப்பையும் உண்டாக்கிட்டுது. கலைஞர் களுக்கும் சமூகக் கடமைகள் உண்டுங்கிறது இன்னைக்கு உலகம் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாகிட்டுது. அதுவும் போக பண்டையப் பெருமைகள் – பண்பாடுகள் – பராக்கிரமங்கள் எல்லாம் நம்ம மக்களுக்கு பரிச்சயமான சங்கதி; பழசாகிப்போன சமாச்சாரம். அதனால மக்களுக்கு உள்ள பிரச்சனைகள் – அதற்கான காரணிகள் – அதுக்குண்டான தீர்வுகள் – எதிர்கால சுபீட்சத்துக்கான பரிகாரங்கள் இதுகளை சொல்ற நாடகங்கள் தான் இன்றைய காலகட்டத்துக்கு முக்கியமாகத் தேவைங்கிறது என்னோட தாழ்மையான அபிப்பிராயம்.

செந்தில்நாதன் : நீங்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. சரி கலாஜோதி அவர்களே! இந்தத் துறையில் உங்கள் நன்றிக்குரியவர்கள் யாராவது இருக்கிறார்களா?

சண்முகம் : (சிறிது நேரம் யோசித்து) முப்பது வருஷத்துக்கு முன்னால நாடகம் பார்க்கிறதுக்கு யாரும் டிக்கட் வாங்கி வரமாட்டாங்க நாங்களே கஷ்டப்பட்டு, வித்தாத்தான் உண்டு, அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் – நாடகத்துக்காக ஒரு 'ஓடியன்சை' கொண்டு வர்றதுக்கு, வெட்கத்தை விட்டு – கிண்டலுக்கு ஆளாகி – அவமானத்தையும் தாங்கிகிட்டு ரோட்டுக்கு ரோடு – சந்திக்கு சந்தி நாயா அலைஞ்சி கடைக்குக் கடை ஏறி இறங்கி டிக்கட்டுக்களை வித்தாங்க நடிகைச் சகோதரிகளான ஜெயகௌரி முத்துலக்ஷ்மி சந்திரகலா, ராஜமணி, மணிமேகலை, போன்றவங்க

தியேட்டர்ல வந்து இன்னைக்கு ஒரு ரசிகர் டிக்கட் வாங்குறார்னா – அதுக்கு அவுங்க போட்ட அடித்தளம் தான் காரணம். இதை நாம் மறுக்க முடியாது. இவுங்களுக்கு நான் மட்டும் இல்ல நம்ம கலையுலகமும் நன்றி சொல்லனும்.

செந்தில்நாதன் : நன்றியோடு நின்று விடக்கூடாது; கைமாறாகவும் சில விஷயங்களை செய்தாக வேண்டும். சம்பந்தப்பட்டவர்களும் அதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

சண்முகம் : சபாஷ்! சரியாச் சொன்னீங்க

தொலைக்காட்சி நிருபர் : இந்தத் துறையில் நிறைவேற வேண்டிய ஆசைகள் ஏதாவது உங்களுக்கு உண்டா...?

சண்முகம் : அருமையான கேள்வி! என்னைப் போல வறுமையோட பிறந்த காரணத்துனால தங்களோட கலைத்திறமைகளை வளர்த்துக் கொள்ள தக்க வசதி இல்லாம – பல இளைஞர்கள் வாட்டத்தோட இருக்காங்க நாடகத்துறையில் நாட்டமும் – நல்ல நடிப்பாற்றலும் உள்ள பலபேரு நடிப்பின் தன்மையையும், தரத்தையும் உணரமுடியாம, மேடையேறி நடிக்கிறதுக்கு முறையான பயிற்சியும் கிடைக்காம தவிக்கிறாங்க. இவர்களுக்காக கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு கலைக் கல்லூரி அமைக்கணும். பயிலரங்குகள் நடத்தனும் இதுதான் என்னோட நீண்ட நாள் கனவு.

தொலைக்காட்சி நிருபர் : கனவு நினைவாக எங்கள் வாழ்த்துக்கள்! கடைசியாக ஒரு கேள்வி. தங்களின் கலை வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையும் எந்த நிலையில் இருக்கிறது?

சண்முகம் : (தனக்குள் சிரிக்கிறார்) அழுறதா... சிரிக்கிறதான்னு தெரியல்ல. இதுக்கு பதில் சொல்லவும் வேணும் சொல்லவும் கூடாது. சரி. நீங்க கேட்டதுக்காக சொல்றேன். கலைத்தாயை

அலங்கரிக்கிறதுக்காக என் மனைவியோட நகைகள் அனைத்தையும் வித்துட்டேன். வாழ்க்கைத் தாயை வாழ வைக்கிறதுக்காக "இலக்டரிக் ஐடத்துல இருந்து எவர் சில்வர் "அலுமினிய பாத்திரங்கள் வரைக்கும் இப்போ விலை பேசிக்கிட்டிருக்கேன்" கலை எங்களுக்கு அளிப்பது ஊதியமல்க; உயிர்" – என்ற நிலைப்பாடு – கலைஞனா இருக்கிற வரைக்கும் பூஜை, கணவனா இருந்து பார்த்தா பூஜ்யம். அப்பான்னு கூப்பிடுறதுக்கு ரெண்டு பசங்க இருக்காங்க. அவுங்களுக்காக ஆண்டவன் ஒருத்தன் இருக்கான் மன்னிக்கனும்... இதுக்குமேல் நான் எதையும் சொல்ல விரும்பயில்ல. (கண்ணீர் வடிகிறது)

செந்தில்நாதன் : சரி நமது ரசிகர்களுக்காக நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா...?

சண்முகம் : கருணை மிகுந்த ரசிகர்களும் கலைஞர் களுக்கு கடைக்கண் காட்ட வேண்டிய பெரியவர்களும் ஒன்ன தெரிஞ்சிக் கிறனும்னு ஆசைப்படுறேன். கலைஞனது தாகம். ஒரு தவயோகியின் யாகம். கலைக்கோவிலின் சத்தியத் தளத்துல அங்கப்பிரதட்சை நடத்தும் கலைஞனது மூச்சும் பேச்சும் கலை மகளுக்கு அர்ச்சனைப் பூக்களாகுது; அவன் வாழ்வும் வளமும் காலதேவன் கைகள்ல அக்கினிப் பூக்களாகிடுது. புனிதம் கெட்டுப் போனா புழுதி மேடுதான். அதனால் ஆடியே சாகும் அன்னப்பட்சிகளான எங்களை அன்னக் காவடிகளாக ஆக்கிடாதீங்கன்னு கும்பிட்டுக் கேட்டுகுர்றேன். எல்லோருக்கும் என் நன்றியும் – வணக்கமும்.

தொலைக்காட்சி நிருபர் : நன்றி

(சண்முகம் மேடையிலுள் போகிறார். இருள் சூழ்கிறது)

திரை

## காட்சி: ஒன்பது

இடம் : சண்முகம் வீடு
நேரம் : மாலை

(சுளகை கையில் ஏந்தியவாறு உள்ளே இருந்து வருகிறாள் சௌமியா. வறுமை நிலையை காட்டும் வகையில் சௌமியாவின் உடையும் உருவமும், சுளகை கீழே வைத்துவிட்டு – தானும் நிலத்தில் உட்காருகிறாள். அரிசியில் கல் நெல் பொறுக்குகிறாள்; புடைக்கிறாள்; குருநலை வேறாக எடுத்து வைக்கிறாள்)

சௌமியா : (பெருமூச்சு) வாய்க்கு ருசியா சாப்பிட்டு எத்தனை நாளாகுது? அவர் வர்றதுக்கு முன்ன அடுப்புல உலைய வைச்சிடனும் (குழந்தை அழும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறாள்)

சௌமியா : இனி சமைச்சு சாப்பிட்டாப்புலதான்! பிள்ளையான கொஞ்ச நேரம் நிம்மதியா தூங்க வேணாம். எப்ப பார்த்தாலும் ஒரே நச்சி நச்சி நச்சீன்னு அழுதுகிட்டு! எல்லாரும் பெர்றாங்கன்னு நானும் ரெண்டைப் பெத்தேன். ஒன்னு ஆஸ்பத்திரியில கிடந்து ரெண்டு வருஷமா வதைப்பட்டுகிட்டு இருக்கு. இது வீட்டுல இருந்து என்னை வதைச்சிகிட்டு இருக்கு. (மீண்டும் அழுகைச் சத்தம்)

சௌமியா : (எழுந்து போய்க் கொண்டே) ஊம்... படு...படு.... (தொட்டிலை ஆட்டிக் கொண்டே தாலாட்டுப் பாடுகிறாள்) ஆராரோ.... ஆரிரரோ... அருங்கலையே ஆராரோ.... நான் நடிச்ச நாடகத்தின் நவரசமே ஆராரோ (மீண்டும் அழுகை) கருமம்... கருமம்... கத்திக்கிட்டு கெட.. பாலை ஊத்திகிட்டு வாறேன். (உள்ளே போய் – பால் போத்தலுடன் வருகிறாள்) அடடடடா.... எங்கப்பாயில்ல... அழாதேடா... என் கண்ணுல்ல... என் ராசா....
(குழந்தையை தூக்கி எடுத்து முத்தமிட்டு – பின் மடியில் வைத்து பாலூட்டுகிறாள்) உம்! நாடகக்கார அப்பனுக்கு தப்பாம பொறந்திருக்கு. மைக் போட்டாக்கூட இப்படி சத்தம் கேட்காது. இதுக்கு

அடிக்கொருதரம் பால்வேணும்; அந்த மனுஷனுக்கு என்னடான்னா அந்தியானா தண்ணி வேணும் (குழந்தையை நிலத்தில் கிடத்துகிறாள்) எப்படி கன்னியமான ஒழுக்கமா இருந்த மனுஷன் இந்தமாதிரி ஆகிட்டார். (பெருமூச்சு விடுகிறாள்)

சௌமியா : கடனாவும் கைமாத்தாவும் வாங்கி எத்தனை நாளைக்கு சமாளிக்கிறது? நாடகக்காரங்களை நம்பியாரும் கடன் கொடுக்கவும் மாட்டாங்க. இருந்த நகை நட்டும் போச்சு; உடுக்கிற உடு புடவைகளையும் அடகு வைச்சாச்சு... எப்படித்தான் உருப்படப் போறோமோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

வெளியிலிருந்து : (சண்முகத்தின் குரல்) கையை எடுறா... அடேய் கையைவிடு... அவ்வளவுதான் கொடுப்பேன்; அதுக்குமேல கேட்கப்படாது...

சண்முகம் : (வந்துகொண்டே) இந்த நாட்டுல யாருகிட்ட வேணும்னாலும் என்னைப்பத்தி கேட்டுப்பாரு நான் நல்ல அடிப்பேன்... அதே மாதிரி நடிப்பேன்... நல்லா போடுவேன்; நல்லா பாடுவேன்.

(இப்போ... தோளில் பொன்னாடையுடனும் – கையில் கேடயம் – பாராட்டுப் பத்திரங்களோடு சண்முகம் வருவது காணுநருக்குத் தெரிகிறது)

சண்முகம் : சௌமியா...... சௌமியா......

சௌமியா : இன்னும் சாகல்ல..... உயிரோடுதான் இருக்கேன்

சண்முகம் : நீ இங்கேயா இருக்கே..... எங்கேயாவது போயிட்டியோன்னு நினைச்சேன்

சௌமியா : நீங்கதான் எங்கேயோ போய்க்கிட்டு இருக்கீங்க

சண்முகம் : (பாடுகிறான்) சாராயப் போத்தலை நம்பு

சௌமியா : ஆமா.... இதை நம்புனா வாழ்க்கைதான் நாசமாகப் போகும்.

சண்முகம் : போகட்டும்..... பாதி வாழ்க்கை நடிச்சே நாசமாப் போச்சு...... மீதி வாழ்க்கையும் குடிச்சே நாசமா போகட்டும்..... இந்தா புடி..... இதெல்லாம் இன்னைக்கு கிடைச்ச பரிசுகள்...... (அவளிடம் கொடுக்கிறான்)

சௌமியா : எதுக்கு இதெல்லாம்.......... தலைக்கு வைச்சி படுக்கிறதுக்கா....? கலைஞனுக்குன்னு சொந்தமா ஒரு வீடு இருந்தாத்தானே – இதுகளை ஒழுங்கா அடுக்கி அழகு பார்க்கலாம். உம்! இதுகளுக்கு செலவழிக்கிற பணத்தை கையில் கொடுத்தாக் கூட நாலு நாளைக்கு நிம்மதியா சாப்பிடலாம்.

சண்முகம் : உனக்குப் புரியுது. அவுங்களுக்குப் புரியலையே

சௌமியா : (அழுதுகொண்டு) அத்தான் எப்படி இருந்த நீங்க... இப்படி ஆகிட்டீங்களே...

சண்முகம் : என்ன செய்யிறது....? நாடகத்தை நம்புனேன் என் தொழில் போச்சு.... நாடகக்காரனை நம்பி உன் வாழ்க்கை போச்சு. என் சாதனைகளை பட்டியல் போட்டு காட்டுறாங்க... ஆனா என்... வேதனைக்கு ஒரு சின்ன நோட்டுக்கூட... போடமாட்டேங்குறாங்க... கலைஞனோட உடுப்பைப் பார்க்கிறவன் கூட அவன் வீட்டு அடுப்பை நினைக்கிறது கிடையாது. அடுப்புன்னு சொன்னதும் அடிவயித்துப்போராட்டம் ஞாபகத்துக்கு வந்துடுச்சி. ஏதாவது... கிடைக்குமா..... (சாப்பாடு கேட்கிறான்)

சௌமியா : இதோ.... எடுத்து வைச்சிருக்கேன். இப்படி உட்கார்ந்து சாப்பிடுங்க... (உட்காருகிறான்) கையக் கழுவுங்க....

சண்முகம் : மனைவிக்கு படிஅளக்க முடியாத கணவன் கேட்கக்கூடாத கேள்வி. என்ன கறி வைச்சிருக்கே...?

சௌமியா : ரசம் வைச்சி.... தொவையல் அரைச்சி... கருவாடு பொறிச்சி இருக்கேன்...

சண்முகம் : ஆ....! ஒரு புடி புடிக்கிறேன். (சாப்பிட்டுக்கொண்டே) நாடகத்தை கம்பெனி ரீதியாக நடத்த திட்டம் போட்டு நாட்டுல உள்ள திறமையான நடிகர்களையெல்லாம் ஒன்னா சேர்த்து தகுந்த சன்மானமும் கொடுத்து 'கொள்ளைக்காரன்' நாடகத்தை நாடு பூராப் போட்டேன். அது என் சொத்து சுகங்களையே கொள்ளையடிச்சிட்டுது....

(புரை ஏறுகிறது – சௌமியா தண்ணீர் தருகிறாள்)

சண்முகம் : (குடித்துவிட்டு) சீரியஸ் சப்ஜெக்டுன்னு 'சிறுக்கியும் பொறுக்கியும்' எடுத்தேன். இப்போ நான் பொறுக்கி ஆகிட்டேன்... நல்ல வேளை நீ சிறுக்கி ஆகல்ல. வன் செட்டுல 'புயலில் ஒரு மலர்' நாடகத்தைப் போட்டேன்.

சௌமியா : மனைவி மக்கள் எல்லாம் புழுதி மலர்களா ஆனதுதான் மிச்சம்...!

சண்முகம் : முப்பது 'கண்ட்ராக்ட் ஷோ' செய்தேன். வரவு தொன்னூற்றொன்பதாயிரம் ரூபா. செலவு...? ஒரு லட்சத்து பத்தொன்பதினாயிரம். துண்டு விழுந்த தொகையை சரிக்கட்டுறதுக்காக வீட்டுல ஒரு துரும்பும் இல்லாம வித்தாச்சு.

சௌமியா : இனி வீதியில் நிக்க வேண்டியதுதான் பாக்கி

சண்முகம் : அப்பவும் வீதிநாடகம் போடுவேன். இந்தக் கலா ஜோதி சண்முகத்தை நாடகக் கலைக்குன்னே கடவுள் படைச்சிருக்கான்.

சௌமியா : கலையால தங்களோட வாழ்க்கை வசதிகளை பெருக் கிட்டவங்களும் இருக்கத்தானே செய்யிறாங்க...?

சண்முகம் : சௌமியா! நான் கலையை கலையா நேசிக்கிறவன், எனக்கு வேசித்தனம் செய்யத் தெரியாது. சரஸ்வதிய சரஸ்வதியா பார்க்க விரும்புறேனே தவிர – டிஸ்கோ சாந்தியா பார்க்க விரும்பல்ல

சௌமியா : கலைஞன்னா அவனுக்கும் ஒரு பண்பாடு பாரம் பரியம் இருக்கு...!

சண்முகம் : பாரம்பரியத்துக்கு நான் 'ரெட்காபட்' விரிக்கிறதுனாலத் தான் – நாடகவீதி இன்னும் 'ரெட்லைட் ஏரியா'வா ஆகாம இருக்கு... (தனது நாடகப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளைக் காணாது) ஆமா... எங்கே இங்கேயிருந்த நான் சேர்த்துவைச்ச புதையல்கள் எல்லாம்.

சௌமியா : பழைய கடதாசி தானே...?

சண்முகம் : (சற்று கோபமாக) பழைய கடுதாசி இல்லடி.... என் பரம்பரை சொத்து....!

சௌமியா : (சாதாரணமாக) ஒரு பக்கம் மழையில நனையுது... மறுபக்கம் கரையான் அரிக்கிது. கண்ணை மூடிட்டா ஆறடி நிலம். நாம காலகைய நீட்டுறதுக்கு உள்ளதே மூனடி நிலம். இதுக்குள்ள உங்க பொக்கிஷங்கள் வேற இடத்தை அடைச்சிட்டிருக்குது.... பார்த்தேன்... பழைய பேப்பர்காரனுக்கு கொடுத்தா....

சண்முகம் : பழைய பேப்பர்காரனுக்கு கொடுத்தா...? (கோபத்தால் முகம் சிவக்கிறது)

சௌமியா : பிரயோசனமா இருக்குமேன்னு கொடுத்துட்டேன்...... (அதிர்ச்சியான இசை) அறுபது கிலோ இருந்ததுங்க முன்னூற்று அறுபது ரூபா கொடுத்தான். குழந்தைக்கு ரெண்டு பெகெட் பால்மாவும் – குளிச்சிட்டு மாத்துறதுக்கு உள் பாவாடை இல்லியேன்னு ரெண்டுயார் துணியும் வாங்குனேன். மிச்சத்தை வைச்சி சமையலை கவனிச்சேன்... (பரிதாபமாக) ஒரு புடி சோறு சாப்பிட்டு எத்தனை நாளாகுது...?

சண்முகம் : என்னடி.... சொன்னே....? (சாப்பிட்ட பிளேட்டால் வீசி அடிக்கிறான். அது அவள் தலைமை காயப்படுத்துகிறது)

சௌமியா : ஆ (வருத்தத்தோடு முனகல்)

சண்முகம் : என்ன திமிர் உனக்கு.... என்ன சொன்னே... பழைய பேப்பரா...? இன்னைக்குத் தாண்டி அது பழைய

பேப்பர்... நாளைக்கு பல்கலைக் கழக பட்டங்கள். என் முப்பது வருஷ சேவைக்குச் சாட்சி. என் பங்களிப்புக்கான ஆதாரம். என் கலாசத்தியத்தின் தரிசனம். என் திறமைகளுக்கான கிரீடம். அதைப் போய் பழைய பேப்பர்காரனுக்கு போட்டுட்டியேடி பாவி... நீயும் பழசாகிப் போயிட்டேன்னு ஒரு பாத்திரக் கடைக்காரனுக்கு உன்னை விலைபேசி வித்துட்டா... உலகம் என்னை ஒத்துகுமா...? என் முகத்துல காரித்துப்பாம இருக்குமா...? நீ கலைஞானம் உள்ளவள்னுதான் உன்னை ஏத்துகிட்டேன். சுத்தமான களிமண்ணுங்கிறதை நிரூபிச்சிட்டியேடி.... இனியும் என் முன்னால நிக்காம தொலைஞ்சி போ...

(கழுத்தை பிடித்து வெளியே தள்ள... சௌமியா நிலத்தில் போய் விழுகிறாள். இருவரும் இரண்டு மூலைகளில் இருந்து மௌனமாக அழுகிறார்கள்)

(வயலின் இசை மெல்ல ஒலிக்கிறது)

(சௌமியா முழங்காலில் முகம் புதைத்து இருக்க... சண்முகம் உறங்கிவிடுகிறான். சிறிது அமைதி – 'கலர்வீல்' சுழல்கிறது (சண்முகம் மெதுவாக எழுந்து சௌமியாவின் அருகில் வருகிறாள்)

சண்முகம் : (போதை தெளிந்த நிலையில்) சௌமியா.... இன்னும் தூங்கலையா....?

சௌமியா : இல்ல...!

சண்முகம் : ஏன்....?

சௌமியா : தூக்கம் வரல்ல....

சண்முகம் : நன் தூங்கி எந்திரிச்சிட்டேன்

சௌமியா : ஏன்னு எனக்குத் தெரியும்

சண்முகம் : சேவல் கூவுறதுக்கு இன்னும் கொஞ்ச நேரந்தான் இருக்கு..........

சௌமியா : சேவல் கூவிட்டா – கையில ஒரு ரூபாகூடக் கிடையாது....

சண்முகம் : கலைநிகழ்ச்சிகளுக்கு டிக்கட்வைச்ச அனுபவமா...?

செளமியா : இல்ல... காலையில சோப்பு போட்டு குளிச்ச பழக்கம் (ஒரு சோப்பு வாங்கிக் கொடுக்க வக்கில்லாதவனாக ஆகிவிட்டேனே என்ற உணர்வோடு, தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு) (சண்முகம் எழுந்து வெளியே போகிறான்)

சண்முகம் : எங்கே போறீங்க....?

செளமியா : தாசன் அண்ணேன் காம்பராவ தட்டி... கடனுக்கு கால் போத்தலை போடப் போறேன்.

(செண்டை வாத்தியத்தின் ஒலி – வேகமாக ஒலிக்கிறது)

(இருள் சூழ்கிறது – திரை)

## காட்சி: பத்து

இடம் : சண்முகம் வீடு
நேரம் : பகல்

(சலங்கை ஒலி வேகமாக கேட்கிறது. செளமியாவின் இதயப் பிரதிபலிப்பாக 'சைக்கராமா' வில் நிழல்வடிவில் உக்கிரதாண்டவம். சோகமே உருவாய் ஒரு 'ஸ்பொட்லைட்'டின் ஒளியில் செளமியா. சில வினாடிகளின் பின் ஒரு முடிவுக்கு வந்தவளாய் எழுந்திருக்கிறாள். முந்தானையை இழுத்துச் சொருவுகிறாள். கீழே கிடக்கும் கத்தியை எடுத்து தன்னைத்தானே குத்திக்கொள்ளப் போகிறாள். அந்நேரம் அங்கு வரும் சண்முகம் அதனைத் தடுக்கிறான்.)

சண்முகம் : செளமியா... என்ன இது....?

செளமியா : விடுங்க... என்னைச் சாகவிடுங்க...! (சண்முகம் கத்தியைப் பறித்து வீசுகிறான். செளமியா குமுறிக் குமுறி அழுகிறாள்)

சண்முகம் : சாவுதான் பிரச்சனைகளுக்கு பரிகாரம்னா. இந்த மண்ணுல இன்னைக்கு ஒரு மனுஷன் இருக்க மாட்டான். மரம் செடி கொடிகள் மட்டுந்தான் இருக்கும். இப்போ நான் என்ன செத்தாப் போயிட்டேன்.

சௌமியா : ஒரு பெண் புருஷனை இழந்துட்டா – இந்த உலகத்துல எல்லா சுகங்களையும் இழந்துட வேண்டியதுதான். சொத்துன்னு சொல்லி சொந்தம் கொண்டாடுறதுக்கும் வெள்ளைப்புடவை ஒன்னுதான் மிஞ்சும். கலையுலகத்துல கால்வைக்கிற பெண்களும் கணவனை இழந்த மாதிரிதான். விரும்பியோ விரும்பாமலோ விதவைக்கோலம் போடவேண்டியது பெண்களுக்கு மட்டுமில்ல – இங்கே ஆண்களுக்கும் அது பொதுவாகிட்டுது. அதை 'சிம்பொலிக்'கா காட்டுறதுக்குத்தான் கலைமகள் கலர்புடவையில காட்சி அளிக்காம – வெள்ளைப் புடவைய கட்டிகிட்டு விளக்கமா இருக்காங்க.

சண்முகம் : ஆகமொத்தத்துல கையாலாகாத்தனமான ஒரு துறையில கால்வைச்சிட்டோம்னு சொல்லாம சொல்றே...? அப்படித்தானே....?

சௌமியா : பின்ன என்ன...? மூத்த மகன் ஆஸ்பத்திரியில! பத்துவருஷமா படுத்த படுக்கை. அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்க வக்கு இல்லாட்டியும் – போய் பார்த்துட்டு வரவாவது பஸ்ஸுக்கு காசுயில்ல இளைய பிள்ளைக்கு... ஒட்டிப்போன வயிறு; ஒட்டுப்போட்ட சட்டை. அவனோட சின்னஞ்சிறு ஆசைகளை நிறைவேத்துறதுக்கும் சில்லறை இல்ல. விக்கிறதுக்கும் பாத்திரம் பண்டம் எதுவும் வீட்டுல இல்ல. இனி என்னை வித்தாத்தான்....

சண்முகம் : (அவ்வார்த்தையை பொறுக்கமாட்டாதவனாக) சௌமியா! என்ன வார்த்தை சொல்லிட்டே.... நாலுபேரைப் போல நல்லா இருக்கனும்கிற எண்ணம் எனக்கு இல்லியா.... இருக்கு... என்னால முடிஞ்ச அளவுக்கு எப்படி எப்படியெல்லாமோ 'ட்ரை' பண்ணுனேன் முடியல்ல. சில கம்பெனிகள்ல இண்டர்வியூக்குப் போனேன். என்னை அடையாளம் கண்டுகிட்டதும், 'நாடகக்காரங்க நாலுநாள் ஒழுங்கா நிப்பாங்க நாலாவது நாள் ஒரு நாடகம் வந்துட்டா போட்டுட்டு ஓடிப்போயிடுவாங்க'ன்னு சொல்லி மரியாதையா திருப்பி அனுப்பிட்டாங்க. சிலபேரு

கவலைப்படுறாங்களே தவிர, நாடகக்காரன் வீட்டு அடுப்பை பூனைகள் குத்தகைக்கு எடுத்து குட்டிபோட்டுகிட்டு இருக்கிறதை யோசிக்கிறாங்க இல்ல.

சௌமியா : வாழ்க்கையை கொண்டு போறதுக்கே வசதி இல்லேன்னு வாய்விட்டு சொல்ல வேண்டியது தானே...?

சண்முகம் : அப்படியும் சொன்னேன் – அதுக்கு என்ன சொல்றாங்க தெரியுமா..? வறுமையில இருக்கிற வரைக்கும் தான் கலைஞன்கிட்ட திறமைகள் வசதியா இருக்குமாம்.

சௌமியா : ச்சீ....! கண்மூடித்தனமான கலையுலகம்!

(இந்நேரம் அங்கு வரும் கலாபிமானி செந்தில்நாதனும் இளம்கலைஞர் சந்திரனும் அப்படியே நின்று விடுகிறார்கள்)

செந்தில்நாதன் : (மெதுவாக) சகுணம் சரியில்ல போலிருக்கு....

சந்திரன் : சமாளிக்கலாம்.... தைரியமா வாங்க மிஷ்டர் செந்தில்நாதன். வணக்கம் அண்ணேன்.

செந்தில்நாதன் : வணக்கம் சண்முகம்....

சண்முகம் : அடடே நீங்களா.... வணக்கம்.... வாங்க..... வாங்க...

செந்தில்நாதன் : வணக்கம் தங்கச்சி

சௌமியா : வணக்கம்

சந்திரன் : சுகமா இருக்கீங்களா அக்கா

சௌமியா : ('ஆம்' என தலை அசைக்கிறாள்) பேசிக்கிட்டிருங்க... இதோ... வந்திடுறேன்....

(வீட்டின் ஒரு பகுதி எனக் காட்டும் வகையில் – மேடையில வலது புறத்தில் ஒரு 'ஸ்பொட்' லைட்டின் ஒளி. அந்த இடத்தில் வந்து சௌமியா நிற்கிறாள்)

சண்முகம் : என்ன ரொம்ப நாளைக்கப்புறம்...? என்னப்பா சந்திரா... ரூபவாஹினிக்கு போனதுல இருந்து ஆளையே இந்தப் பக்கம் காணலியே

சந்திரன் : 'ஓவர் வேர்க்' அண்ணேன்... உட்கார நேரமில்ல... உட்கார்ந்தா எந்திரிக்க நேரமில்ல. எப்பப் பார்த்தாலும் ஒரே 'பிஷி'

சண்முகம் : ஊம்! எனக்கும் ஒரே பசி...!

சந்திரன் : நல்ல 'ஜோக்' அடிக்கிறீங்க அண்ணே!

சண்முகம் : கலை உலகமே இப்போ ஒரு ஜோக்தாம்ப்பா...

சந்திரன் : ரொம்ப தமாஷா பேசுறீங்க சண்முகம்

சண்முகம் : தமாஷா வரியை நாடகத்துக்கு ரத்து பண்ணிட்டாங்க பாருங்க.... அதான்... ஓ....! மன்னிக்கனும் செந்தில்சார்.... நிக்கவைச்சே பேசிக்கிட்டுருக்கேன்... சௌமியா....

சௌமியா : என்ன அத்தான்

சண்முகம் : அந்த ஜமுக்காலத்தை எடுத்து போடும்மா.... உட்கார்றதுக்கு!

சௌமியா : (தனக்குத் தானே) ஜமுக்காலமா...? படுக்குறதுக்கு உள்ளதே ஒரு கிழிஞ்ச பாய்... இதைக் கொண்டு போய்.... எப்படி போடுறது....?

செந்தில் : அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்மா.... கலாஜோதி உடைய பாதம் பட்ட தரையே ஒரு தங்க சிம்மாசனம் மாதிரிதான்... சந்திரா... உட்காரப்பா....
(மூவரும் தரையில் உட்காருகிறார்கள்)

சண்முகம் : உங்க பேருல வந்த ரெண்டு நாடகங்கள் ரொம்ப ஜோரா இருந்தது சார்...

செந்தில் : அட நீங்க ஒன்னு....! நான் என்னத்தை எழுதி கிழிச்சேன்.... யார் யாரோ எழுதி என் பேருல போடுறாங்க.... எனக்கு பேர் வருது..... அவுங்களுக்கு வவுச்சர் போகுது.... ஏன் நீங்க கூட எழுதலாமே....?

சண்முகம் : எனக்கு அப்படி எல்லாம் பழக்கம் இல்லீங்க! பெத்த புள்ளைய வித்துட்டோம்னா அப்புறம் பொண்டாட்டிய விக்கிறதுக்கு ரொம்ப நேரம் போகாது...

செந்தில் : அதுவும் சரிதான்...

சண்முகம் : சௌமியா

சௌமியா : என்னாங்க....

சண்முகம் : கொஞ்சம் காப்பி போட்டுட்டு வாம்மா....

சௌமியா : (தனக்குள்) இந்த மனுஷனுக்கு மூளை கெட்டுப் போச்சோ தெரியல்ல விடிஞ்சதுல இருந்து இன்னும் நாங்களே ஒரு டீ குடிக்கல்ல... சீனி டப்பா வேற வெறும் டப்பாவா இருக்கு.... இந்த லட்சணத்துல காப்பி கேக்குறாரு.... காப்பி....

செந்தில் : காப்பி எதுக்கு சார்... உங்க வார்த்தைகள் தான் தேனா இனிக்குதே...!

சண்முகம் : (சிரித்துக் கொண்டே...) நல்லா சொன்னீங்க போங்க... ஏம்ப்பா சந்திரா... நீயும் புரொடியூசராகிட்டே...

செந்தில் : உங்க சிஷ்யன் அப்படி ஒரு இடத்துக்கு வர்றது பெருமைதானே அண்ணேன்.

சண்முகம் : ஊம் பெருமைதான்.... யார் இல்லேன்னு சொன்னாங்க.... அதில்ல தம்பி... எனக்கும் மாசத்துக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தேன்னா... ஏதாச்சும் கிடைச்ச மாதிரி இருக்கும் இல்லையா..?

சந்திரன் : நான் என்ன மாட்டேன்னா சொல்றேன்.... நீங்கதானே ஒரு முயற்சியும் இல்லாம இருக்கீங்க...?

சண்முகம் : முயற்சி இல்லாமலா...? நானா...? (சிரிக்கிறான்) சரி... நம்ம டயல் எம் போர் மார்டரை அனுப்பட்டுமா...?

சந்திரன் : மார்டர்னு சொல்றபோதே நடுக்கமா இருக்கு. அதுவும் போக பேருகூட பயங்கரம் அண்ணேன்...

சண்முகம் : அப்போ மதமாற்றம்...?

சந்திரன் : அது ஒரு 'கொண்ட்ரவேசியல்' சப்ஜெக்ட்!

சண்முகம் : டைமன்ராணி எப்படி...?

சந்திரன் : நம்ம பண்பாட்டுக்கு நல்லதா தோணல்ல...! மிஷ்டர் செந்தில்........வட் யூ ஸே?

செந்தில் : யேஸ் யேஸ்! யூ ஆர் கெரெக்ட்

சண்முகம் : சக்காராம் பைண்டர்...?

சந்திரன் : சரிபட்டு வராது

சண்முகம் : அலைகள் நாடகத்தை போட்டுறலாமா...?

சந்திரன் : இது மாஸ் மீடியா அண்ணேன்... நம்ம 'கல்ச்சரை'யும் கொஞ்சம் கவனத்துக்கு எடுக்கனும்.

சண்முகம் : அப்படியா... அப்போ 'ஏணிப்படிகள்'...?

சந்திரன் : எதுக்கண்ணேன் அரசியலைப் போய் டச் பண்ணனும்...?

சண்முகம் : அசோக சக்கரவர்த்தி புத்தரான கதையை அழகு தமிழ்ல - இலக்கிய நயத்தோட எழுதி இருக்கேன்... அதை போட்டுறலாமா...?

செந்தில் : பெரும்பான்மை இன சங்கதிகள் எல்லாம் நமக்கு வேண்டாத சமாச்சாரம்.

சண்முகம் : நாடகத்தோட நிக்காம நாலு சினிமாவுல முகத்துல காட்டுனது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போதான் புரியுது...

செந்தில் : என்ன அப்படி சொல்லீட்டீங்.... நீங்க கதைவசனம் எழுதி நடிச்ச நான் உங்கள் தோழன் தானே 'ரெகோர்ட் பிரேக்'...!

சண்முகம் : அதுதான் இப்போ என் நினைப்புகளுக்கும் 'பிரேக்' போடுது.... விளம்பர வெளிச்சம் மட்டும் இல்லேன்னா விமோசனமே இல்லாம வாழ்க்கையோடு போராடிக் கிட்டிருக்கிற நான் வண்டி இழுத்தோ - மூட்டை சுமந்தோ காலத்தை ஒட்டி இருப்பேன்...

செந்தில் : ஐயய்யோ... அப்படியெல்லாம் ஒன்னும் பண்ணிடாதீங்க அப்புறம் கலாஜோதிங்கிற 'இமேஜ்' பெரிய 'டெமேஜ்' ஆகிடும்!

சண்முகம் : மனுஷன் யாருக்கு அடிமை இல்லேன்னாலும் வயித்துக்கு அடிமை.

செந்தில் : டோன்ட் வொறி மிஷ்டர் சண்முகம்! தேர் ஸ் ஏ டைம் போர் ஓல் திங்ஸ். (Dont Worry Mr. Shanmugam. There is a time for all things)

சண்முகம் : ஏன் சார்... சமூகத்துல பெரிய அந்தஸ்துல உள்ளவர் நீங்க... மேல்மட்ட செல்வாக்கு வேற இருக்கு... நீங்க மனசு வைச்சீங்கன்னா...

செந்தில் : அட நீங்க ஒன்னு! உங்களுக்கு ஏதாவது செய்யனும்னு... நான் எத்தனை பேர்கிட்ட பேசிட்டேன் தெரியுமா... எல்லோரும் என்ன சொல்றாங்கன்னா... அவர் திறமைக்கு அவரை வைச்சி சமாளிக்கிறது கஷ்டம் சார் அப்படிங்கிறாங்க.

சண்முகம் : கலையைப் பத்தி தெரியாதவங்க... பதவியில உட்கார்ந்துட்டா– கலைஞனப் பார்த்து பயப்புடுறதும் நியாயம்தான். அது போகட்டும்... இன்னும் நீங்க வந்த விஷயத்தை சொல்லல்லயே....

சந்திரன் : அதாவது நான் முதல் தடவையா ஒரு ட்ராமாவ டைரக்ட் பண்ணுறேன்... அதுல ஒரு காட்சி... நாலு பேர் ஒரு படகுல போய்க்கிட்டு இருக்காங்க பின்னணியில ஒரு பாட்டு... திடீர்னு ஒரு சூறாவளி வந்துருது. படகு ஆட்டம்போட ஆரம்பிக்குது... நாலுபேரும் தத்தளிக்கிறாங்க.... அந்த ஆபத்தான கட்டத்தை சாமர்த்தியமா சமாளிச்சி கரை சேர்றாங்க... இதை புதுமையான முறையில் ஜனங்களுக்கு காட்டனும். அதுக்கு உங்க கிட்ட ஒரு ஐடியா கேட்கலாம்னு தான்...

சண்முகம் : அப்படியா...? (சண்முகம் சிந்தனையில் ஆழ்கிறான்)

(ஏலே எலே எலே எலேலோ... என்ற ஹம்மிங் ஒலிக்கிறது. மூவரும் சைகைகளால் பேசிக் கொள்கிறார்கள். பின் சண்முகம் அதனை நடித்துக் காட்டுகிறான்)

சந்திரன் : ஆஹா... கொன்னுட்டீங்க அண்ணேன்...!

செந்தில் : அபாராம்.... அற்புதம்!

சண்முகம் : எல்லா புகழும் அவனுக்குத்தான் சார்....!

(செந்தில் தன் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து சண்முகத்திடம் நீட்டுகிறார்)

சண்முகம் : என்ன இது...?

செந்தில் : சன்மானம் இல்ல... சந்தோசம்...! (சௌமியா வருகிறாள்)

சண்முகம் : சுவைக்கிறதுக்கு காசு வாங்கலாம்.... சொல்லிக் கொடுக்கிறதுக்கு... வாங்கக்கூடாது....

சந்திரன் : பரவாயில்ல... நீங்க வாங்கிகுங்க அக்கா

செந்தில் : என்னோட சந்தோசம் கலாஜோதிக்கு சங்கோஜமா இருக்கு...

சௌமியா : எனக்கு சங்கடமா இருக்கு...

செந்தில் : என்ன அப்படி சொல்லீட்டீங்க....

சௌமியா : கலைக்கு விலைபேசி எங்களுக்கு பழக்கமில்லேங்க...

செந்தில் : அப்புறம் உங்க இஷ்டம்.... இதுக்குமேல் எப்படி சொல்றதுன்னு தெரியல்ல...

சந்திரன் : உங்க நடிப்பை பார்த்து ரொம்ப நாளாச்சி அக்கா...

சௌமியா : நிஜ வாழ்க்கையில நிறையப்பேர் இப்போ நடிக்க ஆரம்பிச்சிட்டதால ஜனங்க மத்தியில நம்ம நடிப்பு எடுபட மாட்டேங்குது தம்பி

செந்தில் : ஐ ஏம் சொரி மிஷ்டர் சண்முகம்.... ஆறு மணிக்கு ஒரு கூட்டம்.... அதுல 'கலைஞன் சமுதாய ஜன்னல்'ங்கிற தலைப்புல பேச வேண்டி இருக்கு. புறப்படட்டுமா...

சண்முகம் : நல்லது

சந்திரன் : வர்ரேன் அண்ணேன்... வர்றேங்க்கா....
(இருவரும் போகிறார்கள்)

சண்முகம் : ஏன் சௌமியா... நீயாவது அந்தப் பணத்தை வாங்கி இருந்தா... ஆஸ்பத்திரிக்குப் போய் பையன பார்த்திட்டு வந்திருக்கலாம் இல்ல....

சௌமியா : நாங்க பிழைக்கிறதுக்கு ஒருவழி பண்ணுங்கண்ணு கேட்டா..... அவுங்க பிச்சையில்ல போடுறாங்க....

சண்முகம் : இல்ல.... அந்த விதிய நான் மாத்துறேன்... இப்பவே போறேன்... யாருகிட்ட யாவது ஒரு நூறு – இருநூறு ரூபா கடன் எடுத்து கொஞ்சம் மாங்காய் அன்னாசி, பப்பாளி பழங்களை வாங்கி ஒரு கூடையில் போட்டு – தலையில் வைச்சி தெருத் தெருவா விக்கிறேன். அப்போவாது கலையுலகத்துக்காக 'கிளிசரின்' கண்ணீர் வடிக்கிறவங்களோட இதயக்கதவுகள் திறக்குதான்னு பார்க்குறேன்.

(சண்முகம் வெளியே போகிறான்)

சௌமியா : நில்லுங்க...! (சண்முகம் நிற்கிறான் – சௌமியா அவன் அருகே வருகிறாள்) அப்படியெல்லாம் செய்துடாதீங்க அத்தான். அப்புறம் பலரும் பலமாதிரி பேச ஆரம்பிச்சிருவாங்க – அற்புதமான கலைஞன் அன்னக் காவடியாகிட்டான் – ஒரு திறமைசாலி தெருப்பொறுக்கியாகிட்டான் – நாடக மேடை ராஜா – நடைபாதை கூஜாவாகிட்டான்னு ஒவ்வொருத்தரும் கேலியும் கிண்டலுமா பேசுறதை என்னால பொறுத்துக்க முடியாது. இனி நானோ பிள்ளைகளோ பட்டினி கிடந்து செத்தாலும் சரி... பசீன்னு கேட்கமாட்டேன்....

(கேவிக் கேவி அழுகிறாள்)

சண்முகம் : தாயே சரஸ்வதி... கலையழகை நான் எங்கெல்லாம் கண்டேனோ – அங்கெல்லாம் கடவுளைக் கண்டேனே... அதுக்காகவா இந்தத் தண்டனை

(கைகளால் தன் மார்பில் அடித்துக் கொள்கிறான்)

சௌமியா : அத்தான்....

சண்முகம் : சௌமியா... (இருவரும் அழுகின்றனர்)

(இருள் சூழ்கிறது – திரை)

## காட்சி: பதின்னொன்று

இடம் : சண்முகம் வீடு (உட்புறமும் வெளிப்புறமும்)

நேரம் : இரவு

(இடியும் மின்னலுமாய் மழை பெய்து கொண்டிருக்கிறது. வீட்டினுள் சௌமியா பரிதாபகரமாக சுருண்டு படுத்திருக்கிறாள். சண்முகம் அளவுக் கதிகமான குடிபோதையில் வந்து கதவைத் தட்டுகிறான். சௌமியா அதைக் கேட்டும் கேட்காதவள் போல் இருக்கிறாள்)

சண்முகம் : சௌமியா.... சௌமியா.... கதவைத் தொறக்காம இன்னும் என்ன பண்ணிகிட்டு இருக்கே... ஏய் சௌமியா... (மீண்டும் தட்டுகிறான்) நான் கூப்பிடுறது இன்னும் உன் காதுல விழலியா...? என் புள்ளதான் செத்துப்போச்சி. நீயுமா செத்துப்போயிட்டே...?

சௌமியா : (அதை பொறுக்க மாட்டாதவளாக எழுந்து) அப்படி ஆகியிருந்தா நானும் நிம்மதியாப் போய்ச் சேர்ந்திருப்பேனே... ஒரு பிள்ளைய பறிகொடுத்தேன். இன்னொரு பிள்ளைய உயிரோட தூக்கிக் கொடுத்துட்டேனே....

சண்முகம் : அதுக்கு நான் செய்வேன்... வருமானம் இல்ல... வாழவைக்க முடியல்லே... யாருக்காவது வளர்க்கக் கொடுத்துருவோம்னு...... சொன்னே. அதாவது வயித்தை நெறச்சிக்கிட்டு வாழட்டுமேன்னு நானும் சரின்னேன்... கொடுத்துபுட்டு ஏன் கூச்சல் போடுறே.

சௌமியா : தப்பு என்னுடையதுதான்... நாயும் பூனையும் பெத்துப்போடுதேன்னு நானும் பெத்தேனே... அது என் தப்புதான்....

சண்முகம் : என்ன செய்யிறது... நாயையும் பூனையையும் விட நாடகக்காரன் கேடுகெட்டுப் போயிட்டான்.

சௌமியா : பசியால என் புள்ள துடிக்கிறப்போ.... பாக்குவெட்டிய வித்து பால்மா வாங்கிக் கொடுத்தேன்....

சண்முகம் : அதுகூடப் பரவாயில்ல... அதைவிடக் கேவலம் தான்... செத்துப்போனவனை அடக்கம் செய்யிறதுக்கு லிஸ்ட் போட்டது – ஏய் முதல்ல கதவைத்தொற...
(மழை பலமாக பெய்கிறது காற்று வேகமாய் வீசுகிறது)

சௌமியா : பன்னிரண்டு வருஷம் படுத்த படுக்கையா ஆஸ்பத்திரியில் கெடந்தானே.... எத்தனை தடவைப் போய் பார்த்திருப்போம். பல்லை உடைச்சிகிட்டு... முகத்தை புண்ணாக்கிகிட்டு – தலைய காயப்படுத்திகிட்டு ரத்தம் சொட்ட, சொட்ட காக்கா வலிப்பால என் புள்ள என்னமா துடிச்சிருப்பான்...?

சண்முகம் : வியாதியால ஒண்ணு துடிதுடிச்சி செத்துப் போச்சி... வீட்டுக்குள்ள ஒன்னு பசியால துடியாதுடிச்சிது. விடிய விடிய நான் குடியா குடிச்சிகிட்டு திரியிறேன்... என்ன இருக்கு இந்த லைப்புல.... ஆப்டர் ஓல் நத்திங்!

சௌமியா : அதனால நீங்க இந்த வீட்டுக்குள்ள.... இனி அடி எடுத்து வைக்க வேணாம். சாராயத்தை நல்ல குடிங்க சந்திக்கு சந்தி விழுந்து கெடங்க. கிடைச்ச இடத்துல சாப்புடுங்க. தெருவோரங்கள்ல தூங்குங்க உங்களுக்கு எதுக்கு பொண்டாட்டியும்... புள்ளையும்..?

சண்முகம் : சௌமியா கதவைத் தொற....

சௌமியா : (உறுதியோடு) முடியாது...

சண்முகம் : (பரிதாபமாக) மழையில நனைஞ்சி... ஜன்னி புடிச்சி செத்துருவேன்

சௌமியா : எப்படியும் போங்க....

சண்முகம் : (கெஞ்சலாக) சௌமியா... ஏய்... என் ராசாத்தி... ஓ...!
(சௌமியா கொடியில் கிடந்த ஒரு துணியை எடுத்து உதறி நிலத்தை துடைத்து அதையே கீழே விரித்துப் படுக்கிறாள்....)

(வெளியே........ சண்முகம் மழையில் நனைந்தவாறு தனது லுங்கியை (சாரம்) கழட்டி தன் உடம்பைப் போர்த்திக்கொண்டு ஒரு ஓரமாய்க் குந்துகிறான்.)

சண்முகம் : (தனக்குள்) இந்த இருபது வருஷத்துல அவளுக்கு என்ன சுகத்தைத்தான் கொடுத்துட்டேன். ரெண்டு பிள்ளைகளை கொடுத்ததைத் தவிர. அதுலேயும் ஒன்று அல்பாயுசுல போயிட்டுது. இந்த அப்பனால பள்ளிக்கூடம் அனுப்ப முடியாது. படிக்க வைக்க முடியாது. உடுத்துறதுக்கும் சாப்புடுறதுக்கும் கொடுக்க முடியாதுன்னு மத்த புள்ளையையும் வளர்க்கக் கொடுத்துட்டா. நான் எல்லாம் ஒரு கலைஞன். எனக்கெல்லாம் ஒரு வாழ்க்கை...!

(திரை மூடுகிறது)

## காட்சி: பன்னிரெண்டு

இடம் : தெருவோரம்
நேரம் : காலை

(சண்முகம் தெருவோரத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறான். அவ்வழியே வரும் சந்திரன் அதைக் கண்டு அப்படியே அதிர்ந்துபோய் நின்றுவிடுகிறான். அக்கம் பக்கம் பார்த்து விட்டு சண்முகம் மெதுவாக அருகில் வருகிறான் அவனைத் தட்டி எழுப்புகிறான்.)

சந்திரன் : அண்ணேன்... அண்ணேன்... சண்முகம் அண்ணேன்.

சண்முகம் : (பாடிக் கொண்டே எழுந்திருக்கிறான்) சாராயப் போத்தலை நம்பு...

சந்திரன் : என்ன அண்ணே இதெல்லாம்...?

சண்முகம் : ஒன்னும்... இல்லை... என்னான்னு... கேக்குறேன்...

சந்திரன் : நாலு பேர் போறவாற பாதையில இப்படி....

சண்முகம் : இன்னைக்கு நேத்தா படுக்குறேன்.... என்னைக்கு வீட்டை வித்தேனோ.... அன்னையில இருந்து நான் பாதையில. ஒங்க அக்கா பக்கத்து வீட்டு குசினியில.

சந்திரன் : என்ன அண்ணே... ஒரு மாதிரியான வாடை

சண்முகம் : ராத்திரி போட்டது. அதுபோக இப்போ 'பிரேண்ட்' மாறிட்டுது. கையில காசிருந்தா கசிப்பு இல்ல கடனுக்கு ஜின்ஜர்

சந்திரன் : ஜின்ஜரா....

சண்முகம் : அதெல்லாம் உனக்கு புரியாது. இன்னும் படிக்குறதுக்கு எவ்வளவோ இருக்கப்பா.... (இந்நேரம் அவ்வழியே ஒருவன் போவதைக் கண்டு) அண்ணேன். என்ன கண்டும் காணாதமாதிரி போறீங்க....

வழிப்போக்கன் : புரட்டாசி விரதம்

சண்முகம் : எனக்கும் சனிக்கிரகம்

வழிப்போக்கன் : அதுக்கு...?

சண்முகம் : குளிக்கனும்.... கோவிலுக்கு போகனும்.... தீர்த்தம் அருந்தனும்...

வழிப்போக்கன் : எனக்குத் தெரியாது... உன் கோவிலும்... தீர்த்தமும்..! உன் எழவுக்கு பயந்துதானே இந்தத் தெருப்பக்கமே வர்றதில்ல. இந்தா புடி.... (காசு தருகிறார்) நான் வர்றேன்... (போகிறார்)

சண்முகம் : தொலைஞ்சி போங்க... பிச்சைக்காரப் பய. அஞ்சுரூபா கொடுத்துட்டு போறான்... டோப்ப போடலேன்னா கோட்டாவையும் கொறைச் சிருவானுக...

சந்திரன் : உங்களுக்கு புத்தியே இல்ல அண்ணேன்....

சண்முகம் : (பண்டிதரைப்போல்) மது உள்ளே போனவுடன் மதி வெளியே போய்விடுகிறது. தம்பி சந்திரா.... ஒங்கிட்ட நெறைய பேச இருக்கு... ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணு. அதோ அந்த பைப்புல மொகத்தை கழுவிட்டு வந்துடுறேன்.

(சந்திரன் தலையை அசைக்க சண்முகம் போகிறான். வழக்கமாக அந்த இடத்தில் தொழில் பார்க்கும் கிளிஜோஸியக்காரன் வருகிறான். தன் தொழிலுக்கான ஆயத்தங்களைச் செய்கிறான்.)

கிளி ஜோஷ்யர் : என்ன தம்பி... கிளி ஜோஷியம் பார்ப்போமா...?

சந்திரன் : (எரிச்சலுடன்) ஆமா.... இங்கே கிழியிற கிழிச்சலுக்கு கிளி ஜோஷ்யம் ஒன்னுதான் கொறைச்சல்....

கிளி ஜோஷியர் : என்னப்பா கலாஜோதி மாதிரி பேசுறியே...

சந்திரன் : சந்தேகமில்லாம அவரோட சிஷ்யன் தான். அவருக்காகத்தான் நிக்கிறேன்.

கிளி ஜோஷியர் : எங்கே போயிடப் போறாரு. சுத்தி சுத்தி இங்கதான் நிப்பாரு... ஒன்னு புள்ளையாரு கோவிலடி.... இல்லேன்னா தம்பையா சத்திரம்... அங்கேயும் இல்லேன்னா... சந்தேகமே இல்லாம சிரிசேனவோட சாராயக்கடைதான்... அந்த ஸ்பொட்டுலேயும் இல்லேன்னா

சண்முகம் : (வந்துகொண்டே) இரை தேடப் போயிருப்பார்னு அர்த்தம்...

சந்திரன் : இதென்ன வாழ்க்கை...?

சண்முகம் : யாசக வாழ்க்கை... ஒரு வகையில பார்த்தா இது கூட ஒரு யாகம்.

சந்திரன் : (வெறுப்புடன்) யாகமும் – யோகமும்... சரிசரி வாங்க ஏதாவது சாப்புடுவோம்

சண்முகம் : என்ன அவசரம். பொறுத்து சாப்புடலாம் (இருவரும் சற்று அப்பால் போகிறார்கள்)

சண்முகம் : இப்படி உட்காரு...

சந்திரன் : இங்கேயா உட்காரப் போறீங்க....?

சண்முகம் : என் திறமைக்கு எங்கேஹும் உட்காரலாம்... உட்கார வேண்டிய இடத்துல என்னை உட்காரவைச்சிட்டா.... ஏற்கனவே உட்கார்ந்து இருக்கிறவங்க... என் முன்னால எந்திரிச்சி நிக்கவேண்டி வருமேன்னு....

என்னை இங்கே உட்காரவைச்சிட்டாங்கப்பா... நீ தைரியமா உட்காரு... இது கடவுள் இருக்கிற இடம்....

சந்திரன் : அதிருக்கட்டும்.... அக்கா எப்படி இருக்காங்க...?

சண்முகம் : பூத்துக் குலுங்க வேண்டிய காலத்துல பட்டுப்போய் நிற்கிறா.... மல்லிகைப் பூ மாதிரி சுபாவம். எல்லாரையும் சுலபத்துல அட்டையா ஒட்ட வைக்கிற பேச்சு... எல்லாமே போச்சு. சௌமியா இப்போ வெளியில வர்றதே அபூர்வம். எந்த நேரமும் படுக்கைதான். வெறுந்தரையில் சுவறைப் பார்த்துகிட்டே சுருண்டு படுத்துகிட்டு விருப்பா... ஏதாச்சும் கொண்டுபோய் கொடுத்தா உண்டு... இல்லேன்னா... ஒரு தண்ணீர் சொட்டுக்குக்கூட அடுத்து வீட்டுக்குப் போக மாட்டா...

சந்திரன் : நடிகைகள் யாருமே வரமாட்டாங்களா...?

சண்முகம் : இருந்துட்டு எப்பவாவது வருவாங்க... வாசல்படி இல்லாத வீடு எங்கேதான் இருக்கு...?
(ஒருவன் கிளிஜோஷ்யம் பார்க்கிறான்)

சந்திரன் : உங்க வீட்டுக்குத்தான் வாசலே கிடையாதே....?

சண்முகம் : தம்பி! பேமன்டை எலக்காரமா நினைச்சிடாதே... தெருவிளக்குல படிச்சவங்க 'லைப் ஸ்டோரி'களையும் மறந்திடாதே....

சந்திரன் : தெருவிளக்குக்கு கீழே படிச்சவங்களுக்கு சரித்திரம் இருக்கு... படுக்குறவங்களுக்கு தரித்திரந்தான் மிஞ்சும். ஆனா... நின்னுகிட்டு இருக்கிறவங்க நிலமையே வேற...!

சண்முகம் : என்ன செய்யலாம்... ராத்திரி வீட்டுக்குப்போனா... உங்க அக்கா என்னோட முகம் கொடுத்து பேசுறதே இல்ல....

சந்திரன் : (சிரித்தவாறு) என்ன அண்ணேன்... இத்தனை வயசுக்கப்புறமும் மனைவி முகம் கொடுத்து பேசலேன்னு வருத்தப்படுறீங்களே....

சண்முகம் : சந்திரா! தாம்பத்ய உறவுகளுக்கு வயசா முக்கியம் மனசு தான் முக்கியம். அதுலேயும் ஒரு

கலைஞனோட உணர்வுகளும் – உணர்ச்சிகளும் ஒரு சராசரி மனுஷனைவிட மாறுபட்டது. என் வீட்டுக்கு ஆசைக்காக ஒரு டி.வி. ரேடியோக் கூட நான் வாங்கினது இல்ல, வாங்குறதுக்கு வக்கும் இல்லே ஆனா... வீதியில இருக்கிற டி.வி.யில ஒலி ஒளி பார்க்கிறப்போ – ஹீரோவும் ஹீரோயினும் கொஞ்சுறதும் – கட்டிப்புடிச்சிகிட்டு ஊருள்றதும் பார்க்க சகிக்கல்லே... என் வாழ்க்கையில அனுபவிக்கக் கிடைக்காத சுகம்...! அதைப் பார்க்கிறப்போ என் நெஞ்சு கொதிக்குது...

சந்திரன் : உங்களுக்குத்தான் வளைஞ்சி கொடுத்து போகத்தெரியாதே....

சண்முகம் : செல்வாக்குள்ள சில பெரிய மனுஷங்களைத் தேடிப்போய் நாடே ஒத்துக்கிட்ட எனக்கு நானே சர்டிபிகேட் கொடுத்து," ஐயா..! எனக்கு ஒரு சலுகை காட்டுங்க.. இதுக்கு ஒரு சிபாரிசு பண்ணுங்க..." அப்படீன்னு கேக்கிறதுக்கு என் தன்மானம் ஒத்துக்கல்ல. தலைக்குனிவே ஒரு தரக்குறைவு... அதுலேயும் தரம் குறைஞ்சவங்ககிட்ட தலை குனியிறது தன்மானக் குறைவு...

சந்திரன் : அப்போ ஒவ்வொருத்தர்கிட்ட கைநீட்டுறது மட்டும்....

சண்முகம் : என்னை மதிக்கிறவங்ககிட்ட மடிப்பிச்சை கேட்கிறது மோசமில்ல. என்னை மதிக்கிறவன் மாதிரி நடிக்கிறவன் கிட்ட முழங்கை சொறியிறதுதான் கேவலம். வீட்டு வாசலுக்கு வாய்ப்புகள் வரணுமே தவிர வாய்ப்புகளின் வாசல்களுக்கு திறமைகள் போகக்கூடாது.

சந்திரன் : இது பிடிவாதம்....

சண்முகம் : இல்ல.... உண்மையான கலைஞர்களுடைய பிறவிக் குணம்.

சந்திரன் : சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க.... வசதி படைச்சவருக்கும் – தொழில்னு ஒன்னு இருக்கிற

வங்களுக்கும்தான் இந்தத் துறை சரிபட்டு வரும். உங்களுக்கு எல்லாம் சரிவராது.

சண்முகம் : (உணர்ச்சிவசப்பட்டு – அவனது சேர்ட்டைப் பிடித்து) என்ன நெஞ்சழுத்தம்டா உனக்கு...? என் பணத்தை செலவழிச்சி, இல்ல ஒரு புரொடியூசரப் புடிச்சி நாடகம் போடுறப்போ, ஏங்கிட்ட நடிக்கிறதுதான் நடிப்புக்கு கிடைக்கிற சர்டிபிகேட்னு என் பின்னால சுத்துறப்போ, இந்த புத்தி வரல்ல. உங்களுக்கு முகத்தையும் அதுக்கு ஒரு நிறத்தையும் கொடுத்து பத்திரிகைகள்ல விளம்பரம் வேற கொடுத்தேனே. அப்போ எங்கடா போச்சி இந்த ஞானோதயம்...? டிக்கட் விக்கிறதுல இருந்து ஒவ்வொரு மூலை முடுக்குகள் வரைக்கும் போஸ்டர் அடிச்சி – பசையில குளிச்சி தூக்கம் முழிச்சி ஆரம்பவிழாவுல இருந்து அரங்கேற்றம் வரைக்கும் எல்லாச் சுமைகளையும் நானே சுமந்தேனே, அப்போ எங்கேடா போச்சி இந்த அறிவு.... மனைவி மக்கள் வீடு – வாசல் எல்லாத்தையும் மறந்துட்டு இருபத்துநாலு மணிநேரத்தையும் நாடகத்துக்காக செலவழிச்சேனே... அந்த நேரத்துல "அண்ணே! வசதியா இருக்கிற வரைக்கும் தான் இந்த வௌவால்கள் நட்பு – தொழில்ல இருக்கிறவரைக்கும்தான் இந்த கொக்குகள் கூட்டம்னு அன்னைக்கே சொல்லி இருந்தா... ஒரு பெட்டிக்கடை வைச்சாவது இன்னைக்கு பெரிய மனுஷனா இருந்திருப்பேன். உன்னை.... (வாய்க்குள் முணு முணுக்கிறான்) முகமே இல்லாதவனுக்கு முகவரி என்னால... விலாசமே இல்லாதவருக்கு விசாலமான வாழ்வு என்னால. ஏத்தி வைச்ச ஏணி ஏளனத்துக்கு முன்னால – அறிவு கெட்டமுண்டம். நீயெல்லாம் வெறுந்தண்டம்....."

சந்திரன் : என்னை மன்னிச்சிடுங்க அண்ணே....! உங்க மேல வைச்சிருக்கிற மதிப்பு என் உணர்ச்சியை அற்பத்தனமாக்கிருச்சி...

சண்முகம் : அற்பத்தனமான மனுஷங்களால என் உணர்ச்சியும் அத்து மீறிட்டுதுப்பா.... (பெருமூச்சு) எல்லாம் சரிதான். ஒன்னையும் கண்டுக்காதே... விட்டுரு...

(தூரத்தில் போகும் ஒருவரை கவனிக்கிறான் சண்முகம்) கவிஞரே!... கவிஞரே கொஞ்சம் நில்லுங்க.... (என்றவாறு அங்கிருந்து போகிறான்)

(அவரை எதிர்பார்த்து அங்கும் இங்கும் நடைபோடுகிறான் சந்திரன்)

கிளிஜோஷ்யர் : என்ன தம்பி... நாடகமேடை ராஜாவாட்டம் அங்கேயும் இங்கேயும் நடந்துகிட்டிருக்கீங்க....

சந்திரன் : பேசிக்கிட்டிருந்தவரு திடீர்னு பிச்சி புடுங்கிகிட்டு போயிட்டாரே...

கிளிஜோஷ்யர் : கலைஞரும் கவிஞரும் சந்திச்சா – சுகர்ணோ சூப்பு உமர்கையாம் லைப்பு. நீங்க கேள்வி பட்டதில்ல..

சந்திரன் : புரியலையே....

கிளிஜோஷ்யர் : இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கு....

சந்திரன் : அப்படீன்னா...?

கிளிஜோஷ்யர் : ரெண்டு பேரும் இப்போ மதுசாகரத்தில மூழ்கிகிட்டு இருப்பாங்க

சசந்திரன் : இந்தக் காலங்காத்தாலேயே....?

கிளிஜோஷ்யர் : நல்லாக் கேட்டீங்க போங்க...! வாய் கொப்பளிக்கிற பழக்கம் சில பேருகிட்ட வாழ்ந்துகிட்டு இருக்கிறதே இந்தத் தண்ணியாலதான் தம்பி. இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கு....

சந்திரன் : ஏன் ஜோஷ்யரே.... இப்படிக் குடிச்சா ஈரல் என்னத்துக்கு ஆகும்?

கிளிஜோஷ்யர் : கரைஞ்சு போகும்!

சந்திரன் : அதனால யாருக்கு என்ன நன்மை...?

கிளிஜோஷ்யர் : நன்மை இல்லாம; இருக்கிறதைவிட – தீமை இல்லாம இருக்கிறதுதான் முக்கியம்.

சந்திரன் : நீங்க சொல்றது ஜோஷ்யமா – ஹேஷ்யமான்னு தெரியல்ல.

கிளிஜோஷ்யர் : ஹாஷ்யமாகவே எடுத்துக்கலாம். சிரிக்கனும்; சிந்திக்கனும். இதுதான் நம்மகொள்கை... (எழுந்து அவன் அருகில் வருகிறார்) நீங்களே சொல்லுங்க.... இருதயம் இல்லாம இருக்கிறவங்களைவிட – ஈரல் இல்லாம இருக்கிறவங்களால நாட்டுக்கும் சமூகத்துக்கும் என்ன கேடு வந்துடப் போகுதூங்குறேன்.

சந்திரன் : (சிறிது யோசனை) நத்திங்... ஆப்டர் ஓல் நத்திங்....

கிளிஜோஷ்யர் : இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டி இருக்கு. நம்ம கலாஜோதி அடிக்கடி சொல்வாரு, "குடிக்காதவன் எல்லாரும் யோக்கியமானவன் இல்ல; குடிக்கிறவன் அத்தனைப்பேரும் அயோக்கியனும் இல்ல!" – ஒரு சின்ன உதாரணம் தண்ணிய போட்டா 'டோப்' ஆகும். டோப் ஆனா தலைய கீழ வைக்கனும்.... கீழ வைச்சிட்டா தன்னையும் மறந்திடுவான்; மண்ணையும் மறந்திடுவான். அதனால யாருக்கும் எந்த பாதிப்பும் இல்ல. அந்த வகையில் பார்த்தா சாராயம் ஒரு ஜீவகாருண்ய டொனிக் தம்பி.
(ஒரு கணவனும் மனைவியும் வந்து கிளிக் கூண்டைப் பார்க்கிறார்கள்)

கிளிஜோஷ்யர் : வாங்க சார்... நினைக்கிற சங்கதி – நடக்கப் போற காரியம் எல்லாத்தையும் தெரிஞ்சிக்கலாம். பாருங்க நோனா. மூன்று ரூபாதான்!
(அவர்களிருவரும் போக – அவர் உட்காருகிறார்)

சந்திரன் : (தனக்குள்) இந்த ஜென்மத்துல வரமாட்டார் போலருக்கு.

கிளிஜோஷ்யர் : தம்பி! அண்ணேன் வர்ற வரைக்கும் இப்படி வந்து குந்துங்க

சந்திரன் : இங்கேயா....?

கிளிஜோஷ்யர் : இருந்தா என்னாங்குறேன்...?

சந்திரன் : எனக்கு என்னவோ மாதிரி இருக்கு...!

கிளிஜோஷ்யர் : இதுதான் போலித்தனம்! இங்கே நிக்கிறது கௌரவம்; உட்கார்றது... அகௌரவமா...?

மனுஷனுக்கு விலாசம் இருக்கனும்னா, மனசு விசாலமா இருக்கனும். இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கு.

சந்திரன் : ஏன் ஜோஷ்யரே! இவ்வளவு அற்புதமான கருத்துக்களையெல்லாம் அவிழ்த்து விடுறீங்களே.... இதுகளையெல்லாம் சண்முகம் அண்ணனுக்கு எடுத்துச் சொல்லி அவரை திருத்தக் கூடாதா...?

கிளிஜோஷ்யர் : அவரு தவறான பாதையில போனாயில்ல தடுத்து நிறுத்த முடியும். அவரோட வாழ்க்கைப் பட்டுப் போயிருக்கே தவிர – அவரு ஒன்னும் கெட்டுப் போயிடல்லப்பா. வருமானம் சோர்ந்து போயிட்டா – தன்மானம் சோரம் போயிடும். இந்த ஒரு பாதிப்பு மட்டும் இல்லேன்னா இன்னும் எவ்வளவோ சாதிச்சி இருப்பாரு தம்பி.

சந்திரன் : பொழுது விடிஞ்சி பொழுது போனா – இந்த நாலு தெருவையும் சுத்திகிட்டு இருக்கிறதுதானே இப்போ அவரோட பொழைப்பாப் போயிருச்சி.

கிளிஜோஷ்யர் : அதுல பாதிநாள் என் பக்கத்துலதான் உட்கார்ந் திருப்பாரு. "ஜோஷ்யரே! விடியும் பொழுதாவது என் வாழ்க்கையில ஒரு விடிவை ஏற்படுத்தாதா...?" அப்படீன்னு சொல்லி ஒரு பெருமூச்சு விடுவாரு. அவரோட சோகம் கொஞ்சம் கொறையட்டுமேன்னு அஞ்சுரூபாவ நீட்டுவேன். அதை எடுத்துகிட்டு போய் ஒரு 'ஸ்டேண்டிங் சொட்'டைப் போட்டுடுட்டு, திரும்ப வந்து என் பக்கத்திலேயே உட்கார்ந் துருவாரு. மத்தியானம் ஆனதும் ஆளுக்கு ஒரு 'டிரேம்' மை போட்டுட்டு ஒரு சாப்பாட்டை வாங்கி ரெண்டு பேரும் சாப்பிடுவோம்... சில நேரங்கள்ல கம்பெனி இல்லாம குடிக்க முடியாத சிலபேரு இவரை கூட்டிக்கிட்டு போயிடுவாங்க.

சந்திரன் : குடிக்கு செலவழிக்கிற காசைக் கையில கொடுத்தா, ஒரு குடும்பம் ஒரு நேரமாவது வயிராற சாப்பிடுமேங்கிற நெனைப்பு இந்த ஆறறிவுகளுக்கு தட்டுப்பட மாட்டேங்குதே ஜோஷ்யரே!

கிளிஜோஷ்யர் : அட நீங்க ஒன்னு! பசிக்கு ஒரு டீ வாங்கி கொடுக்க மாட்டானுக, குடிக்க எவ்வளவும் செலவழிப்பானுக. அப்படியும் ஒரு கூட்டம் நடமாடுது. இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டி இருக்கு தம்பி.

சந்திரன் : சாயந்தரம் ஆனதும் சாராயக்கடையிலேயே சரணாகதி. அப்படித்தானே ஜோஷ்யரே?

கிளிஜோஷ்யர் : அதுதான் தப்பு. அவரு அங்கே போறதே தெரிஞ்சவங்க யாராவது இருந்தா செலவு பாட்டுக்கு ஏதாவது தேடலாம்னுதான். இவரைத் தெரியாதவன் எவன் இருக்கான்? அங்கே என்னடான்னா... எவனாவது ஒருத்தன் "வாத்தியாரே! ஒரு பாட்டு பாடுங்களேன்னு கெஞ்சுவான் – கலைக்கு காணிக்கை வைக்கனும்பாரு இவரு. ஒடனே ஒரு கால் வரும் "ஹிஸ் மாஷ்டர் வொய்ஸ்"ல நம்ம 'கிரேம் போன்' பாட ஆரம்பிக்கும்

சந்திரன் : அப்புறம், 'அண்ணேன்!' இன்னொரு 'பாட்டு பாடுங்க' ளேன்னு – அடுத்த டேபல்ல இருந்து ஒரு 'ரிக்குவெஸ்ட்'.

கிளிஜோஷ்யர் : 'ஒசி பாஸ்ல உள்ள நொழைய பார்க்காதீங்க. குரு தட்சணைய வையுங்கன்னு ஒரு போடு போடுவாரு... இன்னொரு அரை!'

சந்திரன் : இப்படியே ஒருத்தன் வசனம் பேசுங்கம்பான்; இன்னொருத்தன் நடிச்சிக் காட்டுங்கம்பான். அவன் அவன் அனுபவிக்கிறதுக்காக ஆளுக்கு ஆள் கால் அரைன்னு வாங்கிக் கொடுப்பானுங்க. இவருக்கு ஒவரானதும் அம்போன்னு விட்டுட்டு போயிடுவானுக.

கிளிஜோஷ்யர் : (தன் தலையில் குட்டிக் கொண்டே...) ஐயோ... ஐயோ... ஐயோ...

சந்திரன் : (திகைத்துப்போய்) என்ன ஜோஷ்யரே! திடீர்னு...?

கிளிஜோஷ்யர் : (சிரித்து) தம்பி! என் தலை இருக்கே... அது ஒரு 'கொமர்ஷியல்' தலை; திடீர்னு ஒரு ஐடியா...?

சந்திரன் : எப்படி...?

கிளிஜோஷ்யர் : எல்லாக் கலைஞர்களும் சேர்ந்து ஒரு லிஸ்டை போட்டு – நாலு பெரிய மனுஷங்களை புடிச்சி 'டொனேசன்' வாங்கி – பொன்விழான்னு அமர்க்களப்படுத்தி கலாஜோதி கையில ஒரு பணமுடிப்பைக் கொடுத்தா எப்படி...?

சந்திரன் : நல்லயோசனைதான்!

கிளிஜோஷ்யர் : கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கிற 'டொனிக்' தான் பரிசுகளும், பாராட்டுகளும்! திறமைசாலிகளை தகுந்த முறையில் கௌரவிக்கத் தவறுதுகூட ஒரு சமூகக் குறைபாடுதான் தம்பி! இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கு.

சந்திரன் : ஒரு கலைஞன்கிட்ட இருக்கவேண்டிய உள்ளமும் உணர்வும் உங்ககிட்டேயும் இருக்கிறதை பார்க்கிறப்போ எனக்குப் பெரிய ஆச்சரியமா இருக்கு ஜோஷ்யரே!

கிளிஜோஷ்யர் : என்ன அப்படி சொல்லிபுட்டீங்க. ஒரு காலத்துல நான்கூட ஒரு கலைஞன்தான் தம்பி. சங்கீதத்தை மொறையா படிச்சிட்டு பாடலாம்னு வந்தேன். வந்ததுக்கப்புறந்தான் தெரிஞ்சுது... டுப்ளிகேட்டுக்கு இருக்கிற மதிப்பு ஒரிஜினாலிட்டிக்கு கிடையாதுங் கிறது. ஒடனே ஒரம் போயிட்டேன். ஒரு கை பார்ப்போம்னு அன்னைக்கு நானும் வைராக்கியமா நின்னு இருந்தா – இன்னைக்கு இந்த கிளிஜோஷ்யம் கூட எனக்குக் கைக்கொடுத்து இருக்காது.... (சந்திரன் எழுந்திருக்கிறான்)

கிளிஜோஷ்யர் : என்ன புறப்பட்டுட்டீங்க...?

சந்திரன் : இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கு... (சொல்லிக் கொண்டே போகிறான்)

கிளிஜோஷ்யர் : சண்முகம் அண்ணாச்சி கலாஜோதி; அவர் சிஷ்யப் புள்ளைங்க எல்லாம் கலாஜாதி (தனக்குள் சிரித்துக் கொள்கிறார்.)

திரை

# காட்சி: பதின்மூன்று

இடம் : கலாஜோதியின் குடிசை

நேரம் : பகல்

குரல் : இருபது வருடங்களுக்குப்பின்....

(திரை மெல்ல விழகுகிறது. எண்பது வயதில் சண்முகம் எழுபது வயதில் சௌமியா இருவரும் வயோதிப தோற்றத்தில்! சாக்குக் கட்டில் ஒன்றில் சண்முகம் உட்கார்த்திருக்கிறார் கீழே அமர்ந்து வெற்றிலை இடித்தவாறு சௌமியா (வெற்றிலை இடித்து சண்முகத்திற்கு தந்து தானும் சாப்பிடுகிறாள், வெற்றிலையை வாயில் குதப்பியவாறு இருவரும் அங்குமிங்கும் உலாவுகிறார்கள், தாங்கள் தனிமையாக்கப்பட்டுவிட்டதை எண்ணி வருந்துகிறார்கள், யாரோ வருவதாக எண்ணி வாசலுக்கு விரைந்து ஏமாற்றத்தோடு திரும்புகிறார் சண்முகம், வெளியில் இருந்து வரும் சப்தத்துக்கு காதுகொடுத்து சந்தோசத்தோடு சென்று பார்க்கிறாள் சௌமியா அவளுக்கும் ஏமாற்றமே, இருவரும் வேதனைகளை பரிமாறிக் கொள்வதுடன் ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்கின்றனர். )

பின்னணியில் : கொடுமை.... கொடுமை... வறுமை கொடுமை
அதனிலும் கொடுமை... வறுமையில் தனிமை
கொடுமை கொடுமை வறுமை கொடுமை
அதனிலும் கொடுமை வறுமையில் தனிமை.

சண்முகம் : ஒரு நாளைக்கு எத்னைபேர் என்னைத்தேடி வருவாங்க... இப்போ ஒருத்தரையுமே காணோமே...

சௌமியா : நாடக ஒத்திகைக்குப் போனா எவ்வளவு சந்தோஷமா இருக்கும்...? ஒரே கேலியும் கிண்டலும் கும்மாளமுமா... ஊம்... (பெருமூச்சு) அது ஒரு காலம்..

சண்முகம் : அம்மா சௌமியா... கொஞ்சம் இப்படிவா... நல்லா காதை கொடுத்து கேளு... யாரோ சப்பாத்து போட்டுகிட்டு நம்ம வீட்டுக்குத்தான் வர்றாங்க... (வாசலுக்குப் போய்ப் பார்த்து – ஏமாற்றத்தோடு) எவனோ எதிர்த்த வீட்டுக்குப் பேறான்ம்மா.... அந்தக் காலத்துல 'லரோலா' என்றொரு சாமான் இருந்தது. முகத்துல பூசினா சுருக்கமே இருக்காது

சௌமியா : இந்த நாடகக்காரிகளாவது வர்றாளுகளா... பழைய கதைகளையாவது... பேசிக்கிட்டு கொஞ்சநேரம்

தமாஷா இருக்கலாம்... (நாய்குரைக்கும் சப்தம்) என்னாங்க நாய் குரைக்குது... நடிகைகள் யாராவது வர்றாங்களோ...? இருந்தாலும் இருக்கும்... எங்களைப் பார்க்கிறதுக்காகத்தான் இருக்கும்... (ஆவலோடு வாசலுக்கு செல்கிறாள்) அடிப்பாவி மக அடுத்த வீட்டுக்கு இல்ல ஒரு ஆடுகாளி போறா

சண்முகம் : பத்திரிகைக்கு பேட்டி கேட்டு ஒருத்தன் வருவான். சிறப்புமலருக்கு ஒரு 'ஆர்டிகல்' தாங்கன்னு இன்னொருத்தன் வருவான். ஒரு அனுதாபசெய்தி எழுதிக்கொடுங்கன்னு ஒருத்தன் வருவான். ஒரு அறிக்கை தயார் பண்ணனும்னு வேறொருத்தன் வருவான். இப்படி ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருவாங்க. இப்போ ஒருத்தரையுமே காணலியே.

சௌமியா : பாடுன வாயும் ஆடுன காலும் சும்மா இருக்காதுன்னு சொல்லுவாங்க. அந்த நாளையில எத்தனை அழைப்பு வரும். இப்போ ஆசைக்கு ஒரு நாடகமாவது பார்க்கக் கூப்புடுறாங்களா...?

சண்முகம் : விளம்பரத்து ஐடியா கேட்பாங்க... போஸ்டருக்கு ஒரு டிசைன் வேணும்பாங்க மகஜருக்கு பொயிண்ட் கொடுங்கம்பாங்க... மந்திரிக்கு ஒரு டிராப்டப் போடுங்கம்பாங்க. இப்போ எது ஒன்னுக்கும் எவருமே வர்றாங்க இல்ல. குடியை விட்டதும் கூட்டாளிமாரும் திரும்பிப் பார்க்க மாட்டேங்குறாங்க... அதோ... அதோ... யாரோ பேசிக்கிட்டு வர்றாங்க.... நம்ம வீட்டுக்குத்தான் வர்றாங்க... நம்மளைப் பார்க்கத்தான் வர்றாங்க... (வேகமாகப் போய்ப் பார்க்கிறார்) பொழைப்பத்த பசங்க தண்ணிய போட்டுகிட்டு தலைகால் தெரியாம போறானுக.

சௌமியா : கலாராணி நேசராணி மகேஸ்வரி எல்லாம் புள்ளைங்களையும் கட்டிக் கொடுத்து இப்போ பேரன் பேத்திகளை மடியிலே வைச்சி கொஞ்சிகிட்டு இருப்பாங்க.... அந்தப் பாக்கியமும் நமக்கு இல்லாமப் போயிடிச்சி... கொள்ளிக் குடம் உடைக்க

இருந்தவனையும் குழியில் வைச்சிட்டோம். வாய்க்கரிசி போட இருந்தவனையும் தூக்கி வளர்க்க கொடுத்துட்டோம். ஏம்புள்ளை எங்கே இருக்கானோ... எப்படி இருக்கானோ....? (முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்)

சண்முகம் : (சௌமியாவை தேற்றும் வகையில்) சௌமி... காப்பிக்கு சீனி இல்லியேன்னு கவலைப்படாதேம்மா சீனிவியாதி இல்லாம இருக்கோமேன்னு சந்தோசப்படும்மா.

சௌமியா : இல்லேங்க திடீர்னு ஒரு நெனைப்பு வந்திருச்சி...

சண்முகம் : ஆரம்பவிழாவா இருந்தாலும் சரி – விமர்சனக் கூட்டமா இருந்தாலும் சரி... பாராட்டு வைபவமா இருந்தாலும் சரி, தேர்தல் பிரச்சாரமா இருந்தாம் சரி எல்லாத்துலேயும் பேசுறதுக்கு என்னைத்தான் கூப்பிடுவாங்க. இப்போ எட்டிகூட பார்க்குறாங்க இல்ல... (வேதனை கலந்த சிரிப்பு)

சௌமியா : கலாஜோதி பேச்சுக்குத்தான் மவுசு இருக்கு... அவரு பேச்சுக்குத்தான் கூட்டம் சேரும்னு எத்தனைபேர் சொல்வாங்க... இப்போ மத்தவங்க பேச்சையாவது கேட்கலாம்னா கூப்புடுறதுக்கும் ஒரு நாதியில்ல... (நிலத்தில் சாய்கிறாள்)

சண்முகம் : ஒரு நாடகத்தை துவங்கி அதை நடத்தி முடிக்கிறபோது ஏற்படுற சுகம்... ஒரு பிரசவ சுகம். பெத்த புள்ளைய உயிரோட பார்க்குற மகிழ்ச்சி. பாட்டும் ஒத்திகையும் கூத்தும் கும்மாளமுமா எவ்வளவு சந்தோசமா இருக்கும். அது ஒரு தனி உலகம். ஆர்மோனியம் தபேலா சத்தம் ஒரு தடவையாவது காதுல விழுந்தாத்தான் அன்னைக்கு ராத்திரி ஒழுங்கா தூக்கம் போகும்... (பெருமூச்சு) அது ஒரு காலம்..... குஞ்சு.... குஞ்சு.... (சௌமியாவுக்கு சிறு உறக்கம்) அதுக்குள்ள ஒரு தூக்கம்... தரித்திரம் புடிச்ச தூக்கம்... அம்மா.... அம்மா....

சௌமியா : (எரிச்சலுடன் எழுந்தவாறு) என்னப்பா...

சண்முகம் : அந்தக் காலத்துல 'லரோலா' என்றொரு சாமான் இருந்தது. கொஞ்சம் பூசினா போதும்...

சௌமியா : இதை சொல்றதுக்கா இவ்வளவு அவசரமா எழுப்புனீங்க. நீங்களும் ஒங்க 'லரோலா'வும்...
(சைக்கிள் மணி சத்தம் ஒலிக்கிறது)

சண்முகம் : சைக்கிள் மணி

சௌமியா : யாரோ வர்றாங்க

சண்முகம் : எங்களைப் பார்க்கிறதுக்காகத்தான் இருக்கும்

சௌமியா : நீங்க இருங்க நான் போய் யாருன்னு பார்த்துட்டு வர்றேன்.
(வெளியே போய் ஒரு கடிதத்துடன் வருகிறாள்)

சௌமியா : என்னாங்க? கடிதம் வந்திருக்குங்க...

சண்முகம் : கடிதமா.... யாரு... அனுப்பி இருக்காங்க

சௌமியா : (மேலுறையைப் பார்த்து) எஸ். சதீஷ்குமார்.. சதீஷ்குமார்.... (பெருமிதம் சந்தோசம் மிளிர) என் புள்ளை அனுப்பி இருக்கான்.

சண்முகம் : நம்ம மகனா.... இத்தனை வருஷத்துக்கப்புறமா... (ஆவலோடு) என்ன எழுதி இருக்கான்னு பாரு....
(கடிதத்தை உடைத்துப் பிரித்துப் பார்க்கிறாள்)

சௌமியா : பொடி எழுத்தா இருக்கே... உங்க கண்ணாடிய கொஞ்சம் கொடுங்க.... (சண்முகத்தின் கண்ணாடியை வாங்கி சௌமியா போட்டுக்கொள்கிறாள்)

சௌமியா : (வாசிக்கிறாள்) அன்புள்ள அப்பா அம்மாவுக்கு... (மௌனமாக வாசிக்கிறாள்) அடுத்த மாசம் பொண்டாட்டி புள்ளைக் குட்டிகளோட எங்களைப் பார்க்க வர்றதா எழுதி இருக்கான்ங்க....

சண்முகம் : அப்படியா... அவனைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு... இன்னும் என் கண்ணுக்குள்ளேயே இருக்கான்...

(சௌமியா கண்ணாடியைத் தருகிறாள். நடிகர் சந்திரனும் கலாபிமானி செந்தில்நாதனும் வருகிறார்கள்)

சந்திரன் : (வந்து கொண்டே) வணக்கம் ஐயா...

சண்முகம் : யாரு.... நம்ம சந்திரன் குரல் மாதிரி இருக்கே...?

சந்திரன் : ஆமாய்யா...

சண்முகம் : இவரு யாருப்பா....

செந்தில்நாதன் : மறந்துட்டீங்களா மிஷ்டர் சண்முகம் நான் தான் செந்தில்நாதன்

சண்முகம் : அடடே... நம்ம கலாபிமானி...

இருவரும் : வணக்கம் அம்மா

சௌமியா : வணக்கம்

சண்முகம் : என்னப்பா சந்திரா.... உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு... உங்களுக்கு எல்லாம் எங்க ஞாபகமே இல்லாமப் போச்சே... பரவாயில்ல... இப்பவாவது நினைவு வந்திருக்கே....

சந்திரன் : எப்படி ஐயா சுகமா இருக்கீங்களா....?

சண்முகம் : ஏதோ இருக்கோம்ப்பா.... கடவுள் புண்ணியத்துல! வயசாயிருச்சி... பார்வையும் போயிருச்சி... கண்ணாடியும் பழசாப்போச்சு..... கண்ணுல வேற சவ்வு வளர்ந்திருக்கு. ஆப்ரேஷன் பண்ணிக்கிட்டா சரியாகும்னு சொல்றாங்க. காடு வாவாங்குது... வீடு போபோங்குது.... இதுல ஆப்ரேஷன் என்ன வேண்டி இருக்கு ஆப்ரேஷன்

செந்தில் : ஏன் சார்... இந்த வயசுலேயும் உங்களுக்கு ஒரு பல்லுகூட விழலியே...

சண்முகம் : அது ஆண்டவனுடைய அருட்கொடை.... உண்மையான கலைஞர்களுக்கு பல்லும் போகாது; சொல்லும் போகாது...

சௌமியா : குடிக்கிறதுக்கு ஏதாவது தண்ணிவெண்ணி வைச்சித் தரட்டுமா தம்பி....

செந்தில் : உங்களுக்கு ஏம்மா வீண்சிரமம்... நீங்க கேட்டதே குடிச்ச மாதிரிதான்...

சந்திரன் : ஏன்யா செலவு பாட்டுக்கு என்ன பண்ணுறீங்க....?

சண்முகம் : சந்திரா.... மரத்தை வைச்ச அன்னைக்கு தண்ணிய ஊத்திட்டு, அடுத்த நாள் அதை மறந்திடுறவங்க மரம் வளர்ப்போம்னு பிரச்சாரம் பண்ணுறவங்களே தவிர இந்த பிரபஞ்சத்தை படைச்சவன் இல்லேப்பா....

சௌமியா : நாடகம் பார்க்குறதுக்கு ரொம்ப ஆசையா இருக்குப்பா.... யாராவது வந்து ஒரு டிக்கட்கூட தர்றாங்க இல்ல.... நீங்களாவது கூப்பிடக் கூடாதா..?

சந்திரன் : இப்போ யார் நாடகம் போடுறாங்க.... எங்கே பார்த்தாலும் ஒரே ஒலி ஒளியும் டெலிடிராமாவும்தான்.

செந்தில் : தங்களை ரஜனிகாந்தாகவும் – ராதிகாவாகவும் நெனைச்சிகிட்டு – ஒருத்தரை ஒருத்தர் கட்டிப்பிடிச்சிட்டு ஆடுறாங்க.... இதுல நீங்க என்னத்தை சார் பார்க்கப் போறீங்க....

சண்முகம் : ஏன் அதுகளை பார்த்தா இந்த கிழவனும் கிழவியும் கெட்டுப் போயிருவாங்கன்னு நினைக்கிறீங்களா.... (மூவரும் சிரித்தல்) ஒரு தமாஷுக்கு சொன்னேன்... (சௌமியா வெற்றிலை இடிக்கிறாள்)

செந்தில் : என்ன மிஷ்டர் சந்திரன்.... இன்னும் வந்த விஷயத்தை சொல்லாம இருக்கீங்களே...

சண்முகம் : என்னப்பா... என்ன விஷயம்....

சந்திரன் : அதாவது.... ஐயாவ பாராட்டிக் கௌரவிக்கிறதுக்கு ஒரு ஏற்பாடு பண்ணியிருக்கோம்.

சண்முகம் : சந்தோசம். பாராட்டும் கௌரவமும்தான் ஒரு கலைஞனோட ஆத்மாவுக்கு தீனி. அப்புறம் சொல்லுங்க.

செந்தில் : வாழும் போதே கலைஞர்களை வாழ்த்தனும்ங்கிற கொள்கைப் பிடிப்போட ஒரு சங்கத்தை ஆரம்பிச்சி இருக்கோம்.....

சந்திரன் : செத்த பிறகு சிலை எழுப்புறதால எந்த பிரயோசனமும் இல்ல.....

செந்தில் : அதனால... உயிரோட இருக்குறபோதே உங்களுக்கு ஒரு சிலை வைச்சி பார்க்க ஆசைப்படுறோம்.

சண்முகம் : (சிந்தனையில ஆழ்கிறான்)

செந்தில் : என்ன யோசிக்கிறீங்க....

சண்முகம் : இல்ல... பூமியை வீடாகவும்.... வானத்தை கூரையாகவும் கொண்டு வாழ்றவன் தான் கலைஞன்ங்கிறதை உலகத்துக்கு எடுத்துக் காட்டுறதுக்கு இதைவிட நல்ல ஐடியா இருக்கான்னு பார்த்தேன். இதுவே போதும்னு தோணுது. அதுசரி... சிலையா நின்னுட்டா.... கொழுத்துற வெய்யில்ல காஞ்சி – கொட்டுற மழையில நனைஞ்சிகிட்டு இருக்கனும். அதுகூட பரவாயில்ல தீட்டுபடாம இருக்கிறதுன்னா! ஆனா இந்த காக்கா குருவி எல்லாம் எச்சங்களைப் போட்டு அசிங்கப்படுத்துமே...

சந்திரன் : ஐயாவை கௌரவப்படுத்தனும்ங்கிறதுதான் என்னுடைய ஒரே நோக்கம்...

சண்முகம் : நான் ஒன்னும் தப்பாச் சொல்லல்ல....

சௌமியா : ஆமா தம்பி.... இதுக்கெல்லாம் எவ்வளவு செலவாகும்....

செந்தில் : அறுபதுனாயிரம் ரூபாவுக்கு "எஸ்டிமேட்" போட்டுருக்கோம்....

சௌமியா : (ஏக்கம்) ஆங்.... அறுபதாயிரமா... (பெருமூச்சு) அறுபது ரூபாவை இந்தக் கையில பார்த்து எவ்வளவு நாளாச்சு....

சண்முகம் : ஏன் சந்திரா.... இப்படி செய்தா எப்படி...?

சந்திரன் : சொல்லுங்க ஐயா

சண்முகம் : அந்த அறுபதுனாயிரத்தையும்... எங்க கையில கொடுத்துருங்க. நாங்க ரெண்டுபேரும் நீங்க சொல்ற இடத்துல எல்லாம் வந்து சிலையா நிக்கிறோம்.

செந்தில் : அது மரியாதை இல்ல... அது மரியாதை இல்ல...

சந்திரன் : ஐயா இது என் இலட்சியத்தோட நீண்ட பயணம்; நெடுநாள் கனவு....

செந்தில் : நீங்க சம்மதிச்சா.... எங்க முயற்சிக்கு பௌர்ணமி... இல்லேன்னா அமாவாசை

சண்முகம் : (சிறிய சிந்தனைக்குப் பின்) சரி....

சந்திரன் : (உணர்ச்சிப் பெருக்கோடு) ரொம்ப நன்றி ஐயா... ரொம்ப நன்றி...

(சண்முகத்தின் கைகளிரண்டையும் பிடித்து கண்களில் ஒத்திக் கொள்கிறான் சந்திரன். பின்னர் அவர்கள் இருவரும் அங்கிருந்து போகிறார்கள்)

(மேடையில் இருள் சூழ்கிறது)

## காட்சி: பதின்நான்கு

இடம் : சண்முகத்தின் குடிசை
நேரம் : மாலை

(ஒரு தோளில் பொன்னாடை தொங்க - பரிசுப் பொருட்களை ஒரு கையில் ஏந்தியவாறு 'கோட்டும் சூட்டுமாக' கைத்தடியை ஊன்றியவாறு உள்ளே நுழைகிறார் சண்முகம். ஆச்சரியத்தோடு பார்க்கிறாள் சௌமியா)

சண்முகம் : (வந்து கொண்டே) சௌமி....

சௌமியா : (சிரித்தவாறு) அடேங்கப்பா... ஆளே மாறீட்டீங்களே இது என்ன கோலங்க...

சண்முகம் : (பெருமிதத்தோடு) இதுதான் விழாக் கோலம்... இதைப் புடி... (ஒரு பையை கொடுக்கிறார்)

சௌமியா : என்னங்க இது....

சண்முகம் : நான் இங்கேயிருந்து போறப்போ உடுத்துகிட்டுப் போன வேட்டியும் ஜிப்பாவும். இதெல்லாம் விழாவுல கெடைச்ச பரிசுகள் (பரிசுப் பொருட்களை தருகிறார்) சௌமி! இந்த டிரஸ் எப்படி இருக்கு அழகா இல்ல...

சௌமியா : ('வயதுபோன' வெக்கத்துடன்...) என் கண்ணே பட்டுரும் போலருக்கு...

(தன் கழுத்தில கிடந்த மாலையை அவள் கழுத்தில் போடுகிறார்)

சண்முகம் : இப்போ... நீ கூடத்தான் வடிவா இருக்கே...

சௌமியா : அட சும்மா இருங்கன்னா... அடுத்த வீட்டுக்காரங்க காதுல விழுந்தா... அர்த்தமே வேறாயிடும்....

சண்முகம் : ஒனக்கு ஒரு கதை தெரியுமா....? எனக்கு வைக்கப்போற சிலை அழகா அமையனுங் கிறதுக்காக... இந்த கோட்டையும் சூட்டையும் போட்டுக்கச் சொல்லி, ஒவ்வொரு போஸ்ல நிக்கவைச்சி என்னைப் படம் பிடிச்சாங்க....

சௌமியா : ஏங்க அந்தப் படங்களை கேக்கலையா....

சண்முகம் : கேக்காம இருப்பேனா என் சௌமி பார்த்தா அப்படியே சொக்கிப் போயிடுவான்னு சொன்னேன்; பிரிண்ட்டு போட்டு அனுப்பி வைக்கிறோம்னு சொன்னாங்க.... சௌமி... சௌமி... இந்த நிகழ்ச்சிக்கு எத்தனை பேர் வந்திருந்தாங்க தெரியுமா...?

சௌமியா : எனக்குத் தெரியாதாக்கும். கலை இலக்கிய கூட்டத்தோட தலைவிதியே முப்பது நாப்பது பேர்தானே...

சண்முகம் : அதுதான் இல்லா... மண்டபத்துல உட்கார்றதுக்கு ஒரு சீட்டுகூட கிடையாது... அவ்வளவு ஜனம் – அதுலேயும் பாதிப்பேர் யுனிவர்ஸிட்டி ஸ்டூடன்ஸ்.

சௌமியா : பெரிய மனுஷங்க எல்லாம் பெரிசா பேசி இருப்பாங்களே...

சண்முகம் : அவுங்க என்ன இல்லாததையா சொல்லப் போறாங்க... இருக்கிறதைத்தானே சொல்வாங்க. அவுங்க

ஒவ்வொருத்தர் பேச்சையும் கேட்கிறப்போ – எனக்குள்ள இவ்வளவு திறமையான்னு நானே என்கிட்ட கேட்டுகிட்டேன். அதையெல்லாம் கேட்குறதுக்கு உனக்குத்தான் கொடுத்துவைக்கல்ல..

சௌமியா : உங்க திறமைக்கு கழுத்துல மாலை போடத்தான் அவுங்களால முடியும். கழுத்தை நீட்டுறதுக்கு என்னால மட்டுந்தான் முடியும். மறந்திடாதீங்க...

சண்முகம் : (குழைவாக) அதையும் மறக்கல்ல... ஒன்னையும் மறக்கல்ல... (அவளின் நாடியைப் பிடிக்கிறார்)

சௌமியா : ஊக்கும் புள்ளை இல்லாதவன் வீட்டுல கிழவன் துள்ளி வியைாடுற மாதிரி நீங்க கிள்ளி விளையாடிகிட்டு....! இளமை திரும்புதோ....

சண்முகம் : (சற்று இளமை உணர்வோடு) என்னைக்கும் கலைஞன் இளமையானவன்தாண்டி. அதில்லே குஞ்சு... கூட்டத்துல திடீர்னு ஒருத்தர் எந்திரிச்சி.... "பெரிய நடிகர்னு சொல்றீங்களே – அஞ்சு நிமிஷம் ஆடாம அசையாம சிலைமாதிரி நின்னுகாட்ட முடியுமா"ன்னுட்டாரு....

சௌமியா : அதைக் கேட்டுகிட்டு சும்மாவா இருந்தீங்க....?

சண்முகம் : (சிறிது கம்பீரத்தோடு) கலாஜோதியா கொக்கான்னேன்! நான் எப்படி நின்னேங்கிறதை இப்போ நீயும் பார்த்துக்க....
(நெஞ்சை நிமிர்த்தி சற்று முன்னால் நடந்து வந்து சிலைபோல் நிற்கிறார்.)

பின்னணியில் (பாடல்) :

காவியக் கலைஞர் எல்லாம்
கண்ணீரின் விலை ஆனார்
கலைவளர்த்த பெருமகனும்
கல்லிலே சிலை ஆனார்
புலமையும் திறமையும்
புதுவெள்ளம் ஆனாலும்
வறுமையும் கண்ணீரும் – கலைஞரின்
வரலாற்றுச் சீதனமே

சௌமியா : என்னங்க... என்னங்க

சண்முகம் : ஊம்.....

சௌமியா : ஒரேயடியா சிலையா சமைஞ்சிட்டீங்களே.....

சண்முகம் : அந்த சிலையைப் பார்க்கிறதுக்கு நான் உயிரோட இருப்பேனா என்னவோ....

சௌமியா : (கேவிக்கேவி அழுகிறாள்)

சண்முகம் : என்னம்மா இது ஒப்பாரி வைச்சிட்டே.... சொல்லும் வார்த்தைக்கெல்லாம் கொல்லும் சக்தி இருந்தா உலகம் எப்பவோ சுடுகாடாகி இருக்கும். அதுவும் போக எனக்கு நூறுவயசுன்னு நம்ம கிளி ஜோஷியக்காரரு எப்பவோ சொல்லிட்டாரு... அது கெடக்கட்டும். இன்னொரு விஷயம் தெரியுமா ஒனக்கு....

சௌமியா : சொன்னாத்தானே தெரியும்

சண்முகம் : ஒரு பல்கலைக்கழக மாணவன் எந்திரிச்சி இருபது வருஷத்துக்கு முன்னாடி நடிச்ச ஒரு நாடகத்தை இப்போ அதே மாதிரி நடிக்க முடியுமான்னு கேட்டான்.

சௌமியா : பழசுகளைப் பத்தி இளசுகளுக்கு எங்கே தெரியப்போகுது....

சண்முகம் : இருபது வயசுலேயே அறுபதுவயசு கார்ரெக்டரை நடிக்க முடியும்னா... ஏன் அறுபதுல இருபதா நடிக்க முடியாதுன்னு ஒரு போடு போட்டேன். அவனும் விடல்ல.. 'சொல்ல முடியும்; செய்து காட்ட முடியுமா'ன்னான். இது செலேன்ஜ்! நடிச்சேன் நடிச்சி முடியிறப்போ மண்டபம் முழுதும் ஒரே மயான அமைதி.

சௌமியா : ஏன்....?

சண்முகம் : எல்லாரும் மௌனமா கண்ணீர் வடிச்சிட்டு இருந்தாங்க

சௌமியா : ஏங்க... எந்த நாடகத்தை நடிச்சிக் காட்டுனீங்க....

சண்முகம் : உன்னை கல்யாணம் கட்டுறதுக்கு முன்னாடி நடிச்ச நாடகம். "ஒரு மனிதன் – ஒரு வழக்கு – ஒரு தீர்ப்பு" இதுதான் அந்த நாடகத்தோட பேரு. அதுல "வன் மேன் எக்ட்" அதாவது தனி மனித நடிப்பு. நீயும் அதை பார்த்திருக்க முடியாது...

சௌமியா : நானும்... உங்க நடிப்பைப் பார்த்து எவ்வளவோ காலமாச்சு...

சண்முகம் : இப்போ ஒனக்காக நடிக்கிறேன் பாரு... அப்புறமா சொல்லு... என் வொய்ஸ் – எக்டிங் எல்லாம் அன்னைக்கு மாதிரியே இன்னைக்கும் இருக்குதா இல்லையான்னு...! (கதை சொல்லும் பாணியில்) கிரேட் கிரிமினல் லோயர் சக்ரபாணின்னு ஒரு ஒருத்தர். அவர் எடுத்துகிட்ட எந்த கேஸுலையும், அவர் ஜெயிக்காம இருந்ததில்ல. தான் காதலிச்ச பொண்ணு தன் இஷ்டத்து இணங்க மறுத்தால அவளை கொலை செய்ததா ஒரு இளைஞன்மேல குற்றச்சாட்டு. அதை நிரூபிச்சி அவனுக்குத் தண்டனை வாங்கி கொடுக் கிறதுக்காக... மனுதார் தரப்புல ஆஜராகி வாதாடுறாரு– சக்ரபாணி... (கனைத்துக் கொள்கிறார்)

## ஒரு மனிதன் ஒரு வழக்கு ஒரு தீர்ப்பு – தனி மனித நடிப்பு

சக்ரபாணியாக சண்முகம் :– (நடித்துக்காட்டுகிறார்) கனம் கோர்ட்டார் அவர்களே...! குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இதோ இந்த மதன்குமார் ஒரு கிரிமினல் பேர்வழி. தன்னை ஒரு மன்மதனாக நினைத்துக் கொண்டு எத்தனையோ இளம் சிட்டுக்களுக்கு வலை விரித்திருக்கிறார். அவரால் பாதிக்கப்பட்ட பருவப்பெண்களின் சாட்சியங்கள் எல்லாம் ஜோடிக்கப்பட்டவை அல்ல. இவரது ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி அள்ளிக் கொடுத்து அல்லல்பட்ட பைங்கிளிகளும் உண்டு; பள்ளிகொண்ட காரணத்தால் துன்பப்பட்ட பூங் கொடிகளும் உண்டு; அதேபோல் தான் இவரது பசப்பு

மொழிகளால் தன் உள்ளத்தை மட்டும் அல்லாமல் உடலையும் உயிரையும் பலியாக்கிக் கொண்டிருக் கிறார் பவித்ரா. பவித்ரா ஒரு சாதாரணப் பெண்ணல்ல, ஒரு செல்வச் சீமானின் திருமகள். ஒரு சௌந்தர்ய தேவதை. அந்த தேவதையின் கொள்ளை அழகிலே மயங்குவதுபோல் நடித்து அவரது சொத்துக்களை கொள்ளை யடிப்பதற்கு எப்படி எப்படி எல்லாம் சதித்திட்டம் தீட்டி இருந்தார் என்பதை தகுந்த ஆதாரங்களுடன் ருஜுப்படுத்தி இருக்கிறேன். ஒரு உத்தமப் பெண்ணின் கற்பை சூறையாடிவிட்டால், அதைவைத்து பிளெக்மெயில் பண்ணலாம். பணத்தைக் கறக்கலாம் என்ற திட்டம் போட்டார். அதற்கு உடன்படவில்லை அந்தப் பெண். எனவே அவசரப்பட்டார். அறிவை இழந்தார். ஆத்திரத்தால் சுட்டுக்கொன்றார். இதனை பிரேத பரிசோதனை யாளர்களும், கைரேகை நிபுணர்களும் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்கி உள்ளார்கள். இந்த மாதிரியான சமூகத்துரோகிகளை தண்டிக்காது விட்டால் நாட்டில் அராஜகமும் வன்முறையும் அரசோச்சும் என்பதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். கொடுமைகளுக்கு முடிவு கட்ட வேண்டுமானால் கொடிய மிருகங்களுக்கு கருணை காட்டாமல் கடுமையான தண்டனை விதிக்கும்படி கோர்ட்டார் அவர்களைக் கேட்டு கொள்கிறேன். தெட்ஸ் ஓல் யுவர் ஓனர்.

சண்முகம் : (சௌமியாவிடம்) தொகுப்புரை எல்லாம் முடிஞ்சிது... அவனுக்கு மரண தண்டனைன்னு தீர்ப்பு எழுதப்பட்டதும்.... வெறிபிடிச்சவன் போல கத்த ஆரம்பிச்சிட்டான். எப்படித் தெரியுமா...?

மதன்குமராக சண்முகம்: நோ... ஐ எம் நொட் ஏ மார்டரர்! நான் கொலைகாரன் இல்ல. நான் கொலைகாரன் இல்ல. சத்தியமா நான் கொலைகாரன் இல்ல. டேய் சக்ரபாணி! நீ கிரேட் கிரிமினல் லோயர் என்கிறதை நிரூபிச்சிட்டே. சட்டம் என்னைத் தண்டிக்கலாம். ஒரு நிரபராதிய குற்றவாளியாக்குன உன்னை

தெய்வம் தண்டிக்காம விடாது. நான் தூக்குல தொங்குறதுக்கு முன்னால எனக்கு ஒரே ஒரு நிமிஷம் அவகாசம் கிடைச்சாலும் உன் ரத்தத்தை குடிக்காம விடமாட்டேண்டா.... இது சத்தியம்.

சண்முகம் : (சௌமியாவிடம்) நீதிமன்றத்தை விட்டு வெளியே வர்றாரு சக்ரபாணி... எல்லா வழக்கறிஞர்களும் அவரை ஏகமனதாக பாராட்டுறாங்க....

சக்ரபாணியாக சண்முகம் : கடவுள் என்னைத் தண்டிக்கப்போறாராம்... (ஏளனமாக சிரிக்கிறார்) கடவுள்... எனக்கு நான் தான் கடவுள், சட்டப் புத்தகங்கள் தான் என் வேதம் அந்தப் பைத்தியக்காரனுக்கு என்ன தெரியும். (ஒவ்வொருவராக கைலாகு கொடுக்கிறார்கள்) தேங்க்யூ.... தேங்க்யூ... தேங்க்யூ..... அங்க பாருங்க.... நம்ம எதிர்தரப்பு வக்கீல் மூஞ்சை 'உம்'முன்னு வைச்சிகிட்டிருக்காரு... இதுவரையில என்னை ஜெயிச்சவன் யாரு இருக்கா...? நோ...நெவர்.... (இன்னொருவர் பாராட்டுகிறார்) நன்றி... ஊம்... பேர்பெக்ட்லி கரெக்ட்! அங்க பாருங்க.... ரெண்டு மொட்டைத் தலை என்னப்பத்தி ஏதோ முணுமுணுக்குது. நான் என்ன செய்ய முடியும்...? தன் கட்சிக்காரரை நியாயப் படுத்துறதுக்கு காரணங்களை கண்டு பிடிக்கனுமே தவிர, நீதி நேர்மைகளை கண்டுக்க கூடாது. அதுதான் ஒரு வழக்கறிஞனோட தர்மம். ஏம் ஐ கரெக்ட் ஓர் நொட்? மன்னிக்கனும் இப்போ எனக்குக் கொஞ்சம் ரிலெக்ஸ் தேவை.

சண்முகத்தின் : சக்ரபாணி இப்போ என்ன பண்ணுறார்னா... வெற்றிப்புன்னகையோட வீட்டுக்கு வர்றாரு... ரேடியோவைப் போடுறாரு...
(சண்முகம் ரேடியோவை போடுவதுபோல் பாவனை)

வானொலியில் : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக ரவிசங்கரின் சிதார் இசையை கேட்கலாம்....
(பின்னணியில் சித்தார் இசை ஒலிக்கிறது)

சக்ரபாணியாக சண்முகம் : (தனது உடைகளை கலைந்தவாறு) இன்னைக்கு நீ கோட்டுக்கு வந்திருக்கனுமே....... திருவிழா பார்க்க வந்த மாதிரி 'லொட் ஒப் கிரவ்ட்' ஜட்ஜ்மெண்ட கேட்டதும்.... 'சக்ரபாணி இஸ் த கிரேட்டஸ்ட் லோயர் இன்த வேர்ல்ட்' அப்படீன்னு ஒவ்வொருத்தரும் மூலைக்கு மூலை நிண்டு மூக்குல வெரல வைச்சி பேச ஆரம்பிச்சிட்டாங்க. என்ன அப்படிப் பார்க்குறே... திருஷ்டி பரிகாரம் பண்ணனும்னா இந்த சாஸ்திர சம்பிரதாயங்கள்ல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்ல. என் ஒரே நம்பிக்கை என் டெலன்ட் தான். ஜட்ஜ்மென்ட்ட கேட்டதும் கூட்டுக்குள்ள நின்னுகிட்டு அந்த மதன்குமார் என்ன மாதிரி கத்துனான் தெரியுமா... கடவுள் என்னை தண்டிக்க போறாராம். ஒரேஒரு நிமிஷம் டைம் கிடைச்சுதுன்னா. அவனே தண்டிச்சிடுவானாம். என்னை என்னான்னு நெனச்சுகிட்டான். 'இன்ட்டர் நேஷனல் பூல்'

வானொலியில் : ஒரு விசேட அறிவித்தல் கொலைக்குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட மதன்குமார் என்ற கைதி சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் தப்பிவிட்டார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தால் அருகில் உள்ள போலீஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். விசேட அறிவித்தல் கேட்டீர்கள். மீண்டும் சித்தார் இசை....

சக்ரபாணி : (முகத்தில் கலவரம்) வாட் அவன் தப்பிட்டானா....? "டேய் சக்ரபாணி! உன் ரத்தத்தை குடிக்காம விடமாட்டேன்டா....?" அப்படீன்னு சொன்னானே... அதுக்காகத்தான் தப்பிட்டானா... போறதே போறோம் இவனையும் கையோட கூட்டிக்கிட்டு போயிருவோம்னு நினைச்சிட்டானா... அப்படீன்னா.... இதுதான் என் லைப் ஸ்டோரியில கடைசிப் பக்கமா...... (தன்னை மறந்து) ஓ மை கோட்! கோட்.... என்ன இது... என் வாயில என்னைக்கும் வராத வார்த்தை இன்னைக்கு வருதே... எனக்கும் மேல ஒருத்தன் இருக்கிறது உண்மைதானா...? அது உண்மையின்னா... அவன்

சட்டத்துக்கு முன்னால மனித சட்டங்கள் எல்லாம் செல்லுபடியாகாதோ? நீதிபதிகளுக்கு எல்லாம் பெரிய நீதிபதி அவன் தானா...? புள்ளையாரப்பா... முதல் தடவையா ஒங்கிட்ட ஒரு ரிக்குவெஸ்ட்! இன்னும் நான் சாதிக்க வேண்டியது நெறைய இருக்கு. உன்னை கையெடுத்துக் கும்பிட்டு கேட்டுகிர்றேன். அவன்கிட்ட இருந்து என்னைக் காப்பாற்று... (அழுகை) ஒருநாளும் இல்லாம இன்னைக்கு ஏன் நான் தனியா புலம்பிகிட்ருக்கேன். என் வாதத்திறமையால எத்தனையோ பேரை புலம்ப வைச்ச பாவத்துக்கு இப்போ நான் புலம்புறேனா. (திடீரென உரக்க) ஏன் வாசல் கதவெல்லாம் திறந்திருக்கு... நேரா உள்ள வந்து சுலபமா என் கதைய முடிச்சிர்றதுக்கா.... 'குளோஸ் த டோர்'... எல்லா ஜன்னலையும் இழுத்து மூடி ஒழுங்கா தாழ்ப்பாள் போடு.... இனி எப்படி அவன் உள்ள வரமுடியும்... (ஒரு ஓடு உடைந்து விழுகிறது) முருகா...! (பயத்தோடு) என்னைக் காப்பாற்று... நான் இல்ல... நான் இல்ல... என்னை விட்டுரு..என்னை வி...ட்... ஓடு உடைஞ்சி விழுந்திருக்கு.... ஆ... (கூரையைப் பார்கிறான்) ஓட்டுக் கூரையப் பிரிச்சி உள்ள வரப்போறானா.... (வீராப்போடு) வந்திடுவானா... வரவிட்டுருவேனா.... (துப்பாக்கியை எடுப்பது போல் பாவனை....) இந்தத் துப்பாக்கியால சூட் பண்ணிற மாட்டேன்... (வெளியில் நாய்குரைக்கும் சப்தம்) என் அல்சேஷன் குரைக்கிது.... என் கம்பௌன்டுக் குள்ளேயே வந்துட்டானா...? எங்கேயாவது ஒரு இடத்தில் பதுங்கி இருந்து.... நான் வெளியே கிளம்புறப்போ... என்னை குளோஸ் பண்ணிறலாம்னு திட்டம் போட்டுட்டான் போலருக்கு.... (மெதுவாக சிரித்துக் கொண்டே) டேய் மதன்! நான் ஒரு தங்க நரிடா.... இப்பவே... ஐ.ஜீ.பீக்கு போன் பண்ணி.... போலீஸ் படையையே கொண்டு வந்து இறக்கி இந்த பங்களாவையே சுற்றி காவல் போட்டுர்றேன் பாரு... உன் 'செப்டரையே' குளோஸ் பண்ண வைக்கல்ல.... (ரீஸீவரை எடுத்து டயல் பண்ணுவது போல் பாவனை)

ஹலோ! ஐ ஏம் கிரேட் கிரிமினல் லோயர் சக்ரபாணி ஸ்பீக்கிங்... இமீடியெட்டா ரெண்டு டிரெக்ல போலீஸ் காரங்களை அனுப்பி வைக்க.... வாட்...? ஆப் என் அவர் டைம்மா.... அப்போ நான் டிபென்ட்ஸ் மினிஸ்டரோட பேசிக்கிர்றேன்.... என்னது அஞ்சு நிமிஷத்துலேயா....? ஐ டோன் வோன்ட் எனி எக்ஸ்பிளனேசன்.... என்னோட டெலன்ட் இந்த உலகத்துக்கு தெரியனும் தெட்ஸ்.... ஆ....ல்...ஆ.... (இரத்த வாந்தி எடுக்கிறான்)

(பேச்சு மூச்சற்று ஆடாமல் அசையாமல் இருக்கிறான்.... சண்முகம்... கையைத் தட்டிக் கொண்டு அவன் அருகில் வருகிறாள் சௌமியா)

சௌமியா : இந்த நடிப்பைப் பார்த்து எம்புட்டு நாளாச்சு.... உங்களோட நடிக்கிறதுக்கு இனி ஒரு பய பொறந்துதான் வரனும்... எந்திரிச்சி வாங்க.... சாப்புடுவோம்... அடுத்த வீட்டுல இருந்து புளிச்சாதம் அனுப்பி இருக்காங்க..... இன்னும் ஏன் உட்கார்ந்துகிட்டு இருக்கீங்க.... ஓ.... இது ஏமாத்தற நடிப்பா.... எந்திரிச்சி... வாங்கன்னா...

(சண்முகம் உயிரற்ற உடலாக நிலத்தில் சாய்கிறான்... சௌமியா அதிர்ச்சி அடைகிறாள். நாடிப்பிடித்துப் பார்க்கிறாள். மூக்கிலே கை வைக்கிறாள். அவனது மூச்சு அடங்கி விட்டதை உணர்கிறாள்)

சௌமியா : உண்மையாவே நடிச்சீட்டீங்களா....?
(அவனது கால் கைகளை நேராக்கி வைக்கிறாள்)
பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கனும்னு சொல்வாங்களே.... அது இதுதானா....?
(அவருக்குக் கிடைத்த பொன்னாடைகளை எடுத்து வந்து போர்த்துகிறாள்)
உங்க நடிப்புக்கு முன்னால இந்தப் பரிசுகள் எல்லாம் வெறும் தூசு....

(பரிசுப் பொருட்களை அவன் காலடியில் கொண்டு வந்து வைக்கிறாள்.)

சௌமியா : ஐயா கலாஜோதி.... ஏன்யா பேசாம இருக்கீங்க.... என் ராசா.... எல்லா நடிகர்களையும் ஜெயிச்சிட்டு ஏன்யா எமன்கிட்ட தோத்துப் போயிட்டே.... ஊம்...

('வீல்' எனக் கத்துகிறாள். அவன் மார்பில் முகம் புதைத்து அழுகிறாள்

சௌனாய் இசை சோகமாய் ஒலிக்கிறது முழங்காலில் முகவாய்க்கட்டை வைத்து மௌனமாக அமர்ந்திருக்கிறாள் சௌமியா.... சிறிது அமைதி.... அயலவர்கள் உள்ளே வருவதை பார்த்து.......)

(சனங்கள் வருவதுபோன்ற நிழல் உருவங்கள் சைக்கராமாவில் தெரிகிறது)

**சௌமியா** : இருக்கிறபோது ஒருத்தருமே இந்தப் பக்கம் வரல்ல... இப்போ எல்லோரும் ஒன்னு சேர்ந்து வந்துட்டீங்களா... வாங்க.... (சண்முகத்தைப் பார்த்து) பாவங்களை கக்குன கண்களை ஏன் மூடிட்டே.... அபிநயங்களை அரங்கேற்றுன அங்கங்களை ஏன் ஆடாம அசையாம வைச்சிருக்கே.... வசனங்களை உணர்ச்சிகரமா பேசுன வாயை ஏன் மூடிக்கிட்டு இருக்கே.... பேசு...பேசு..பேசுங்க என் ராசா... (அழுகை) சக்கரவர்த்தி.... சக்கரவர்த்தின்னு சொல்வியே.... ஒரு சக்களத்திய விட மோசமான சாவை உன்னால சாகடிக்க முடியல்லியா... சத்தியக் கலைஞன்... சத்தியக் கலைஞன்னு சொல்லிகிட்டிருப்பியே.... அந்த சத்தியத்துக்கு சாவை சாகடிக்கிற சக்தி இல்லாமப் போச்சா... என் தங்கராசா... ஐயா... இன்னும் மன்னவன் போலத்தானே இருக்கீங்க.... (அழுகை) மனுஷன் இருக்கிற வரைக்கும் தான் நிம்மதிய கொடுக்கல்ல... இப்போ ஒரேடியா நிம்மதிய இல்லாம ஆக்கிட்டியே... ஒரு நாள் ஒரு பொழுது ஒரு முழம் பூ வாங்கி கொடுத்திருக்க மாட்டியே.... இப்போ என் பூவோட சேர்த்து என் பொட்டையும் பறிச்சிகிட்டு போறியே.... விதம் விதமா உடுத்து அழகு பார்க்க முடியலேன்னா என்னை வெள்ளைப் பொடவைய கட்ட வைச்சுட்டே... ஏன் என்னை மூலியாக்கிட்ட சொல்லு.... சொல்லய்யா... ஐயாசாமி... என்னைக்கும் நீ எனக்கு தெய்வம்தான்யா.... (அழுகிறாள்) என்னை விட்டுட்டு போகாதே ஐயா... என் ராசா... நீங்க சாகல்ல... இந்த கலை உலகத்துல கடைசி ஒரு கலைஞன் இருக்கிற வரைக்கும் உங்களுக்கு சாவே கிடையாது.

(சௌமியா குமுறிக் குமுறிக் அழுகிறாள்)

திரை மெதுவாக மூடுகிறது

# காட்சி: பதினைந்து

இடம் : விழாக்கூடம்

நேரம் : மாலை

(பேச்சாளர் இரா செழியன் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்)

இரா. செழியன் : சபையோர்களே! ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அந்தக் கலைத்தீபம் கவனிப்பாரற்று அணைந்துவிட்டது கண்ணீருக்குரியது. அந்தக் கலைக் கோபுரம் வாழ்ந்த குடிசையின் தலை வாசலைக்கூட கடைசிக் காலத்தில் யாரும் எட்டிப் பார்க்கவில்லை. அவர் பாதங்களின் பாதைகளை சேகரித்தவர்கள் பல்கலைக்கழக பட்டங்களை வெறும் தூசாக மதிக்கிறார்கள். டாக்டர் பட்டம் பெறுவதற்காகக்கூட அவரது ஆற்றல்கள் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆனால் அந்தக் கலைத்தியாகி வாழ்ந்த காலகட்டத்தில் கலாசார அமைப்புகள், நிறுவனங்கள் கூட அன்னாரின் திறமைக்கு உரிய மதிப்பளிக்கவில்லை. உயர்ந்த இடமும் கொடுக்கவில்லை. செயற்கை விருதுகள் கூட அவரை விலக்கி வைத்தது. குடியிருப்பு மனைகள் – நிதி ஒதுக்கீடுகள் – மங்கள, அமங்கல நிகழ்வுகளுக்கான மான்யங்கள்... இன்னோரன்ன வசதிகள் சலுகைகள் யார் யாருக்கெல்லாமோ கிடைத்தது. இவைகளைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டாரே தவிரே, "ஏன் என்னை மறந்துவிட்டீர்கள் என்று கேட்கவில்லை." ஏனிந்த பாரபட்சம் என்று ஓரிரு துணிவான குரல்களும் ஒலிக்கத்தான் செய்தது. அதற்கு பதிலாக அவரது குறைகளை விமர்சித்த சிறுமதியாளர்கள் – அவரது பங்களிப்புக்குரிய வெகுமதிகளை கொடுக்க முனையவில்லை. அவரின் சீரழிவுகளை சந்து முனையில் சிந்து பாடினார்களே தவிர – அவரின் சீரழிவுக்கான காரணங்களை சீர்தூக்கிப் பார்த்து

சிறப்புறச் செய்வது பற்றி சிந்திக்கவில்லை. இன்றுவரை எங்காவது ஓரிடத்தில் அவரது ஞாபகார்த்தமாக ஒரு புகைப்படத்தை தொங்கவிட்டார்களா என்றால் அதுகூட இல்லை; அதற்கான சிபாரிசும் இல்லை. கலைஞர்களின் சமூகப் பார்வை ஆரோக்கியமான அளவுக்கு சமூகத்தின் கலைப் பார்வை ஆரோக்கியமானதாக இல்லை! கலைஞன் மென்மையானவன். பலஹீனமானவன். ஏற்றிப்போற்றப்பட வேண்டிய ஒரு கலைஞனை ஏறெடுத்தும் பார்க்காது போனால் அவன் ஏளனத்துக்கே ஆளாக வேண்டி வரும். வாயளவில் வாக்குறுதிகளை நீட்டிக் கொண்டும் பெயரளவில் திட்டங்களைத் தீட்டிக்கொண்டும் இருப்பவர்களே – இந்த அவலங்களுக்கு பொறுப்புதாரிகள். ஒரு கலாஜோதிக்கே இது தான் கதி என்றால் – தமிழ் கலைத்துறையில் காலடி வைக்கும் கடைசிக் கலைஞனுக்கும் இதுதான் விதி. இன்னும் ஒன்றையும் குறிப்பிட வேண்டும். பலர் இன்றும் கலையால் வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். கலை மட்டும் இன்னும் இவரால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. என்பது உண்மை; சத்தியம்! நாட்டுக்கு நாடு தேசியக் கொடிகள் வேறுபட்டு இருக்கும். ஆனால் கலை உலகம் முழுவதற்கும் இவர் ஒருவரே தேசியக்கொடி. இந்தக் கொடிக்கு வணக்கம் செலுத்துவதற்கு கலைஞர்கள் காலம் முழுவதும் கடமைப் பட்டுள்ளார்கள். அதனால்தான் அவரது நினை வாஞ்சலியை நடாத்தி அதில் பங்கேற்க – அவரது துணைவியாருக்கும் அழைப்பு விடுத்து... அந்த அம்மாளுக்கு பரிசும் – பாராட்டும் – பொற்கிழியும் வழங்க... இந்தக் கலைஞர் நற்பணி மன்றத்தினர் ஏற்பாடு செய்து உள்ளார்கள் ஆகவே... இப்போது கலைப்பேரொளி சௌமியா சண்முகம் அம்மையார் அவர்களை மேடைக்கு வரும்படி அன்போடு அழைக்கிறேன்...

(தலை முழுவது நரை – வெள்ளை உடை..... இந்தக் கோலத்தில் செயமியா தளர்ந்த நடையோடு மேடைக்கு வருகிறாள். சபை முழுவதும் ஒரே கைத்தட்டல் நடிகர் சந்திரன் பரிசுப் பொருட்களை மேடையில் கொண்டுவந்து வைக்கிறார் செந்தில்நாதனும் மேடைக்கு வருகிறார்)

சௌமியா : ஐயா! ரெண்டொரு வார்த்தை பேசுறதுக்கு எனக்கு அனுமதி தர்றீங்களா....?

செந்தில்நாதன் : இரண்டொரு வார்த்தை என்ன, இரண்டு மணிநேரம் நீங்க பேசினாலும் கேக்குறதுக்கு நாங்க தயாரா இருக்கோம்.... தாராளமாப் பேசுங்க...
(சௌமியா ஒலிவாங்கிக்கு முன்னால் வருகிறாள்)

சௌமியா : எல்லாருக்கும் வணக்கம். ஒன்பது வயசுல பாடுறதுக்காக கலையுலகத்துல காலடி வைச்சேன். பாடுறதுக்கு வந்த என்னை– ஏன்கிட்ட உள்ள பாவங்களைப் பார்த்து ஆடுறதுக்கும், நடிக்கிறதுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தாங்க. பத்தொன்பது வயசு ஆகிறதுக்குள்ள நிறைய அனுபவங்கள். கலைப் பேரொளிங்கிற பட்டம் வேற... அதை விவரிக்கிற துக்காக நான் இங்க வரல்ல... ஆனா... ஒன்னு... அவரோட திறமையில மயங்கி... நானாகவே என்னை அவருக்கு அர்பணிச்சேன். அவர் வாழ்க்கையில மட்டும் பங்கு போடல்ல... வறுமையிலேயும் பங்கெடுத்துக்கிட்டேன். அந்த நேரத்துலேயும்... வாய்ப்புகள் வரிசையா வந்து எங்க வீட்டு வாசல்ல தவங்கிடந்தது. என் ஒருத்தியோட வரவுக்காக மட்டும். என் கணவரோட பாதம் பதியாத மேடைகள்ல... சலங்கை கட்டிக் கொள்றதுக்கு என் கால்கள் சம்மதிக்கல்ல. கலாஜோதியும் கலைப் பேரொளியும் கலையுலகத்தின் ரெண்டு கண்கள்னு யார்யாரெல்லாம் சொன்னாங்களோ.... அவுங்களோட கடைக்கண் பார்வைக்கூட எங்கமேலே படல்ல. அப்புறம் உடுத்து மாத்துறதுக்கு ஒரு உடையில்லாமப் போச்சு; இருக்க ஒரு இடமில்லாமப் போச்சு... ஒரு வேளை சாப்பாட்டுக்கே

துந்தனா... இந்த வயசுல பேசக்கூடாத ஒன்னு.... வெட்கத்தைவிட்டுச் சொல்றேன்... இந்த நெலமையில என் கணவரோட ராப்பசிக்கு தீனி போடுறதுக்குக் கூட நான் ஒத்துக்கல்ல... பசியோட என் பிள்ளைங்க பக்கத்துல படுத்திருக்கிறப்போ என்னால எப்படி இடம் கொடுக்க முடியும்... இப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்த மனுஷனுக்குத்தான் விரக்தி வராது...? என் புருஷனுக்கும் விரக்தி வந்தது. அவர் மேலேயே அவருக்கு வெறுப்பு... ஒரு கலைஞனுக்கு வாழ்க்கைப் பட்டோம்ங்கிறதைத் தவிர... நானும் வேறெந்த சுகத்தையும் காணல்ல. அதனால்தான் அவரு தறிகெட்டு, நெறிகெட்டு திரிஞ்சாரு. அதுக்காக என் தாலிய கழட்டிக் கொடுத்துட்டு. அவரை விட்டுட்டு நான் ஓடிப்போயிடல்ல. அவர் கண்ணை மூடுற வரைக்கும் அவர் காலடியிலேயே கெடெந்தேன். இந்த உண்மைகளை ஒருநாள்... இந்த உலகத்துக்கு சொல்லனும்னு நெனைச்சேன். சொல்லிட்டேன். இப்போ என் மனசுல உள்ள பாரம் கொறைஞ்சிட்டுது. (பெருமூச்சு) அதுபோகட்டும்! தண் திறமைகளை மேடையில குவிச்ச கலாஜோதிக்கு அஞ்சலி செலுத்திக் கிட்டிருக்கிற நாங்க... கலையின் ஜோதியே அணைஞ்சிகிட்டிருக்கிறதைப் பத்தித் தான் யோசிக்கனும். தமிழ் பேசும் கலைஞர்களுக்கு எதிர்காலமே இல்லே... அப்படீங்கிற நிலை உருவாகிட்டுது. அதுக்குக் காரணம் வாழ்ந்த காலத்துல உதவி இல்லே. ஒத்தாசை இல்லே... திறமைக்கு உரிய கௌரவம் கூட இல்லே... அப்படி இருக்கிறப்போ... செத்த பிணத்துக்கு சங்கீதம் பாடி என்ன நடக்கப் போகுது...? ஒன்னுமே நடக்காது! பிறகு எதுக்காக இறந்து போனவர் நினைவா பரிசும்... பாராட்டும்.... அன்பளிப்பும்....? (சற்று ஆத்திரத்துடன்) யாருக்கு வேணும் இந்தப் பரிசு....? எதுக்கு வேணும் இந்தப் பாராட்டு....? ஏன் வேணும் இந்தப் பொற்கிழியும் பொன்னாடையும். தேவை இல்ல..... தேவை இல்ல...... தேவை இல்ல......

(எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு குமுறிக் குமுறி அழுகிறாள். எல்லோரும் வாயடைத்து நிற்கிறார்கள்)

சௌமியா : (அமைதியாக – சபையோரைப் பார்த்து) நீங்களே சொல்லுங்க. இவைகள் எல்லாம் இறந்துபோன என் கணவருக்கு உயிர்கொடுக்க போகுதா...? இல்ல இறந்துகிட்டிருக்க கலைஞர்களை பொழைக்க வைக்கப் போகுதா...? இதுகளை கை நீட்டி வாங்குனா அந்தக் கலாஜோதியின் ஆத்மா என்னை சபிக்கும்... உங்க எல்லாருக்கும் நன்றி. நாளைக்கு நான் என் மகனோட இந்தியாவுக்குப் போறேன். இனி எனக்கு எந்தக் கவலையும் இல்ல. நான் வர்றேன்.
(சற்று தூரம் போய் திரும்பிப் பார்க்கிறாள்) கடைசியா ஒன்னு சொல்லிட்டுப் போறேன். காதுகளை நல்லாத் தீட்டிக் கேளுங்க.... இனி மேலாவது கலைஞர்களை வாழவைக்கிறதுக்காக வகையான திட்டம் தீட்டுங்க முறையான கூட்டம் போடுங்க. துணிவான கோஷம் எழுப்புங்க..... அப்படி இல்லேன்னா...
மேடையே ஒரு பாடையாகிடும்...

(நடிகர் சந்திரன் தன் இரு கைகளால் கண்களைப் பொத்திக் கொள்கிறான்)

சௌமியா : பொன்னாடையில எல்லாம் பிணவாடைதான் வீசும்...

(கலாபிமானி செந்தில்நாதன் தன் காதுகளை பொத்திக் கொள்கிறார்)

சௌமியா : அதனால... சாபங்களை வரமாக்க சபதம் எடுங்க....

(பேச்சாளர் செழியன் தன் இரு கைகளாலும் வாயை மூடுகிறார்)

சௌமியா : வணக்கம்

(சௌமியா போய்க் கொண்டிருக்கிறாள்)

– முற்றும் –

# புரவலர் புத்தகப் பூங்கா
# நிர்வாகக் குழு

1. புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் (ஸ்தாபகர்)
2. கலைஞர் கலைச்செல்வன் (செயலாளர்)
3. டாக்டர் தி. ஞானசேகரன் (பதிப்பாசிரியர்)
4. சமூகஜோதி. எம். ஏ. றபீக்
5. கவிஞர் என். நஜ்முல் ஹுஸைசன்
6. திருமதி ஞானம் ஞானசேகரன்
7. திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைசன்

# புரவலர் புத்தகப் பூங்கா
# வெளியிட்ட நூல்கள்

| இல | நூல்கள் | ஆசிரியர் | வெளியீடு |
|---|---|---|---|
| 1. | பீலிக்கரை (சிறுகதைகள்) | பிரமிளா செல்வராஜா | ஆகஸ்ட் 2007 |
| 2. | கனலாய் எரிகிறது (கவிதைகள்) | கே.எம்.ஏ. அஸீஸ் | செப்டம்பர் 2007 |
| 3. | சலங்கையின் நாதம் (வரலாற்று நாடகம்) | கலைஞர் எம். உதயகுமார் | ஒக்டோபர் 2007 |
| 4. | தேன்கூடு (பாலர் கவிதைகள்) | கல்லொளுவை பாரிஸ் | நவம்பர் 2007 |
| 5. | மைவிழிப் பார்வையில் (மாதர் கட்டுரைகள்) | ஷாமலா ஸ்டீவன் | டிசம்பர் 2008 |
| 6. | நான் நீ கடவுள் (உருவகக் கதைகள்) | கலை அமுதன் எம்.ஸீ.எம். இக்பால் | ஜனவரி 2008 |
| 7. | ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும் (சிறுகதைகள்) | சிவனு மனோஹரன் | பெப்ரவரி 2008 |
| 8. | ரயிலுக்கு நேரமாச்சு (சிறுகதைகள்) | கவிப்பியா நிஷா | மார்ச் 2008 |
| 9. | விழிகள் சுவாசிக்கும் இரவுகள் (சிறுகதைகள்) | ஏ. எம். எம். ஜாபீர் | ஏப்ரல் 2008 |
| 10. | தடயங்கள் (கவிதைகள்) | மருதூர் ஜமால்தீன் | மே 2008 |
| 11. | புதிய கதவுகள் (சிறுகதைகள்) | மாரி. மகேந்திரன் | யூன் 2008 |
| 12. | ஒரு கலைஞனின் கதை (நாடகம்) | கலைஞர் கலைச்செல்வன் | ஆகஸ்ட் 2008 |



# ஒரு
# போராளிக் கலைஞன்!

இலங்கைத் தலைநகரில் அரை நூற்றாண்டு காலம் கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் ஒரே கலைஞர் கலைச் செல்வன் அவர்கள் தான். இன்றும் வானொலி, மேடை நாடகம், சினிமா, சின்னத்திரை என எழுதி, நடித்து, இயக்கிக் கொண்டிருப்பவர்.

உள்ளூர்த் தயாரிப்பான அமரர். வி.பி. கணேஷனின் "நான் உங்கள் தோழன்" எனும், தமிழ்ப் படத்தின் திரைக்கதை வசனத்தை எழுதியுள்ள இவரது "சிவப்பு நிறத்தில் ஒரு பச்சைக் கிளி" என்ற சினிமாப் பிரதி, இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைப்படப் பிரதியாக்கப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுகதை, சித்திரம், ஊடுருவல், கதம்பம், நாடகம் என வானொலிக்குப் பல ஆக்கங்களைப் படைத்துள்ள இவர், பதினைந்துக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நாடகங்களையும் கவிதை சிறுகதை நாடக நூல்களில் அர்த்தபுஷ்டியாக அணிந்துரைகளையும் எழுதியுள்ளதோடு, விடிவு சூரியன், கதிரவன் போன்ற சிற்றேடுகளின் ஆசிரியராகவும் பணியாற்றி ஒரு பல்கலைச் செல்வனாக பரிணமிக்கிறார்.

இருபதுக்கு மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதியுள்ள போதிலும், அவை ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. சுய ஆக்கங்களில் அதிகமாகப் பேசப்படும் ஆற்றுகை கலைஞர் கலைச்செல்வனின் "சிறுக்கியும் பொறுக்கியும்" - தான். அரங்குக்கு அரசியல் பேசக்கற்றுக் கொடுத்த நாடகமென பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் இன்றும் இந்நாடகத்தை விதந்துரைக்கிறார்கள்.

கலைச் செல்வன் அவர்களின் எழுத்திலும் பேச்சிலும் உள்ள தமிழ் நடை ஒரு தனிநடை. சந்தம் சங்கீதமாய் ஒலிக்கும் சிங்காரநடை.

ஒரு கலைஞனின் கதை நாடக நூலின் மூலம் இக் கலைஞன் முதன் முறையாக ஒரு நூலாசிரியராக முழு வீச்சோடு எழுந்திருக்கிறார். அவரது எழுத்தாற்றல் முழுமையாக வெளிப்பட்டு நூல்வடிவில் வியாபித்து நிற்கிறது.

கலைஞர்களின் அப்பட்டமான வாழ்வை அரங்குக்குக் துணிந்து அறிமுகப்படுத்தியுள்ள இப் படைப்பாளி பாராட்டுக்குரியவர்,

பொன்விழாக் கலைஞர் மட்டுமல்ல; ஒரு போராளிக் கலைஞனும் கூட!

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD,, COLOMBO 13. TEL: 2330195

ஞானம் பதிப்பகம்

Oru Kalaignanin Kathai
ISBN 978-955-8354-27-8